மஞ்சரி

விஜய - ஆடி
ஜூலை, 1953

ஸினிமா உலகில் புரட்சி
பெண்களின் மனநோய்
மூளைக் கடிகாரம்
பாழடைந்த ஊர் (சிறு கதை)
வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்
(புத்தகச் சுருக்கம்)

-6-
அணா

கடவுள் யார் பக்கம்?

புத்திமான்களின் எண்ணிக்கை எப்போதுமே குறைவு. அது வளர்கிறது, உண்மை. ஆனால், மூடர்களின் எண்ணிக்கையோடு அந்த வளர்ச்சியை ஒப்பிட்டால், அது மகா அற்பம். இப்படியிருந்தும், கடவுள் எப்போதும் பெரிய பட்டாளங்களின் பக்கமே இருக்கிறாராமே! என்ன துர்ப்பாக்கியம்!

—வால்டேர்

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
சீதா தேவி
கௌரி அம்மாள்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] விஜய-ஆடி :: :: ஜூலை 1953 [இதழ் 8

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

பிரிட்டனில் இரண்டாம் எலிஜபெத் ராணிக்கு, போன மாதம் (ஜூன்) இரண்டாம் தேதி மகா விமரிசையாக மகுடாபிஷேகம் நடந்தது. இதே சமயத்தில், நியூஜீலந்து நாட்டு இ. பி. ஹிலாரி, நேப்பாளியும் குடியேறிய இந்தியப் பிரஜையுமான ஷெர்ப்பா டென்ஸிங் இரண்டு பேரும் எவரெஸ்ட் மலைச்சிகரத்தில் ஏறிக் கொடி நாட்டி விட்டார்கள். இந்த வெற்றிச் செய்தியை முதல் முதலில் ராணியே கேட்கவேண்டும் என்று எற்பாடாகியிருந்ததாக முன்னதாகவே செய்தி வந்தது. ஆனால், மகுடாபிஷேகத்துக்கு இரண்டொரு நாள் முன்னதாக இந்த வெற்றி நிகழ்ந்தது முற்றும் திட்டமிட்டு நிகழ்ந்த மனித சாத்தியமான நிகழ்ச்சி என்று சொல்லிவிட முடியாது. இதறகுத் தெய்வாதீனமும் சேர்ந்துகொண்டது என்றே சொல்லவேண்டும். எவரெஸ்ட் வீரர்சள் என்றென்றும் பாராட்டத் தக்கவர்கள். இரண்டாம் எலிஜபெத் ராணியின் ஆட்சிக்காலம் பிரிட்டனுக்கும் காமன்வெல்த்துக்கும் உலகத்துக்குமே பொற்காலமாக விளங்க வேண்டும்.

காமன்வெல்த்துக்குள் இந்தியா இருப்பதைச் சிலர் ஆட்சேபித்தார்கள்; இன்னுங்கூட ஆட்சேபிப்பவர் இருக்கலாம். ஆனால், காமன்வெல்த்தில் இருப்பதால் உலகத்துக்கே நலம் பயக்கும் சில காரியங்களில் இந்தியா தன் செல்வாக்கைச் சிறப்பாகவும் திறமையாகவும் உபயோகிக்க முடிகிறது என்பதைப் பண்டித நேரு நிரூபித்து வருகிறார். சர்ச்சில், நேரு இருவரையும் சரி சமமாக லார்டு ஸ்விண்டன், ஸர் வால்டர் மங்டன் போன்ற பிரிட்டிஷ் பிரமுகர்களெல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாட்டில் நேருவின் செல்வாக்கே ஓங்கியிருர்திருக்கிறது என்பது பல சான்றுகளால் தெள்ளத் தெளியப் புலனாகிறது. இர்தியா சர்வ சுதந்தரக் குடியரசு, பிரிட்டிஷ் ராணிக்கு ராஜவிசுவாசம் செலுத்துவதல்ல என்ற நிலைக்குச் சிறிதுகூடப் பங்கமில்லாதபடி நடந்துகொண்டே, மகுடாபிஷேக விழாக்களில் நேரு கலந்துகொண்டது போற்றத் தக்க விஷயம். ஒற்றுமையாக, நடுநிலை வழுவாமல், நியாயத்துக்கு

ஊறில்லாமல் உலக சமாதானத்தை நிலை நாட்டப் பாடுபடுகிற மிகச் சில உலக உத்தமர்களில் ஈடு இணையற்ற தனிச் சிறப்பை நேரு பெற்று விட்டார். அதற்கு நாம் பெருமை அடைய வேண்டும்.

* * *

கொரியாவில் கம்யூனிஸ்டுகளுக்கும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கும் யுத்தக் கைதிகள் பரிவர்த்தனை விஷயமாக ஓர் உடன்பாடு ஏற்பட்ட நல்ல செய்தியைக் கேட்டோம். உடனே தென் கொரியக் குடியரசின் தலைவர், ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தை உடனிருந்து காலை வாரி விட்டுவிட்டார். யாரையும் கேட்காமலும் சூழ்ச்சியாகவும் கம்யூனிஸ்ட் அல்லாத வட கொரியக் கைதிகளை அவர் விடுவித்தது, சர்ச்சிலே கூறுவதுபோல் பெரிய துரோகச் செயலாகும். கொரியாவில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமே தென் கொரியாவுக்குச் சாதகமாய்ப் போரிடுகிறதென்றாலும், அதில் முக்கிய பங்கு வகிப்பவர் ஐக்கிய அமெரிக்கர்தான். டாக்டர் ரீ மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அவரை அடக்கி வைப்பது ஐக்கிய அமெரிக்காவின் கடமை. அது சாத்தியப்படவில்லை என்றால், அவரை ஆற்றோடு போக ஐ. நா. ஸ்தாபனம் விட்டுவிடவேண்டியது தான். டாக்டர் ரீ, சியாங்-கே-ஷேக் இவர்களையெல்லாம் காப்பாற்றுவதற்காக உலக சமாதானத்தைப் பலி கொடுப்பது சற்றும் நியாயமாகாது; அறிவுடைமையும் அல்ல.

சென்ற மாதம் தென்னாட்டில் இரண்டு பெரிய விபத்துக்கள் நேர்ந்தன. ஒன்று, தர்மாவரத்துக்கு ஐந்து மைல் தூரத்தில் ஒரு குட்ஸ் வண்டியும் மிக்ஸட் வண்டியும் எதிரெதிரே மோதிக்கொண்ட கோர விபத்து. மற்றது, சென்னையிலும் வேறு இடங்களிலும் ஏராளமான செம்படவர்கள் கட்டுமரங்களோடு நடுக்கடலில் சிக்கிக்கொண்ட விபத்து. ரெயில் விபத்தில் 70 பேருக்குமேல் மாண்டு விட்டார்கள்; பலருக்குக் காயம். துன்புற்றவருக்கு நமது மனப்பூர்வமான அநுதாபம். இந்த மாதிரி பெரிய விபத்து நேரும்போது, எவரோ ஒன்றிரண்டு பேரைப் பிடித்து வழக்கிட்டுத் தண்டிப்பதோடு மட்டும் நிற்பது போதாது. விபத்தின் சகல காரணங்களையும் நன்றாக விசாரித்து, அப்பழுக்கற்ற ஏற்பாடுகளைச் செய்ய முயல்வது சர்க்காரின் கடமை. சென்னை சர்க்கார் மிகத் துரிதமான நடவடிக்கைகள் எடுத்துச் செம்படவர் பலரைக் காப்பாற்றியது போற்றத்தக்கது. சென்னையிலும் அக்கம் பக்கத்திலும் இப்படி விபத்துக்காளான சுமார் மூந்நூறு பேர்களில் மூன்று பேரைத் தவிர மற்றவரெல்லாம் கரை சேர்ந்துவிட்டார்கள் என்று கடைசியாய்க் கிடைத்த செய்தி மகிழ்ச்சிக்குரியது. ஆனால், கடலூர், காவேரிப்பூம்பட்டினம் போன்ற வேறிடங்களில் விபத்துக்கு ஆளான செம்படவர்களில் எத்தனை பேர் மீளவில்லை என்ற விவரம் தெரிகிற வரையில், நாம் முழு மகிழ்ச்சி அடைவதற்கில்லை.

சாவு வராமல் தடுக்க இந்த உலகத்தில் ஆகாயத்திலாயினும் கடல் நடுவிலாயினும் மலைக் குகையிலாயினும் சரி, ஒளிய இடமில்லை.

—புத்தர்

பெர்முடா சந்திப்பு

★

வட அட்லாண்டிக் சமுத்திரத்தில், தென் கரோலினாவுக்குக் கிழக்கே 600 மைல் தூரத்தில் பிரிட்டனுக்குச் சொந்தமாக உள்ள சில தீவுகள் பெர்முடா. அங்கேதான் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மூன்றின் பிரதம மந்திரிகளும் சில நாளில் சந்திப்பதாக ஏற்பாடு. இந்தச் சந்திப்புப்பற்றிய யோசனை தோன்றிய வரலாறு இது.

மூன்று வல்லரசுகள் கூடி ஆலோசிப்பது அவசியமா என்பதுபற்றி ஜனாதிபதி ஐஸன்ஹோவர் முதலில கொண்டிருந்த அபிப்பிராயத்தைப் பின்னால் மாற்றிக்கொண்டார். ஏன்? மூன்று வல்லரசுகளின் உறவில் ஏதாவது நலிவு ஏற்பட்டிருப்பதே காரணமா? அப்படி ஒன்றும் இல்லை. க்ரெம்ளின் சமாதானப் ‘படையெடுப்’பில்தான் ஏதாவது மாறுதல் ஏற்பட்டு விட்டதே காரணமோ? அதுவும் இல்லை.

ஒரு நாள் பாரிஸ் நகரிலிருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தைத் தாண்டி ட்ரங்க் டெலிஃபோன் கூப்பாடு ஒன்று பரபரப்பாக ஜனாதிபதிக்கு வந்தது. அழைத்தவர் பிரெஞ்சுப் பிரதம மந்திரியான ரெனி மேயர். “என் மந்திரி சபை ஆட்டம் எடுத்துவிட்டது. மூன்று வல்லரசுச் சந்திப்பு நடந்தால், இதை விழாமல் காப்பாற்றலாம்”என்று அவர் கதறினார்.

ஐஸன்ஹோவர், ஸர் வின்ஸ்டன் சர்ச்சில், அந்தச் சமயம் யார்

மூலம்: ந்யூஸ் வீக் (ஆங்கிலம்: 1-6-’53), ந்யூ யார்க், ஐக்கிய அமெரிக்கா.

பிரெஞ்சுப் பிரதம மந்திரியாக இருக்கிறாரோ அவர் - இந்த மூவரும் பெர்முடா என்னுமிடத்தில் சந்தித்துப் பேசப் போகிறார்கள் என்ற அறிக்கையும் இதன் பலனாக மே 21-ஆம் உ வாஷிங்டன், லண்டன், பாரிஸ் மூன்று நகரங்களிலும் ஏககாலத்தில் பிறந்தது. இதுவே பெர்முடா சந்திப்பின் வரலாறு.

ஒரு புதன்கிழமை காலையில் ஆக்டிங் ஸெக்ரடரி அவ் ஸ்டேட் வால்டர் பீடெல் ஸ்மித் என்பவர், தம் காரியாலயத்துக்குள் நுழைந்ததும் தபால்களைப் பிரிக்கத் தொடங்கினாரோ இல்லையோ, அவருடைய டெலிபோன் மணி கண கண என்று அடித்தது. மறு முனையில் நின்று பேசியவர் ரெனி மேயர்தான். "நாளைக்கு நேஷனல் அஸெம்பிளியில் எழுந்து நின்று பேசப் போகிறேன். மூன்று வல்லரசுத் தலைவர்களின சந்திப்பு நடக்கவேண்டும் என்ற ஒரு யோசனையை அப்போது நான் சொல்லப் போகிறேன். ஸோவியத் யூனியனையும் அமைத்து நான்கு வல்லரசு நடத்துவதற்கு இது பூர்வாங்கக் கூட்டமாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப் போகிறேன்" என்றார் பிரெஞ்சுப் பிரதம மந்திரி.

ஜனாதிபதியின் மாளிகையான ஒயிட் ஹவுஸில் இந்தச் சமயம் உயர்தரச் சர்க்கார் அதிகாரிகள் வழக்கமாகக் கூடும் நேஷனல் ஸெக்யூரிட்டி கவுன்ஸில் கூடியிருந்தது. கவுன்ஸிலின் டைரெக்டரான ராபர்ட் கட்லர் என்பவரை பீடெல் ஸ்மித் அழைத்தார். டெலிபோன் விஷயத்தைச் சொன்னார். கட்லர் உடனே ஐஸன்ஹோவருக்கு டெலிபோனைப் பொருத்தினார்.

கவுன்ஸிலின் வழக்கமான நிகழ்ச்சிக் குறிப்புக்களை ஆலோசித்து முடித்தார்கள். பிறகு, மூன்று வல்லரசுத் தலைவர்கள் சந்திப்பு விஷயத்தை ஆலோசிக்க வேண்டும் என்று ஐஸன்ஹோவர் சொன்னார். மேயரின் செய்தியை ஸ்மித் எடுத்துரைத்தார். விவாதம் தொடங்கியது.

தம் அபிப்பிராயங்களைத் தெளிவாய்ச் சொன்னார் ஐக்: "இப்போது நடக்கும் பிரசார யுத்தத்தைவிட்டுச் சமரசம் செய்து கொள்ளவேண்டும் என்பதை ஸோவியத் யூனியன் செயலில் காட்டவில்லை. அது அப்படிக் காட்டுகிற வரைக்கும் வல்லரசுத் தலைவர்களின் சந்திப்பு எதுவும் பயன்படாது. ஆயினும், அப்படி ஒரு சந்திப்பு வேண்டுமென்று மேயர் அழைத்து, முடியாது என்று நாம் மறுத்தால் உலகத்தில் அதைப் பற்றித் தப்பபிப்பிராயம் ஏற்பட்டு விடும்; சமாதானம் வரும்போ திருக்கையில், ஐக்கிய அமெரிக்கா முட்டுக்கட்டை போடுகிறது என்று பலர் நினைப்பார்கள். ஆகவே, மூன்று வல்லரசுத் தலைவர்களின் சந்திப்பை நடத்துவது தான் சரி. ஆனால், அதை மேயர் வெளியிடுவதற்குமுன் நாமே வெளியிடுவதுதான் நல்லது" என்றார்.

அன்று மாலையே பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலை ட்ரங்க் டெலிபோனில் ஜனாதிபதி அழைத்தார். "கூடிய சீக்கிரம் மூன்று வல்லரசுத் தலைவர்களின் சந்திப்பு நடப்பது நலம் என்று எனக்குத் தோன்றுகிறது" என்றார். "இதுபற்றி நான் ஒரு முடிவுக்கு வருமுன், என் ஆலோசனையாளரைக் கலந்து யோசிக்க வேண்டும்" என்று சர்ச்சில் பதி

லளித்தார். இப்படிப் பதிலளித்து விட்டு, உடனே பாரிஸ் நகரில் உள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர் காரியாலயத்தை ட்ரங்க் டெலிஃபோனில் அழைத்தார். அங்குள்ள அரசியல் நிலைமையைக் கவனிக்கச் சொன்னார். பிறகு ஸெல்வின் லாயிட் என்ற மந்திரியைக் கூப்பிட்டனுப்பினர்.

நான்கு மணி நேரம் சென்றது. டெலிஃபோனில் ஐஸன்ஹோவரைத் திரும்பவும் சர்ச்சில் அழைத்தார்; "பெர்முடா என்னுமிடத்தில் இந்தச் சந்திப்பை நடத்தலாம்" என்றார். "ஊஹூம்" என்று மறுத்தார் ஐக். மேலும், "அந்நியரின் பூமியில் சந்தித்தால் காங்கிரஸ் ஆட்சேபிக்கும். ஐக்கிய அமெரிக்காவின் யுத்தக்கப்பல் ஒன்றிலேயே சந்திக்கலாம்" என்றார். "அது முடியாது" என்றார் சர்ச்சில். பெர்முடாவிலேயே சந்திக்க ஐக் இசைந்தார்.

"பகிரங்க அறிக்கைகள் அனைத்திலும், மூன்று வல்லரசுகளின் சந்திப்பு என்று மட்டுமே குறிக்க வேண்டும். பின்னல் ஸோவியத் யூனியன் உள்பட நான்கு வல்லரசுகளின் சந்திப்புக்குப் பூர்வாங்கமானது என்று இதைக் குறிப்பிடவே கூடாது" என்றார் ஐக். மனமில்லாமலே இதற்குச் சம்மதித்தார் சர்ச்சில்.

பிறகு, மேயருக்கு ஸ்மித் ஒரு தந்தி அடித்தார். "சந்திப்புக்குரிய விவரங்களைத் தயாரியுங்கள்" என்று அவருக்குத் தெரிவித்தார். மாஸ்கோ நகரில் உள்ள ஐக்கிய அமெரிக்க ஸ்தானிகர் சார்லஸ் இ. போஹ்லென் என்பவரை அழைத்தார். இந்தச் சந்திப்புப்பற்றிய தகவலை ருஷிய சர்க்காருக்குத் தெரிவிக்கச் சொன்னர்.

மூன்று வல்லரசுத் தலைவர்களின் சந்திப்புப்பற்றிய அறிக்கையும் வெளியாயிற்று. வேடிக்கை என்ன தெரியுமோ? அந்த அறிக்கை பிறந்த மூன்று மணி நேரத்துக்கெல்லாம் பிரான்ஸிலே மேயர் சர்க்கார் கவிழ்ந்துவிட்டது. மூன்று வல்லரசுத் தலைவர்களின் சந்திப்பு நடக்கும்போது, அதற்கு மூலபுருஷரான மனிதர் மட்டும் அங்கே இருக்க மாட்டார்!

ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் மூன்றும் மன வேறுபாடு கொண்ட விஷயங்களில் ஒற்றுமை ஏற்படவேண்டும்; ஸோவியத் யூனியனோடு எப்படி நடந்துகொள்வது என்பதில் ஐக்கியம் ஏற்பட வேண்டும் — இவைகளையே பெர்முடா சந்திப்பில் ஐக் எதிர்பார்க்கிறார்.

கம்யூனிஸ்ட் சீனவை ஐக்கிய அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டும் என்று பிரிட்டனும் பிரான்ஸும் கூறின. அரசியல் காரணங்களால் இதை ஐக் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

மூன்று வல்லரசுத் தலைவர்களின் சந்திப்பு, ஸோவியத் யூனியனுக்குப் பிடிக்கவில்லை. அதற்கு நியாயம் உண்டு. மூன்று வல்லரசுச் சந்திப்பு வெற்றி பெற்றால், அவை மூன்றும் ஐக்கியமாகச் சேர்ந்து வந்து தன்னுடன் பேரம் பேசும்; அந்தச் சந்திப்பு வெற்றி பெருவிட்டால், நான்கு வல்லரசுச் சந்திப்பே நடக்காமல் போய்விடும். இரண்டினுலும் தனக்கு லாபமில்லை என்று ஸோவியத் யூனியன் நினைக்கிறது. ஆகையால் தான், இந்தச் சந்திப்பை ஸோவியத் சர்க்கார் கண்டித்து அறிக்கை வெளியிட்டது.

ஸினிமா உலகில் புரட்சி

★

ஹாலிவுட்டில் பிரமாதமான புரட்சி உண்டாகியிருக்கிறது. ஸினிரமா, 3-டி, ஸினிமாஸ்கோப் ஆகிய புது முறைகளெல்லாம் வந்து ஆர்ப்பாட்டமாயிருக்கிறது. சென்னை நகரில்கூடத் தான் 3-டி வந்துவிட்டதே! இந்தப் புதுமைகளையும் இவை தோன்றிய வரலாற்றையும் இந்தக் கட்டுரையில் காணலாம்.

வேறு எந்த மாதத்தையும் விடப் போன மாதம் ஸினிமாக்காரர் மிக அதிகமாக ஊரைப் பெரிய புரளி செய்துவிட்டார்கள். மூன்று பரிமாண ஸினிமா என்ற 'நாலு கண் புரட்சி' நாட்டையே ஒரு கலக்குக் கலக்கிவிட்டது.

டெலிவிஷன் பெருத்ததால், ஸினிமாத் தொழிலில் பெரிய மந்தம் உண்டாயிற்று. பட முதலாளிகள் என்ன செய்வதென்று தெரியாமல் கண் கலங்கிக்கொண்டிருந்தபோது, அகஸ்மாத்தாக 3-டி என்ற மூன்று பரிமாண ஸினிமாப் பித்தம் பிடித்து, திரள் திரளாக ஜனங்கள் தியேட்டர்களை நாடினார்கள். ஆல்கொஹால், அயோடின் இரண்டையும் முக்கியமாக உபயோகித்துத் தயாரித்த 'போலரைஸ்டு' (ஒளியை ஒருமுனைப்படுத்தும்) மூக்குக் கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு பல லட்சக்கணக்கான மக்கள் படம் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஸினிமாத் திரையிலிருந்து, கர்ஜனை புரியும் சிங்கங்கள் தாவிக் குதித்து, ஸினிமா ரஸிகரின் மடியிலே வந்து விழுந்தன; ஈட்டிகளும் துப்பாக்கிகளும் அவருடைய தலையைக் குறி பார்த்தன; சிலந்திகள் அவர் முகத்தைச் சுற்றி வலை பின்னின; அழகான மங்கைகள் தளுக்கிக் குலுக்கிக்கொண்டு அவரை நெருங்கி வந்தார்கள்!

இதையெல்லாம் விட்டு, இன்னொரு வித ஸினிமாவில், ரஸிகர் எதிர்பாராத நிலையில், ஒரு பெரிய ஓலம் எழுந்தது. படம் அவரை முன்னும் பின்னும் வந்து பிடித்துக்கொண்டத. அவரையே திரையில் எற்றிக்கொண்டது. ஒரு மலை ரெயில் வண்டியில் பரபரப்பாக ரஸிகரே பிரயாணம் செய்யத் தொடங்கிவிட்டார்!

"என்ன? இதெல்லாம் விரஸமா? ஜனங்களை முகத்தில் அறைய வேண்டும், ஸார். அதை வாங்கிக்கொள்ள அவர்களுக்கு உரிமையில்லையா?" என்றார் ஒரு ஸினிமா முதலாளி.

"ஹாலிவுட்டுக்கு மறுபடியும் பெரிய செழிப்புத் தொடங்கியிருக்

காப்பிரைட்: டைம் (ஆங்கிலம்: 8-5-'53), டென்வர்-2, கொலராடோ, ஐக்கிய அமெரிக்கா.



கிறது" என்றார் இன்னொரு பட உற்பத்தி முதலாளி.

1930-க்கு முந்திய சில வருஷங்களில் படத்தொழிலுக்கு மந்தம் வந்தது. ஒலிப்பதிவு வந்து அப்போது அதைக் காப்பாற்றியது. தொழிலில் பிரமாத வருவாய் வந்தது. மின்னலாய் என்ற நடிகை தன் விலை உயர்ந்த மிங்க் அங்கியை வெகு அலட்சியமாக ஒரு சிறு செடியின் மீது போர்த்திவிட்டுப் போனாளாம்; அவ்வளவு மிதப்பு!

அப்புறம் சில வருஷத்துக்கெல்லாம் மறுபடியும் மந்தம் வந்தது. அப்போது பல வர்ணப் படம் வந்து தொழிலுக்குக் கை கொடுத்தது. காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்றபடி, யுத்தகாலத்தில் ஹாலிவுட் ஏராளமாகச் சம்பாதித்தது. அது முடிந்ததும், அயல் நாட்டு மார்க்கெட் போய்விட்டது; உள்நாட்டு வசூல் குப்புற விழுந்தது.



'ஸினிமாஸ்கோப்'பில் எடுக்கும் ஃபிலிம் படம் இப்படி மடிப்பாகச் சுருங்கும்; மேலே உள்ளபடி திரையில் விரியும்.

டெலிவிஷன் வந்து, கடைசி அறையைக் கொடுத்தது போல் தோன்றியது. ஸினிமா பார்க்க வருகிறவரின் எண்ணிக்கை 8 கோடியிலிருந்து 4 கோடியே 60 லட்சமாக விழுந்தது. இன்னும் எவ்வளவுதான் கீழே போகுமோ என்று பட முதலாளிகள் கதி கலங்கினார்கள். நாள் ஒன்றுக்கு 3 ஸினிமா தியேட்டர்கள் விகிதம் மூடி வந்தார்கள். 1946-

தொடங்கி இதுவரையில் 5,000 ஸினிமா தியேட்டர்கள் இப்படிச் சூன்யமாகி, ஒன்று பேயடைந்தன; அல்லது சந்தைக் கடைகளாக மாறின.

ஆனால் ஒரு வேடிக்கை. 'க்வோ வாடிஸ்', 'தி க்ரேட்டஸ்ட் ஷோ ஆன் எர்த்' போன்ற அரிய படங்களை மட்டும் டெலிவிஷன் வந்து ஒன்றும் செய்ய முடியவில்லை. என்றையும் விட மிக அதிகமான ஜனங்கள் அவைகளைப் பார்க்க வந்தார்கள். மற்றப் படங்களுக்குத்தான் வசூல் குறைந்தது. பெரும்பாலான பெரிய ஸ்டூடியோ எல்லாம் சென்ற வருஷம் லாபமே காட்டவில்லை. அவைகள் சென்ற மூன்று வருஷ காலத்தில் தங்கள் ஒப்பந்த ஜாபிதாக்களில் 900 பேர் இருந்ததை 300 பேராகக் குறைத்துவிட்டன. ஃபாக்ஸ் மூன்றில் ஒன்றாகவும், மெட்ரோ பாதியாகவும், தங்கள் பட உற்பத்திகளைக் குறைத்துக் கொண்டன. பெவர்லி ஹில்ஸ் பாழடைந்தது. 'இந்த இடம் விற்கப்படும்' என்ற விளம்பரப் பலகைகள் எங்கும் தொங்கின.

தொழிலில் 'பெத்த' பேர்களான க்ளார்க் கேபிள், எர்ரால் ஃப்ளின், லானா டர்னெர், ஆவா கார்ட்னர், க்ரிகாரி பெக் முதலியவர்களெல்லாம் ஐரோப்பாவுக்குக் கிளம்பிவிட்டார்கள். வரிச் சட்டத்தில் உள்ள ஒரு 'பொத்த'லைப் பயன்படுத்திக்கொள்ளவே அவர்கள் இப்படிப் பயணமானார்கள். 18 மாதகாலத்தில் 17 மாதம் நாட்டில் இல்லாதவர்களுக்கு வரி கிடையாதாம்! சில நடிகர்கள் நாடக மேடைக்குத் திரும்பினார்கள். சில நடிகர்கள் டெலிவிஷனில் நுழைந்தார்கள். ராஜபோகமாக ஹோட்டல் நடத்தும் மைக் ரொமனாஃப் என்பவர், "இனிமேல் ஸினிமாத் தொழில்காரர்களை நம்பி நான் வாழ முடியாது" என்று எங்கினார்.

நோயாளி வர வர மெலிந்து போனான். இந்தச் சமயத்தில் இரண்டு அற்புத மருந்துகள் தோன்றி அவனுக்குக் கை கொடுத்தன. அவைதான் 'ஸினிரமா', '3-டி' என்பவை.

ஸினிரமா என்பதில் மூன்று ஃபிலிம்களில் ஏககாலத்தில் ஃபோட்டோக்கள் எடுக்கிறார்கள்; அவைகளை வளைந்த பிரம்மாண்டமான திரையில் மூன்று ப்ரொஜெக்ட்டர்களைக் கொண்டு திரை இடுகிறார்கள். (இந்த ஸினிரமா பற்றிய விரிவான விவரங்களை மார்ச்சு மாத 'மஞ்சரி'யில் காணலாம்.) வளைந்த திரையின் அகலம் 64 அடி; உயரம் 23 அடி. இதைச் சாதாரண தியேட்டர்களில் அமைத்துக்கொள்ள முடியாது. ஆனால், இதில் படங்களைப் பார்க்கும்போது திடுக்கிட்டுத் திகைக்கும்படி யிருக்கிறது. பார்ப்பவரை யெல்லாம் திரையோடு திரையாகக் காட்சிகளில் ஒன்றிவிடும்படி இது செய்கிறது. இந்த ஸினிரமாவைக் கண்டு பட முதலாளிகள் அதிசயமடைந்தார்கள். இதை எப்படி அநுபவ சாத்தியமாக்குவது என்று யோசிக்கத் தொடங்கினார்கள். இதற்குள்ளே 3-டி என்ற மற்றொன்று தோன்றியது.

ஒரு பொழுதுபோக்காக ஃபிலிம் பிடிக்கும் பழக்கமுடைய மில்டன் கன்ஸ்பர்க் என்பவர் தம் வீட்டிலே சில 3-டி படங்களை எடுத்துப் போட்டுப் பார்த்தார். இந்த அற்புத யந்திரத்தை ஏதாவது பெரிய

ஸ்டுடியோ ஒன்று என் உபயோகிக்கக் கூடாது என்று அவர் எண்ணினார். அவருடைய சகோதரர் ஜூலியன் ஒரு மூக்குக் கண்ணாடி வியாபாரி. காமிரா செய்யும் வேலை தெரிந்த ஃப்ரண்ட் பேக்கர் என்ற ஓர் ஆளை அவர் பிடித்தார். ஸ்டாண்டர்ட் ஃபிலிம் காமிராவில் இரண்டு லென்ஸுகளை ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றை வைத்துப் பொருத்தி, இரண்டும் ஒரே காட்சியை ஒற்றுமையாய்ப் படம் பிடிக்கும்படி அவர் அமைத்தார். இந்தக் கருவியை விற்பதற்காக 'நேச்சுரல் விஷன்' என்ற ஒரு கம்பெனியை, கன்ஸ்பர்க் சகோதரர்கள் 1951-இல் நிறுவினார்கள். ஒவ்வொரு பெரிய ஸ்டுடியோவாக இதைத் தூக்கிச் சென்று விற்க முயன்றார்கள்.



3-டி என்ற முப்பரிமாண ஸினிமா: மனிதனின் இரண்டு கண்களைப்போல இரண்டு லென்ஸ் கொண்ட காமிராவைக் கொண்டு இரண்டு ஃபிலிம் எடுத்து, அந்த இரண்டையும் ஒன்றின் மேல் ஒன்றாகத் திரையிடுகிறார்கள். ஒரு படம் குறுக்காகவும், ஒரு படம் செங்குத்தாகவும் 'போலரைஸ்' ஒளியை ஒருமுனைப்படுத்துதல்) செய்திருக்கும். அதேபோல் இரண்டுவிதமாய்ப் 'போலரைஸ்' செய்த மூக்குக்கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தால், ஒரு கண்ணில் ஒரு படமும் மறு கண்ணில் மறு படமும் தென்பட்டு, நம் மூளையில் இரண்டும் இசைந்துவிடுவதால், மூன்றாவது பரிமாணம், அதாவது பருமன் தோன்றுகிறது.

வேண்டாம் என்றது ஃபாக்ஸ்; கொலம்பியா, பாரமவுண்ட் இரண்டும் வேண்டாம் என்றன. பார்க்கலாம் என்றது மெட்ரோ. கடைசியில் வேண்டாம் என்றே அதுவும் கையை விரித்தது.

அப்புறம் ஆர்ச் ஒபோலர் என்ற ஒருவர் வந்து சேர்ந்தார். விசித்திரச் சரக்குகளை விற்பதையே ஒரு தொழிலாகக் கொண்டவர் அவர். இந்த 'நேச்சுரல் விஷன்' காமிராவைக் கொண்டு 'ப்வானா டெவில்' என்ற ஒரு படத்தை அவர் பிடித்தார். சென்ற நவம்பரில் அதைத் திரையிட்டார்கள். 3-டி (முப்பரிமாண) ஸினிமா தோன்றிவிட்டது. கதை ஒன்றும் அப்படிப் பிரமாதம் இல்லை. 'ஸ்டீரியோகிராஃபி' என்ற இருபட ஒட்டும் சரியாக இல்லை; அப்படியிருந்தும், அடுத்த நாள் காலையில் தியேட்டர் மானேஜர் தலைகால் தெரியாத குதூகலத்துடன் டெலிஃபோனில் கன்ஸ்பெர்க்கைக் கூப்பிட்டார். "இதுவரையில் பார்க்காத ஆச்சரியம்! நாலு வரிசையாக ஹாலிவுட் ரூஸ்வெல்ட் ஹோட்டலிலிருந்து, நகரத்துக் கோடி வரைக்கும் ஒரே பெரிய க்யூவாக ஜனக் கும்பல் நிற்கிறது" என்றார். இரண்டே தியேட்டரில் இதுவரை இல்லாதபடி 95,000 டாலர் வசூலாயிற்று. படம் சிக்காகோவுக்குப் போனதும், அங்கேயும் சில தியேட்டர்களில் பிரமாதமாக வசூலாயிற்று.

ஸினிமாத் துறையின் பழம் புலிகளெல்லாம்



ஸினிராமா: பெரிய வளைவான திரை. அதை மூன்று பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு ப்ரொஜக்ட்டர் மூலம் படத்தின் மூன்று பகுதி ஃபிலிம்களைத் திரையிடுகிறார்கள்.

இதை அறிந்தன. தங்கள் குகையிலிருந்து வெளியே வந்தன. தலை நிமிர்த்தி, வெகு எச்சரிக்கையாகக் கவனித்தன. காற்று எந்தப் பக்கம் அடிக்கிறது என்று மோப்பம் பிடித்தன.

பாரமவுண்ட் ஸ்டுடியோவில் சீந்துவாரற்றுக் கிடந்த பழைய ஸ்டீரியோ-காமிராவை எடுக்கச் சொன்னார் அடால்ஃப் ஜூகார். ஸங்காரி என்ற மூவர்ண 3-டி படம் ஒன்றை அவர் எடுத்தார். "ஸினிமா ரஸிகர்களெல்லாம் மூக்குக் கண்ணாடி போட்டுக்கொள்வார்களா?" என்று கேட்டார் ஒரு சந்தேகி. "அவர்களுக்கு வேண்டிய சரக்கை அளித்தால், ஒரு டாயிலெட் பெட்டியையே கழுத்தில் கட்டி விட்டாலும் அவர்கள் தாங்கிக் கொள்வார்கள்" என்றார் ஜூகார்.

யூனிவர்ஸல் ஸ்டுடியோவில் முதலில் தினம் ஒன்றுக்கு 20-மணி நேரம் வேலை செய்து, 'இட் கேம் ஃப்ரம் அவுட்டர் ஸ்பேஸ்' என்ற படம் எடுத்தார். தாங்கள் மூன்று

3-டி படம் எடுக்கப்போவதாக ஃபாக்ஸ் முதலாளிகள் அறிக்கை செய்தார்கள். மெட்ரோ முதலாளி இரண்டு 3-டி படம் எடுக்கப் போவதாக அறிவித்தார்.

வார்னர் ப்ரதர்ஸ் முதலாளிகளில் ஒருவரான ஜக், கன்ஸ்பர்க்கையே தம்மிடம் அமர்த்திக் கொண்டார். 'அரக்கு மியூஸியத்தில் கொலை' என்ற படத்தை 3-டி படமாக எடுப்பதுடன், சத்தத்தையும் 'ஸ்டீரியோஃபோன்' முறையில் பதிக்கப்போவதாக ஜக் அறிவித்தார். தம்முடைய முதல் 3-டி படத்தை டைரெக்ட் செய்ய ஆண்ட்ரி டிடாத் என்ற ஒற்றைக் கண்ணரை அவர் அமர்த்தினார். ஒற்றைக் கண் பார்வையில் பருமன் தெரியாதே என்று யாரோ சொன்னார்கள். "அதனால் என்ன? பீதோவன் என்ற சங்கீத மேதைக்குத்தான் காது கேட்கவில்லை. கேட்டதா!" என்று அவர் பதில் அளித்தார்.

கொலம்பியாவில் இரண்டு காமிராக்களை ஒன்றாய்ப் பிணைத்து, 'மான் இன் தி டார்க்' என்ற படம் எடுக்கத் தொடங்கினார்கள். "இப்போது ஜனங்கள் மீது எறிய எங்களிடம் ஒரு கடப்பாரை கிடைத்திருக்கிறது. ஜனங்கள் இதை எங்கள் மீதே திருப்பி எறிகிற வரைக்கும் இதை விடப் போவதில்லை" என்று அங்கே பட உற்பத்தித் தலைவரான ஜெர்ரி வால்டு சொல்கிறார்.

'ப்வானா பிசாசு', 'இருளில் மனிதன்', 'அரக்கு மாளிகை' இந்த மூன்றும் பிரமாதமாய் ஓடின. மொத்த வசூல் இரண்டு கோடிக்குக்குறையாது என்று நிச்சயமாய்த் தோன்றுகிறது.

இந்த 'டீப்பீஸ்' (ஆழப் படங்கள்) வந்தது முதல் பழைய 'ஃப்ளாட்டீஸ்' (தட்டைப் படம்) கூட நன்றாய் ஓடுகின்றனவாம். சாக்கலேட், மிட்டாய் போன்ற சரக்குகளும் பிரமாதமாய் விற்கின்றனவாம். சில தியேட்டர்களில் டிக்கட் வசூலுக்குச் சமமாக இருக்கிறதாம் இவற்றின் விற்பனை. பல தியேட்டர்களில் 3-டி படங்களில் ஃபிலிம் சுருளை மாற்றும் ஒவ்வொரு தடவையும் இடைநேர ஓய்வு இருப்பதாலேயே இந்தச் சரக்குகளுக்கு இப்படி அதிருஷ்டம் அடித்திருக்கிறது.

தேசத்தில் எந்தத் தியேட்டரில் 'நேச்சுரல் விஷன்' படங்களைத் திரையிட்டாலும் அங்கே கிடைக்கும் மொத்தவசூலில் 5 சதவிகிதத்தைக் கன்ஸ்பெர்க் அண்டு கம்பெனிக்குக் கொடுத்து விடுவதாக ஹாலிவுட் முதலாளிகள் உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். 'போலராய்ட்' கார்ப்பொரேஷன்காரர்கள் தங்கள் கண்ணாடிகளை விநியோகம் செய்யும் பிரத்தியேக உரிமையைக் கன்ஸ்பெர்க் கம்பெனிக்கு ஒரு வருஷ காலத்துக்கு அளித்திருக்கிறார்கள். 10 கோடி கண்ணாடிகளை ஒன்று 6·7 ஸெண்டுவீதம வாங்கி 10 ஸெண்டுவீதம் கன்ஸ்பெர்க் கம்பெனி விற்றதில் 20 ஆயிரம் டாலர் மிச்சம். கேட் வசூலில் பங்கும் கண்ணாடி விற்பனை லாபமுமாக வந்து நிறைந்த செக்குகளை வாங்கி வாங்கிக் கன்ஸ்பெர்க் அண்டு கம்பெனி நிர்வாகிகளுக்குக் கையெல்லாம் புண்ணாகிவிட்டது.

ஒரு புரட்சி மறு புரட்சிக்கு விதை போட்டு விடுகிறது. இதை ஹாலிவுட் முதலாளிகள் மறந்து விட்டார்கள். ஜனவரி மாதம் ஒரு நாள் இரவு அவர்கள் நிம்மதியாகப் படுத்துத் தூங்கிவிட்டு மறுநாள் காலையில் காபி சாப்பிடப் போனார்கள். அப்போது, திடுக்கிட்டத் தக்க செய்தி ஒன்று நகரெங்கும் பரவியது. 'ஹாலிவுட் ரிப்போர்ட்டர்' என்ற பத்திரிகையில் கொட்டையெழுத்துத் தலைப்பு ஒன்று தென்பட்டது: 'புதிய ஸினிமா முறை ஒன்றை ட்வெண்டியத் ஸெஞ்சுரி ஃபாக்ஸ் கம்பெனி கண்டுபிடித்திருக்கிறது.'

இந்த '3-டி' பட அமளியில் பிற பட முதலாளிகள் எல்லாரும் 'ஸினிரமா'வை மறந்தே போய்விட்டார்



ஸினிமாஸ்கோப்: ஸினிரமாவை ஒட்டிய புதுமுறை. ஒரே காமிராவில் ஒரே ஃபிலிம்தான் எடுக்கிறார்கள். ஸிலிண்டர் உருவ லென்ஸ் போட்டது அந்தக் காமிரா. ஃபிலிமில் படம் சுருங்கி விழுகிறது. சற்று வளைந்த பெரிய திரையில் அதை ப்ரொஜக்ட் செய்யும்போது, படம் அகன்று விரிவடைகிறது.

கள். 'ஸினிரமா'வை அநுபவ சாத்தியமாகச் செய்யும் வழி எதையாவது 'ஃபாக்ஸ்' முதலாளிகள் கண்டுபிடித்துவிட்டார்களோ ஒரு வேளை! ஆமாம்; அதுதான் விஷயம் என்று தோன்றியது. அவர்களுடைய புதிய கருவிக்கு 'ஸினிமாஸ்கோப்' என்று பெயர்.

'ஸினிமாஸ்கோப்' முறையில் படம்பிடிக்க ஸ்டாண்டர்டு காமிரா போதும். இதில் ஸிலிண்டர் வடிவ 'லென்ஸ்' ஒன்றைப் பொருத்துகிறார்கள். இந்த லென்ஸில் மிக விரிவான காட்சி, மடிப்பு விழுந்த துணிபோல் சுருங்கி விழும் இப்படி எடுத்த படத்தை இதே போன்ற மற்றொரு லென்ஸ் மூலம் திரையிட்டால், பழையபடி அது விரிவடைந்து இயல்பான நிலையில் காட்சியளிக்கிறது.

இனிமேல் தாங்கள் எடுக்கப் போகும் சகல படங்களையும் இந்த 'ஸினிமாஸ்கோப்' முறையிலேயே எடுக்கப்போவதாக ஃபாக்ஸ் முதலாளிகள் சொல்லுகிறார்கள்.

ஸினிமாஸ்கோப் 'திரை' சற்று வளைவாக இருக்கிறது. திரையின் அகலம் 65 அடி; உயரம் 25 அடி. இதைச் சிலர் "ஏழையின் ஸினிரமா" என்று கேலி செய்கிறார்கள். 'ஸினிரமா'வைப்போல் சபையோரைப் படத்தோடு படமாக இது ஒன்றிவிடச் செய்யவில்லை. ஆனால், ஓரளவு தத்ரூப வாழ்க்கைபோல் நமக்குத் திருப்தி தருகிறது; உன்னதமான காட்சியை நம் முன் விரிக்கிறது.

படம் ஒன்றுக்கு 25,000 டாலர் வாடகை தந்தால், இந்த 'ஸினிமாஸ்கோப்'பை இரவல் தருவதாக ஃபாக்ஸ் முதலாளிகள் சொன்னார்கள். மற்ற முதலாளிகளெல்லாம் தயங்கினார்கள். எல்லாரும் 'ஸினிமாஸ்கோப்' மோகம் கொண்டால் சிறு திரைகளில் போடுவதற்காக ஏற்கனவே தயாரித்து இன்னும் வெளியிடாமல் வைத்திருக்கும் படங்களின் கதி என்ன? அவற்றின் மதிப்பு 33 கோடி டாலர் ஆகுமே!

ஆனால், லாயர்கள் வந்து மற்ற முதலாளிகளை இந்த அபாயத்திலிருந்து ரட்சித்தார்கள். 'ஸினிமாஸ்கோப்'புக்குப் போட்டிருக்கும் லென்ஸில் இந்த ஃபாக்ஸ் முதலாளிகளுக்கே பூர்ண உரிமை இல்லை என்று அவர்கள் அபிப்பிராயம் சொல்லிவிட்டார்கள்.

உடனே, புரட்சிக்குப் புரட்சிக்கு மறு புரட்சி தொடங்கிவிட்டது. தாங்களெல்லாம் தனித்தனியே அநேக வருஷங்களாகப் பலமாக ஆராய்ச்சி புரிந்து புதிய ஸினிமா முறைகளைக் கண்டு பிடித்திருப்பதாக, மற்ற முதலாளிகளெல்லாம் ஒருவருக்குப் பின் ஒருவராக அறிவித்தார்கள். 'பாராவிஷன்' என்று பாரமவுண்ட்காரர் ஒரு 'ஸினிமாஸ்கோப்'பைக் கைக்கொண்டார்கள். மெட்ரோ, யூனிவர்ஸல் இவற்றின் முதலாளிகளும் தாங்களே கண்டு பிடித்த தனித் தனி 'ஸினிமாஸ்கோப்'களைத் தயாரித்து விட்டார்கள்.

அடுத்தபடியாக, ஸினிமாத் தொழிலில் காற்று எந்தப் பக்கம் அடிக்கப் போகிறது என்று இப்போது சொல்ல முடியவில்லை. 'ஸினிமாஸ்கோப்'பையே ஃபாக்ஸ் விடாது பிடித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் 3-உ படங்களாகவே 22 எடுக்கப் போவதாக வார்னர்ஸ் அறிவித்திருக்கிறது.

3-டி படங்களுக்குப் பழைய திரைகளே போதும். 'ஸினிரமா', 'ஸினிமாஸ்கோப்' இவைகளைப்

போடப்பெரிய திரைகள் வேண்டும். எந்த மாதிரி திரைப்படங்கள் வேண்டுமென்று பொதுஜனங்களே தீர்மானிக்க வேண்டுமென்று பட முதலாளிகள் சென்ற வாரம் ஓட்டுஎடுத்தார்கள். "எல்லாவகைப் படங்களையும் காட்டக்கூடிய திரைகளே வேண்டும்" என்று இது வரை ஆயிரக்கணக்கான மக்கள் ஓட்டுப் போட்டிருக்கிறார்கள்.

ஆனால், இறுதியான முடிவு எப்படியானாலும் சரி; இந்த '3-டி', 'ஸினிமாஸ்கோப்' இவைகளால் ஸினிமாக்கலையில் என்ன மாறுதல் ஏற்படும்? "கலை உயர்வடையாது; கலையில் உள்ள குறைகள்தான் பெரிதுபடும்" என்பது சிலர் கருத்து. 'தந்திரங்கள் இனிப் பலிக்க மாட்டா. நாடகக் கலைபோல, நடிப்பு உயர்வடையும். சம்பாஷணை சிறப்புற்று இலக்கிய நயம் பெறும் என்பது வேறு சிலர் கருத்து.

இன்னொன்று: பொதுஜனங்கள் இப்போது டெலிவிஷனில் மோகம் குன்றியிருக்கலாம்; ஸினிமாவுக்கு அவர்கள் பழையபடி ஒரு 'சான்ஸ்' அளித்திருக்கலாம். ஆனால் இதுவே கடைசிச் 'சான்ஸ்' ஆகிவிடுமோ? பொறுக்கியெடுத்த படங்களையே சமீப வருஷங்களில் ஜனங்கள் பார்க்கத் தொடங்கியிருப்பதாகப் பட முதலாளிகளே சொல்லுகிறார்கள். இந்த வாடிக்கைக்காரர்களை மீண்டும் பிடித்துக்கொண்டு விடாமல் காப்பாற்றிவரப் பட முதலாளிகளால் முடியுமா? அல்லது இனி எப்போதும் டெலிவிஷனுக்கும் ஸினிமாவுக்கும் ஓயாத போராட்டமே நடக்கப் போகிறதோ? தவிர, டெலிவிஷனில் இப்போதே பல வர்ணம் வந்துவிட்டது. '3-டி' யும் அதில் ஒருநாள் வராதென்று யார் சொல்ல முடியும்?

அவர்களால் முடியுமா?

லண்டனில் ஒரு விருந்து நடந்தது. ஸர் டி. விஜயராகவாசாரியாரும் பல ஆங்கிலேயரும் அதற்குச் சென்றிருந்தார்கள். சூப்பு, மாமிச உணவு இவைகளை ஆங்கிலேய நண்பர்கள் குஷியாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். விஜயராகவாசாரியார் அவைகளில் ஒன்றையும் தொடாமல் பேசாதிருந்தார். ஓர் ஆங்கிலேயர் இவரைப் பார்த்து, "பாவம்! உங்களைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது. ஆனால், என்ன செய்கிறது! நீங்கள் பட்டினி கிடக்க வேண்டியதுதான்" என்று கேலி செய்தார்.

விஜயராகவாசாரியார் சட்டென்று ஒரு டம்ளர் நிறையப் பாலை ஊற்றிக்கொண்டு கையிலெடுத்தார். "எங்கே, உங்களில் யாராவது இப்படிச் செய்ய முடியுமானால், செய்யுங்கள் பார்க்கலாம்" என்று சவால் விடுத்தபடி, வாய்க்கு மூன்றடி உயரத்தில் டம்ளரைத் தூக்கி, பாலை வார்த்துக்கொண்டு குடித்தார். கூடியிருந்த ஆங்கிலேயரில் எவரும் இப்படிச் செய்ய முடியாமல் தோற்றுப் போனார்கள்.

—ராமுண், 'பீப்பிள்'

தேகப்பயிற்சியில் சிறந்தது நீந்துவது;
அது ஆபத்திலும் உதவும்.

நீந்தும் முறை

தீபக் ஸேன்

ஒன்றுக்கும் லாயக்கில்லாத ஒருவரைப்பற்றிச் சொல்லும்போது, "படிப்புத்தான் இல்லையென்றால், நீந்தவாவது தெரிந்திருக்காதோ" என்று பழைய கால ரோம் தேசத்து மக்கள் கேலி செய்வார்களாம். இதிலிருந்து முன் காலத்தில் நீந்தும் பழக்கம் மனிதனுக்கு மிகவும் சகஜமாயிருந்திருக்கிறது என்று தெரிகிறது. அதை மனிதனுக்கு ஒரு பெருஞ் சிறப்பாகவும் கொண்டாடியிருக்கிறார்கள். ரோம் தேசத்தினர் போர்த்திறமை வாய்ந்த ஜாதியினராகையால், நீந்தவது உடற்பயிற்சிக்கு அவசியம் என்பதைக் குறிப்பாக இது காட்டியிருப்பதாகவும் வைத்துக்கொள்ளலாம்.

நீந்தும் சக்தி மனிதனுக்கு இயற்கையிலேயே அமைந்தது. நாகரிகம் வந்துதான் அந்தச் சக்தி கொஞ்சம் குறைந்தது என்று சொல்லலாம். முன் காலத்தில் வெகு சகஜமாயிருந்த நீந்தும் பழக்கத்தை நாகரிகம் மிகுந்த இந்தக் காலத்தவர்கள் ஒரு கலையாகக் கற்றுத் தேர்ச்சியடைய வேண்டியிருக்கிறது. புரியில் கடற்கரையோரமாய் வசிக்கும் செம்படவர்கள் நீந்துவதில் பெயர் போனவர்கள் என்று இப்போதுகூடச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு ஜலம், பூமி இரண்டும் ஒரே விதமாக இருக்கின்றன. சமீபத்தில்தான் பிறந்து 45 நாட்கள் ஆன ஒரு சிவப்பிந்தியக் குழந்தை நீரில் மூழ்காமல் மிதந்தது என்ற செய்தி கிடைத்தது.

நீந்துவது மிகச் சிறந்த தேகாப்பியாசம் என்று சொல்லலாம். உடலுக்குப் பலத்தையும் அழகையும் அளிப்பதுடன் அது மனத்துக்கு உற்சாகத்தையும் தருகிறது. ஆகவே, நீந்துவது ஒரு கல்விப் பயிற்சி என்று சொன்னாலும் மிகையாகாது. நீந்துவதில் தேகம் முழுவதும் ஒரே விதமாய் வேலை செய்கிறது. அதனால் உடலின் வலது, இடது இரண்டு பாகங்களும் சமமான வளர்ச்சி பெறுகின்றன.

சரியானபடி நீந்துவதனால் கைகள், கால்கள், மார்பு, முதுகு அனைத்துக்கும் நல்ல பயிற்சி ஏற்படுகிறது. பிற தேகாப்பியாசங்களைப்போல் நீந்துவது ஆயாசத்தை உண்டுபண்ணுவதில்லை. உடலுக்கு எந்தவிதமான தீங்கும் புரிவதில்லை.

நீந்தும்போது தலை, கழுத்து, உடம்பு, கால், கை முதலிய அவயவங்கள் எப்படி வேலை செய்கின்றன என்று பார்ப்போம். கால்களை நன்றாக நீட்டிக்கொண்டு கவிழ்ந்தபடி, ஜலத்தில் கைகள் இரண்டையும் சேர்த்து நீட்டி வைத்துக்கொண்டு நீந்துவதுதான் சரியான முறை. தடுப்புகள் போல் கைகள் முன்னும் பின்னும் வேலை செய்வதனால்தான் தண்ணீரில் நீந்திச் செல்ல முடிகிறது. நீரில் சும்மா

மூலம்: யுவர் ஹெல்த் (ஆங்கிலம்: மே '53), கல்கத்தா.



மிதந்து சென்றால் உடம்புக்கு ஒன்றும் வேலை இல்லை. உடம்பைச் சரியான நிலையில் மிதக்கச் செய்து பழகியபின், கைகள் என்ன செய்யவேண்டும் என்பதைத் தான், நீந்தக் கற்றுக் கொள்பவன் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். மார்பு அகல விரியும்படி மூச்சு விடுவதுடன் வயிற்றையும் எக்கிக் கொள்வது அவசியம். எந்தக் காரணத்தினாலும் மூச்சுக் காற்றை முற்றும் வெளியே விடக் கூடாது. நன்றாக இழுத்துக் கணக்காய்ச் சுவாசத்தை விடவேண்டும். ஜலத்தில் இறங்கியதும் சேர்த்து நீட்டியிருக்கும் கைகளைப் பிரித்து ஜலத்தை அளைந்தபடி கிட்டக் கொண்டு வரவேண்டும். கை விரல்கள் மூடியபடி இல்லையென்றால் வேகமாய் நீந்திச் செல்வது கஷ்டம். கைகளை மடக்கி மோவாய்க் கருகே கொண்டு வந்த பிறகு, முதலில் இருந்தபடி மறுபடியும் நன்றாய் நீட்டி விடவேண்டும்.

இப்படிக் கைகளை ஆட்டி வேலை செய்வதில்தான் நீந்தும் வேகம் உண்டாகிறது. முதலாவது, கைகளை நீட்டி வைத்திருப்பது; இரண்டாவது, விரல்களை மூடியவண்ணம் கைகளை மடக்கி மோவாயின்கீழ்க் கொண்டுவருவது; மூன்றாவது, கைகளை முன்போல் மறுபடியும் நீட்டிவிடுவது. இதற்குப் பிறகு தான் சற்று ஆசுவாசப்படுத்திக் கொள்ளலாம். மூச்சுத் திணறாமல் நிதானமாய் மூச்சுவிடக்கூடியவன் என்றால், சிரமமில்லாமல் ஜலத்தில் மிதந்தபடியே செல்லலாம். கைகளை மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டு நிறுத்தி நிதானமாய்ச் சென்றால், சுலபமாகவும் அழகாயும் நீந்தும் திறமை உண்டாகும்.

கை கால்களுக்கு வேலை கொடுப்

பதால் ஜீரண சக்தியற்றவர்களுக்கு நல்ல ஜீரண சக்தி ஏற்படுகிறது. வேலையினால் உண்டாகும் ஆயாசம் இல்லை. ஒரு மரப்பலகையையோ அல்லது வேறு கனமான பொருளையோ பற்றிக்கொண்டு கவிழ்ந்தபடி ஜலத்தில் இறங்கவேண்டும். கால்களை ஜலத்துக்குள் அடிப்பதற்கு முன்பு நன்றாய் மூச்சுவிட்டுக் கொள்வது நல்லது. முதலில் இரண்டு கால்களையும் நன்றாய் மடக்கிக்கொள்ள வேண்டும். அவைகளை மடக்கிப் பிறகு நீட்டுவதுமட்டும் போதாது. கால்களை அகலத் தள்ளிப் பிறகு சேர்த்து நீட்டவேண்டும். இப்படிக் கால்களையும் கைகளையும் எவ்வளவுக்கெவ்வளவு பலத்தோடு மடக்கியும் நீட்டியும் செய்கிறோமோ அதைப் பொறுத்தேதான் நாம் நீந்தும் வேகமும் இருக்கிறது. நன்றாய் நீந்தத் தெரிந்தவன் ஜலத்தில் நீட்டிப் படுத்துக்கொண்டுதான் நீந்துவான். கற்றுக்கொள்ளுபவர்களுக்கு எப்படி நீந்துவது என்பதைச் சுலபமாகத் தரையிலேயே காட்டிக் கொடுத்தால், நீந்துபவன் பிறகு கயிற்றைக் கட்டிக்கொண்டு ஜலத்தில் நீந்திப் பழகிக்கொள்ளலாம். சமயத்தில் சரியாய் மூச்சுவிட்டுக் கொள்வது, ஜலத்தில் கைகளையும் கால்களையும் மடக்கி நீட்டிப் போட்ட பிறகு சிறிது ஆசுவாசப் படுத்திக்கொள்வது போன்ற விஷயங்கள் மிகவும் முக்கியமாய்க் கவனிக்கத் தக்கவை. ஜலத்தில் கைகளும் கால்களும் ஏககாலத்தில் வேலை செய்யும்போது, கால்கள் இரண்டாவது, மூன்றாவது படங்களில் உள்ளபடி வேலை செய்கின்றன. நன்றாக நீந்த வேண்டும் என்றால், ஜலத்தில் சுலபமாக மிதக்கும் ஏதாவது ஒரு வஸ்துவை வைத்துக்கொண்டு அப்பியாசம் செய்வது நல்லது.

வெகு நேரம் ஜலத்தில் இருப்பது சரியல்ல. முதலில் ஐந்து நிமிஷமே போதுமானது. பிறகு மெதுவாய் அதைப் பதினைந்து நிமிஷம் ஆக்கிக்கொள்ளலாம்.

மற்ற எந்தத் தேகாப்பியாசத்தையும் விட நீந்துவது உடலுக்கு நல்ல வலுவை அளிக்கிறது. நீந்துவதற்கு வயதுக்கணக்கில்லை; எந்த வயதில் வேண்டுமானாலும் நீந்தக் கற்றுக்கொள்ளலாம் என்றாலும் குழந்தைப் பருவம் அல்லது யௌவனத்தை எட்டிப் பார்க்கும் பருவம் இவைதான் மிகவும் ஏற்றவை என்று சொல்லலாம். நீந்தக் கற்றுக்கொள்ளும்போது மூச்சை அடக்குவது, கைகளை ஜலத்துக்குமேல் தூக்கி வைத்துக் கொள்வது அல்லது நீரில் தத்தளிப்பது இவை எல்லாம் மிகவும் பிசகு. ஜலத்தைக் காட்டிலும் மனித தேகம் லேசானது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த விஷயம் ஞாபகத்தில் இருந்தால் ஏதாவது திடீர் விபத்தாக நேர்ந்தாலொழிய, நீரில் சாதாரணமாக யாரும் முழுகிப் போய்விட மாட்டார்கள்.

குழந்தைகள் நீந்தக் கற்க வேண்டும் என்பதைப் பெற்றோர் முக்கியமாகக் கருதவேண்டும். ஏனென்றால் நீந்துவதிலுள்ள பெரிய விசேஷம் ஜலத்தில் முழுகிப் போவதிலிருந்து பல உயிர்களை இதனால் காப்பாற்ற முடியும். பிற உயிர்களை மட்டுமென்ன, கற்பவன் தன் உயிரையே கூடக் காப்பாற்றிக்கொள்ளலாம் அல்லவா?

பாபுராவ் பதில் சொல்லுகிறுர்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபில்மிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபில்மிண்டியா' ஜூன் '53 இதழில் வெளியானவை.

கேள்வி: எப்போது ஒருவர் தம் மனைவியின் பெயரால் நிலம் வாங்குவார்?

பதில்: தம் பெயரால் பணம் கடன் வாங்குகிறபோது.

* * *

கே: பசுக்கள் பேசுவதாக இருந்தால்?

ப: மனிதர்கள் பாலைத் திருடுகிறுர்களென்று குறை கூறும்.

* * *

கே: மனிதன் நிர்வாணமாகப் பிறக்கிறுன். செத்துப் போகும் போது மட்டும் அவனை ஏன் மூடி விடுகிறுர்கள்.

ப: வாழ்நாளில் அவன் செய்யும் பாவங்களின் அடையாளங்கள் பார்க்கத் தகாதவை.

* * *

கே: பெண்மணிகள் மறந்து மன்னிப்பார்களா?

ப: ஆஹா! ஆனுல் அதே வேகத்தில் நினைந்து இரங்குகிறுர்கள்.

* * *

கே: இந்தியாவின் தலைநகராக இருக்க டில்லிக்குத் தகுதி உண்டா?

ப: இல்லை. படையெடுப்பவர்களுக்கு அருகில் இருக்கிறது. சரித்திரத்தில் எத்தனையோ தடவை அது வீழ்ச்சி பெற்றிருக்கிறது. திரும்பத் திரும்ப நடந்ததே நடப்பதென்பது சரித்திரத்தின் ஆபாசமான பழக்கம். பூனுதான் இந்தியாவின் தலை நகரமாக இருக்க வேண்டும்.

* * *

கே: கடவுளை விலைக்கு வாங்கலாமா?

ப: எப்போதுமே வாங்கலாம். பக்தியினுல் அவரை வாங்கலாமே?

* * *

கே: பெல்ஜியத்தில் சில மாணுக்கர்கள் ரேஷன் கார்டுகளைத் திருடியதால் மரண தண்டனையை அடைந்தார்களாம். இந்தியாவில் அப்படிச் செய்கிறவர்களுக்கு அதே தண்டனை தரக்கூடாதா?

ப: இந்தியாவில் திருடுவதற்கு ரேஷன் தானியங்களே இல்லாமையால் லட்ச லட்சமாக மரண தண்டனை பெறுகிறுர்களே!

* * *

கே: இந்த உலகில் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது. நான் அதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: நல்ல பெயரெடுக்க வேண்டுமென்பது நல்ல ஆசைதான்; அதற்காக விளம்பரம் எதற்காக? நல்ல காரியத்தைச் செய்துகொண்டே போங்கள். உலகத்தைப்பற்றிக் கவலைப்படாதீர்கள்.

* * *

கே: உருதுக் கவிதை எத்தகையது?

ப: வார்த்தைகளில் கொட்டிய உணர்ச்சி!

ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிருபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

நானும் பரதேசிதானே? ஒரு சமயம் ஆசிரமத்தில் ஏதோ விசேஷம் நடைபெற்றது. ஆராதனைகள் நடந்த பிறகு சாப்பாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்தன. ஜனங்கள் கூட்டமாக இருந்தார்கள். சாப்பிடும் பொருட்டு எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு போனார்கள். கூட்டம் சமாளிக்க முடியாத அளவுக்கு இருப்பதைக் கண்டு ஆசிரமத்தைச் சார்ந்த ஒருவருக்குக் கோபம் வந்துவிட்டது. யாரை அவர் கோபித்துக்கொள்வார்? ஏழைப் பரதேசிகளே அகப்பட்டார்கள். "இப்போது பரதேசிகள் உள்ளே நுழைய வேண்டாம். பிறகு வரலாம்" என்று கடுமையாகச் சொன்னார். பரதேசிகள் உள்ளே வர முடியவில்லை.

சாப்பிடும் இடத்துக்கு மற்றவர்கள் வந்து அமர்ந்தார்கள். இலையும் போட்டாகிவிட்டது. ஆனால் ரமண பகவானைக் காணவில்லை. ஆசிரமத்தில் வழக்கமாக இருக்கும் இடங்களில் தேடினார்கள். எங்கும் காணவில்லை. ரமண பகவான் இல்லாமல் சமாராதனை எப்படி நடக்கும்? ஆளுக்கு ஒரு பக்கமாகத் தேடலானார்கள். கடைசியில் ஆசிரமத்துக்கு நெடுந்தூரத்தில் ஒரு மரத்தின் நிழலில் அந்த முனிவர்பிரான் அமர்ந்திருப்பது தெரியவந்தது. ஆசிரமத்தைச் சார்ந்தவர்கள் அவரை அணுகி, "பகவான் ஏன் இங்கே வந்து உட்காரவேண்டும்? அங்கே சாப்பிடுவதற்கு எல்லோரும் காத்துக்கொண்டிருக்கிறார்களே!" என்று சொன்னார்கள்.

"பரதேசிகள் இப்போது உள்ளே வரவேண்டாம் என்று சொன்னார்களே. நானும் ஒரு பரதேசிதானே?" என்று அவர் கேட்டார்.

கேட்டவர்கள் தங்கள் பிழைக்கு வருந்தினார்கள். ரமண பகவான் இன்னார் இனியார் என்ற பேதமே இல்லாமல் இருப்பவர். அவ்வாறு மற்றவர்களும் இருக்க வேண்டுமென்பதை வாய்மொழியாக வற்புறுத்தவதில்லை. தம்முடைய செயலாலே உணர்த்திவிடுவார். (வாழ்வு)

வைத்தியர் சொன்ன மருந்து: ஒருநாள் ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் ஆசிரமத்தக்கு வந்தார். அவருக்கு ரமண பகவானிடம் மிகுதியான பக்தி உண்டு. பகவானுக்குத் தேக ஆரோக்கியமும் வலிமையும் உண்டாகும்படி ஒரு மருந்து பண்ணிக்கொடுக்க வேண்டுமென்று அந்த வைத்தியருக்கு

ஆசை. அந்த லேகியத்துக்கு வேண்டிய சரக்குகளையெல்லாம் ஒரு காகிதத்தில் வரிசையாக எழுதிக் கொண்டுவந்து ரமண மகரிஷியிடம் காட்டினார். அந்த முனிவர் அதிலுள்ள சரக்குகளை யெல்லாம் ஒன்றுவிடாமல் நிதானமாகப் பார்த்தார். 'இது இதற்கு எடுத்தது,' 'இது இன்ன வியாதியைப் போக்கும்' என்று அந்தச் சரக்குகளைப்பற்றி வைத்தியர் பேசிக் கொண்டே வந்தார். கடைசியில், பகவான், "இதெல்லாம் சரி; இத்தனை சரக்குகளைக் கொண்டு செய்யப் போகிற மருந்து யாருக்கு?" என்று கேட்டார்.

வைத்தியர், "பகவானுக்காகத் தான்" என்றார்.

"அப்படியா? பெரிய பட்டியலாக இருக்கிறதே. ஆனால் இவற்றையெல்லாம் வாங்குவதற்குப் பணம் வேண்டுமே. பத்து ரூபாய்க்கு மேல் ஆகும்போல் இருக்கிறதே! அதற்கு நான் எங்கே போவேன்?"

பக்கத்திலே இருந்த ஒருவர், "இதெல்லாம் யாருடையது?" என்று சுற்றியுள்ள பொருள்களைச் சுட்டிக் காட்டினார்.

பகவான் புன்னகையுடன் பேசலானார்: "ஆம்; எல்லாம் இருக்கின்றன. ஆனால் எனக்கும் இவற்றிற்கும் என்ன சம்பந்தம்? காலணா வேண்டுமானால் சர்வாதிகாரியை யல்லவா நான் கேட்க வேண்டும்? நான் எப்படிப் போய்க் கேட்பேன்! மணியடித்தவுடன் நான் போனால் எனக்குக் கொஞ்சம் சோறு போடுகிறார். மற்றவர்கள் சாப்பிடும் போது நானும் போய்ச் சாப்பிட்டு விட்டு வருகிறேன். கொஞ்ச நேரம் கழித்துப் போனால் எனக்கு அந்தச் சோறும் கிடைக்காது. எனக்குப் போடுகிறதைக்கூடக் கடைசியில்தான் போடுகிறார்கள்."

பாவம்! அந்த வைத்தியர் இந்தப் பேச்சைக் கேட்டு அருண்டு போய்விட்டார்.

"நான் வெறுமனே இந்தப் பட்டியலைக் காட்டினேன். வேண்டிய சரக்குகளை நானே வாங்கிக் கொள்கிறேன்" என்றார்.

பகவான் அதோடு விடவில்லை. "நீங்கள் வாங்கி விடலாம். அந்த மருந்து எனக்கு நல்லதென்று சொன்னீர்கள். அப்படியானால் எல்லாருக்குமே அது நல்லதாகத் தான் இருக்கவேண்டும். அதை எல்லாருக்குமே கொடுப்பீர்களா?" என்று கேட்டார்.

அருகில் இருந்தவர்கள், "எங்களுக்கெல்லாம் எதற்கு, சுவாமி?" என்றார்கள்.

"எதற்காகவா? நீங்களெல்லாம் உழைக்கிறீர்கள். தேகத்தால் சிரமப்படுகிறீர்கள். உங்களுக்குத் தான் தேக புஷ்டியை உண்டாக்கும் மருந்து வேண்டும். நான் சும்மா இங்கே உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். வேலை செய்யாமல் சாப்பிடுகிறேன். எனக்கு எதற்கு மருந்து? எனக்கு மருந்து வேண்டும் என்றால் எல்லாருக்குமே வேண்டும். என்னைக் காட்டிலும் மற்றவர்களுக்குத்தான் முக்கியமாக வேண்டும்" என்று பகவான் கூறியதைக் கேட்ட வைத்தியர் பேசாமல் சரக்குப் பட்டியலை மடியில் வைத்துக்கொண்டார்.

(வாழ்வு)

மரணபயம்:

கேள்வி: பக்தன் மரண சமயத்தில் என்ன செய்ய வேண்டும்?

பதில்: பக்தன் சாவதில்லை; முன்பே செத்துப்போனவன். எவனும் தன் வாழ்வில் எதை அதிக

மாக நினைக்கிறானோ அதையே இறுதிச் சமயத்தில் நினைக்கிறான். உலகப் பற்றுடையவன் உலகப் பொருள்களையே நினைக்கிறான். பக்தன் பக்தி நினைவையே கொள்கிறான். ஆனால் ஞானியோ எந்தவிதமான எண்ணமும் இல்லாதவனாகையால் அவன் இருந்தபடியே இருக்கிறான். அவனுடைய எண்ணங்கள் முன்பே மடிந்து விடுகின்றன; அப்போதே அவன் உடலும் மடிகிறது. அதனால் அவனுக்கு மரணம் என்பதே இல்லை.

மனிதர்கள் மரணத்தைக் கண்டு அஞ்சுவதற்குக் காரணம் தங்கள் உடைமைகளை விட்டுப் போக வேண்டுமே என்ற கவலைதான். அவர்கள் தூங்கும்போது அவர்களுக்கு அத்தகைய கவலை இருப்பதில்லை. உறங்குவதும் ஒருவகையில் மரணத்துக்குச் சமானமானாலும், மறுநாள் விழித்து எழுந்தவுடன் தங்கள் உடைமைகள் தங்களுக்குக் கிடைக்கும் என்ற எண்ணத்தால் அவர்களுக்குக் கவலை உண்டாவதில்லை. ஞானிக்கோ நம் உடைமை என்ற பற்றோ வேறு எதுவோ இல்லாமையால் மரணத்தைப்பற்றிச் சிறிதளவேனும் பயம் உண்டாவதில்லை. மரணம் உண்டாவதற்கு முன் இருந்தபடியே மரணம் சம்பவித்த பிறகும் இருக்கிறான். (வாக்கு)

அத்தைக்கு மோட்சம் உண்டா?

"அப்பா, சிங்கம் மோட்சத்துக்குப் போகுமோ?"
"போகாது."
"அத்தை மோட்சத்துக்குப் போவாளோ?"
"கட்டாயம் போவாள்."
"அத்தையைச் சிங்கம் விழுங்கிவிட்டால், அப்போது?"

—'ஜெம்மெட்,' கோப்பென்ஹேகென்.

கலியாணப் பிள்ளையின் தந்தி

கலியாணப் பிள்ளை முகூர்த்தத்துக்கு முந்திய நாள் அதிகமாகத் தூங்கிவிட்டார். ஸ்டேஷனுக்கு அவசர அவசரமாக ஓடினார். வண்டி தவறிவிட்டது. உடனே தபாலாபீஸுக்கு ஓடிப் பெண் வீட்டாருக்கு ஒரு தந்தி அடித்தார்: "வரத் தாமதம் ஏற்பட்டுவிட்டது. நான் வந்து சேருகிறவரைக்கும் கலியாணத்தை நடத்த வேண்டாம்."

—'கேப் ஆர்கஸ்'

தவணை வேண்டும்

"என்னிடம் பத்து வெள்ளிப் பணம் கைமாற்று வாங்கினாயே. மறந்து விட்டாயோ?"

"இன்னும் மறக்கவில்லை. அதற்குக் கொஞ்சம் தவணை கொடு."

—'மகாஸினெட்,' ஆஸ்லோ.

அணுக்குண்டில் ஹிட்லர் தோல்வி

★

அணுக்குண்டு ஆராய்ச்சிப் போட்டாபோட்டியில், ஹிட்லரின் ஆட்கள் தோற்ற கதையைக் 'காரொனெட்' பத்திரிகையில் பீட்டர் வைடென் ரஸமாக எழுதியிருக்கிறார். அதை ஆதாரமாகக்கொண்டது இந்த விவரம்.

இரண்டாம் உலக யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. 1944 - ஆம் ஆண்டு பிறக்கப் போகிற சமயம். சிக்காகோ யூனிவர்ஸிட்டியில் அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டுவந்த டாக்டர் நார்மன் ஹில்பெரி தம் வீட்டில் கையும் கடிகாரமுமாக டெலிபோன் எதிரே எதையோ எதிர்பார்த்தபடி கவலையோடு உட்கார்ந்திருந்தார். அவர் மனைவியும் கூடவே இருந்தாள்; அணுக்குண்டு தயாரிப்பது சாத்தியம் என்றும், அது எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்றும் அவருக்குத் தெரியும்.

போன் மணி 'கிரீங் கிரீங்' என்று அடித்தது. பரபரப்போடு ஹில்பெரி ரிஸீவரை எடுத்துக் கவனித்தார். யாரோ புது வருஷ வாழ்த்துக் கூறினார்கள். அவ்வளவுதான். அவர் எதிர்பார்த்தபடி வேறொரு பயங்கரமான செய்தியும் வரவில்லை. அப்படி வர்திருந்தால் ஜெர்மனிதான் கட்டாயம் ஜயித்திருக்கும்.

இங்கிலாந்தில் இருக்கும் நேச தேசத் துருப்புகளின்மேல் ஹிட்லர் அணுக்குண்டு வீசினார் என்ற தகவல் வரப்போகிறதோ என்றுதான் அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். அமெரிக்காவிலுள்ள விஞ்ஞான நிபுணர்களெல்லாருக்குமே, நிச்சயமாக ஜெர்மானியர்கள் அணுக்குண்டு ஆராய்ச்சியில் முன்னேறிவிட்டார்கள் என்ற அபிப்பிராயம் தான்.

இப்படி அமெரிக்காவுக்கும் ஜெர்மனிக்கும் அணு ஆராய்ச்சி சம்பந்தமாக ரகசியப் போட்டி மும்முரமாக நடந்துவந்தது. நாலைந்து முக்கியஸ்தர்களுக்கு மட்டுமே இந்த விஷயம் தெரியும். ஆகவேதான் கிறிஸ்துமஸின்போதோ புது வருஷ ஆரம்பத்திலோ ஏதாவது விபரீதம் நடக்கும் என்று இந்த அமெரிக்க விஞ்ஞானிகள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். வெளிநாடுகளில் நேசதேச ராணுவ வைத்தியப்படையினரிடம், 'எக்ஸ்-ரே' ஃபிலிம் சுருள் கொடுத்து, அதில் ரேடியோ-ஆக்டிவிடி காரணமாக ஏதாவது படலம் விழுகிறதா என்று கவனிக்கும்படி ரகசியத் தகவல் அனுப்பியிருந்தார்கள். பாதுகாப்பாகச் சில கருவிகளையும் பிறசாதனங்களையும் இங்கிலாந்துக்கு அனுப்பியிருந்தார்கள். டாக்டர் ஹில்பெரி ஊர்ஜிதம் செய்ததும் விஞ்ஞானிகள் சிலர் உடனே விமானத்தில் அங்கே

சென்று சேதத்தை நேரில் கவனித்துத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வதென்று முன்னேற்பாடு.

அமெரிக்கா மேலேயே ஜெர்மன் விமானங்கள் அணுக்குண்டு வீசுமோ என்றுகூடக் கவலைப் பட்டு வந்த காலம் அது. ஆகவே, அமெரிக்காவில் முக்கியமான நகரங்களிலெல்லாம் பாதுகாப்புச் சாதனங்களை உடனே பயன்படும் படி அனுப்பி வைத்திருந்தார்கள்.

இப்போது ருஷியாவும் அமெரிக்காவும் அணுக்குண்டு உற்பத்தியில் போட்டா போட்டி இடுவதைப் போல் அப்போதைய நிலையைச் சொல்வதற்கில்லை. ஜெர்மனியை இந்தப் போட்டியில் எவ்வளவு விரைவில் வென்றுவிடுவது என்று இரவு பகலாக யோசிக்க வேண்டியிருந்தது.

ஜெர்மானியர் அதுவரை முன்னேறியிருப்பதைப்பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து இன்னும் என்ன என்னவெல்லாம் கண்டு பிடித்திருப்பார்களோ என்ற திகில் அமெரிக்கருக்கு இருந்தது. யுத்தம் தொடங்குவதற்கு முன்பே அமெரிக்கர்கள் ஜெர்மனியில் எந்த ஆராய்ச்சிச்சாலையிலும் நுழைந்து விஷயங்களை அறிய முடியாதபடி தடை இருந்துவந்தது. ஜெர்மனியில் கிராஃபைட் என்ற தாதுப் பொருளைப் பல இடங்களில் அடுக்கி வைத்திருந்தார்கள்; இவை அணு ஆராய்ச்சிக்கு மிகவும் அவசியமானவை. இந்தமாதிரி இடங்களில் அமெரிக்கர் நெருங்கக்கூட முடியாதபடி ஜெர்மன் சர்க்கார் கவனித்து வந்தது. அணு ஆராய்ச்சியின்போது சில நாஜி விஞ்ஞானிகள்கூட இறந்துவிட்டதாக ஒரு வதந்தி பரவி வந்தது.

பிறகு வி-1, வி-2 வெடிகளைப் பற்றித் தகவல் கிடைத்தது. அவற்றில் அணுச் சக்தியினால் இயங்கும் குண்டுகள் இருக்கும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் எதிர்பார்த்தார்கள். விமானமூலம் பிரான்ஸில் கவனித்து வந்த சிலர், புதுவகை விமானப் பாதுகாப்புச் சாதனங்களை அங்கே ஜெர்மானியர் கட்டிவருவதாகத் தகவல் தெரிவித்தார்கள். அவை உண்மையில் ராக்கெட் அனுப்பும் ஸ்தலங்களே ஒழிய வேறொன்றுமில்லை. ஆனால் அமெரிக்கர், அணு சம்பந்தமான வேறு ஏதோ புதிய ஆயுதங்கள் தயாரிக்கும் இடம் என்று எண்ணினார்கள். இன்னும் பிரமாதமான ரகசிய ஆயுதமெல்லாம் தம்மிடம் இருப்பதாகவும் அவற்றைக் கொண்டு யுத்தத்தில் தாம் ஜயித்து விட முடியும் என்றும் ஹிட்லர் வேறு மார் தட்டி வந்தார்.

'இதென்னடா தொல்லையாகப் போய்விட்டது' என்று சிக்காகோ விஞ்ஞானிகள் தலையில் கை வைத்துக்கொண்டார்கள். அவர்களில் அநேகம் பேர் ஐரோப்பாவில் பயிற்சி பெற்றவர்கள்; ஜெர்மன் விஞ்ஞான ஆராய்ச்சி என்றால் லேசல்ல என்று அவர்களுக்குத் தெரியும். 'நேச நாடுகள் தோற்றால் அணுக்குண்டு தயாரிக்க முயன்றவர்கள் என்று தெரிந்து விடப்போகிறதே' என்ற திகில் வேறே. அதனால் தஸ்தாவேஜிகளில் தங்கள் விரல் அடையாளத்தைப் பதிவு செய்யக்கூடத் தயங்கினார்கள்.

நோபல் பரிசு பெற்ற டாக்டர் ஆர்தர் எங்காம்டன் என்ற அமெரிக்க விஞ்ஞானி, "நம்மை விட அவர்கள் அந்த ஆராய்ச்சியில் வெகு தூரம் முன்னேறியிருக்

கிறார்கள் என்று 1939-இலேயே எனக்குத் தெரியும். 50 விஞ்ஞானிகள் ஜெர்மனியிலே இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்ததாகத் தகவல் கிடைத்தது. 1941-இல் தான் அமெரிக்காவில் அந்த நிலைக்கு நாம் வர முடிந்தது. 1943-இல் ஸ்விட்ஜர்லாந்திலிருந்து வந்த ஒரு கடிதமூலம் 'செயின் ரியாக்ஷன்' (ஓர் இடத்தில் குண்டு வெடித்ததும் தொடர்ந்து தானாகவே அணுச் சக்தியால் பல அணுக்களும் வெடித்துக்கொண்டே போகும்) முறையை ஜெர்மானியர் கண்டுபிடித்து விட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. ரேடியோ ஆக்டிவ் பொருள்களைக் கொண்டு எந்தச் சமயத்தில் ஜெர்மானியர் நம்மைத் தாக்குவார்களோ என்று திகில் பட்டுக்கொண் டிருந்தேன்'' என்று அப்போதிருந்த நிலையைச் சமீபத்தில் விவரித்தார்.

ஜெர்மன் விஞ்ஞானப் பத்திரிகைகள் எவ்வளவுதான் அலசி ஆராய்ந்தும் விஷயத்தைக் கண்டறிந்து விட்டதாகச் சொல்ல முடியவில்லை. ஓரளவுக்கு அமெரிக்கர் கண்டுபிடித்த விவரம் வெளியானால் உடனே அதெல்லாம் ஏற்கனவே தங்களுக்குத் தெரிந்தது தான் என்றுபடும்படி ஜெர்மன் பத்திரிகைகள் அவற்றைப்பற்றி விரிவாகக் கட்டுரைகள் வெளியிட்டன.

உரேனியம்பற்றிய ஆராய்ச்சியைத்தான் ஜெர்மானியர் முக்கியமாகச் செய்துவந்தார்கள். பிரெஞ்சு அணு ஆராய்ச்சியாளரான டாக்டர் ஜோலியட் க்யூரி தம்பதிகளின் பாழடைந்த லேபரட்டரியைப் பார்வையிட்ட ஒரு ஜெர்மன் ஜெனரல் உடனே அதைச் சீர்திருத்தி ஆராய்ச்சி வேலைக்குப் பயன்படும்படி செய்தார். நார்வேயில் நேசதேச விமானங்கள் தவிடு பொடியாக்கிய நீர் உற்பத்தி யந்திரங்களை வெகு விரைவில் செப்பஞ் செய்து பழையபடி இயங்கும்படி செய்துவிட்டார்கள் ஜெர்மன் விஞ்ஞானிகள். ஆனால் அணு ஆராய்ச்சி சம்பந்தமாக ஒரு விஷயங்கூட வெளியாகவில்லை.

பிறகுஜெர்மன் விஞ்ஞானியான டாக்டர் வெர்னர்ஹீஸன்பெர்க் என்ற அணு ஆராய்ச்சி நிபுணரை எப்படியாவது சந்தித்து அவரிடமிருந்து விஷயத்தை அறிய யாரையாவது அனுப்பவேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஆனால் அமெரிக்க ராணுவ அதிகாரிகள் அது கூடாது என்று சொல்லிவிட்டார்கள். விஷயத்தை அறியப் போய் இங்கிருந்து போகிறவர் வாய் தவறிப் புதிதாக ஏதாவது தகவலை வெளியிட்டுவிடப் போகிறாரே என்றுதான் இப்படிச் செய்தார்கள். நாஜிகளின் ரகசியங்களை அறிந்த விஞ்ஞானி ஒருவரை எப்படி

யாவது தந்திரமாக ஜெர்மனியிலிருந்து கடத்திக்கொண்டு வருவது என்றுகூட யோசித்தார்கள். ஆனால் ராணுவ நிபுணர்கள் அப்படி உயிரோடு கடத்திவருவது சாத்தியமில்லை என்று அந்த யோசனையை ஏற்கவில்லை.

1942 டிஸம்பர் 2-ஆம் தேதி டாக்டர் என்ரிகோ ஃபெர்மி என்ற அமெரிக்க அணு விஞ்ஞானி 'செயின் ரியாக்ஷன்' முறையை நேரில் நடத்திக் காட்டினார். ஆகவே, அணுக்குண்டு என்பது சாத்தியம் என்று தெரிந்தது. ஆயினும் ஜெர்மானியர் இதில் எவ்வளவு முன்னேறியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. 1943-க்குள் எப்படியாவது ஜெர்மானியர் சரியானபடி அணுக்குண்டு தயாரித்து விடுவார்கள் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் எதிர்பார்த்திருந்தார்கள். 1944 ஜூன் மாதம் நார்மண்டியின்மேல் நேச தேசத் துருப்புகள் படையெடுத்தபோது ஒரே பரபரப்பு. ஆனால் அங்கே அவர்கள் இறங்கியபோது ஜெர்மானியர் அணுக் குண்டு எதுவும் வீசவில்லை.

லண்டனில் முதல் முதல் V-1 குண்டு விழுந்ததும் சேதத்தை நேசதேச விஞ்ஞானிகள் கூர்ந்து பரிசோதித்தார்கள். அணுச்சக்தி அதில் துளிக்கூடப் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

அப்போது ஐக்கிய அமெரிக்க விமானக் குண்டு இலாகா அதிகாரியான மேஜர்-ஜெனரல் லெஸ்லி ஆர். க்ரோவ்ஸ் என்பவர் ராணுவ இலாகாவிடம் ஒரு யோசனையைச் சமர்ப்பித்தார். ஜெர்மனியில் நேச தேச ராணுவம் நுழையும்போது கூடவே விஞ்ஞானிகள் அடங்கிய ஒரு கோஷ்டி அங்கே அணு ஆராய்ச்சி சம்பந்தமாக என்ன நடந்திருக்கிறது என்று ரகசியமாகக் கவனிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்படியே ஏற்பாடாயிற்று. ஹாலந்திலிருந்து 1927-இல் அமெரிக்காவுக்கு வந்த டாக்டர் கூட்ஸ்மிட் என்ற பிரபல விஞ்ஞானி அந்தக் கோஷ்டிக்குத் தலைமை வகித்தார். அவருக்கு ஜெர்மன் முதலிய பல மொழிகள் தெரியும். இன்னும் சில விஞ்ஞானிகள் கோஷ்டியும் ராணுவத்தாரோடு சென்றாலும் அந்த விஞ்ஞானிகளுக்கு இந்த ரகசியக் கோஷ்டியைப்பற்றி ஒன்றுமே தெரியாது.

ஸ்ட்ராஸ்பர்க் யூனிவர்ஸிட்டியில் சில தஸ்தாவேஜுகளைப் பரிசோதித்தபோது இன்னும் ஜெர்மானியர் 'செயின் ரியாக்ஷன்' (அணுச் சக்தியால் தொடர்ந்து வெடிக்கும் முறை) சம்பந்தமாக ஒன்றும் செய்யவில்லை என்று தெரிந்தது. இருந்தாலும் அமெரிக்க அதிகாரிகளுக்குச் சந்தேகம் சந்தேகந்தான். ஒரு ஜெர்மன் கிராமத்தில் முதல் முதலாக நாஜிகள் ஓர் ஆராய்ச்சிச் சாலையில் யுரேனியம் அடுக்கி வைத்திருப்பதைக் கண்டார்கள். பாரஃபின் துண்டுகள், அணு விஞ்ஞானம் சம்பந்தமான கருவி ஒன்று இவையெல்லாம் சிதறிக் கிடந்தன. பிரிக்கெட் என்ற நிலக்கரி அடுக்குகளும் கிடைத்தன. அவற்றில் யுரேனியம் ஆக்ஸைடு கலந்திருந்தது. இருந்தாலும் அதெல்லாம் அவ்வளவு முக்கியம் என்று டாக்டர் கூட்ஸ்மிட்டுக்குப் படவில்லை.

ஜெர்மனி தோல்வி அடைவதற்கு இரண்டு வாரங்களுக்கு

முன் ஹெஷிங்கென் என்ற தென் ஜெர்மன் நகரில் சாராயம் தயாரிக்கும் இடம் ஒன்றிலும், ஒரு பஞ்சாலையிலும், குகை ஒன்றிலும் சோதித்ததில் விஷயம் தெரிந்தது. ஏராளமான யுரேனியமும் இன்னும் பல முக்கியமான பொருள்களும் கிடைத்தன. மல ஜலக் குழி ஒன்றில் நாஜி அணு ஆராய்ச்சி சம்பந்தமான தஸ்தாவேஜிகளெல்லாம் ஒரு டப்பியில் அடைத்து ஸீல் போட்டு அடியில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தார்கள்.

1939-இல் பியானோ தந்திகளின் துடிப்பைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி வந்த ஒரு புரொபஸர், ஜெர்மன் ராணுவத்துக்கு யுரேனியம் குண்டு தயாரிக்கும் வேலையில் ஈடுபட்டார். எங்கோ ஒரு காட்டுப் பிரதேசத்தில் அவர் இப்படி ஈடுபட்டிருப்பது முக்கியமான ஜெர்மன் விஞ்ஞானிகளுக்குக்கூடத் தெரியாது. ஆனால் அவருக்கு அந்த வேலையில் மனம் செல்லவில்லை. ஆகவே, வேறு யாரையோ அதைக் கவனித்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டார். அதே சமயத்தில் ஜெர்மன் கல்வி மந்திரி இலாகாவைச் சேர்ந்த ஒரு புரொபஸர் ஆறு பிரபல விஞ்ஞானிகளை அழைத்து 'யுரேனியம் கிளப்' என்ற ரகசிய ஸ்தாபனம் ஒன்றை நிறுவினர்.

இன்னொரு ஜெர்மன் தொழில் நிபுணரும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டார். தபால் இலாகாவில் செலவிடாமல் ஒரு நிதி குவிந்திருந்தது. அவர் அந்தத் தொகையை இந்த ஆராய்ச்சிக்கு உதவும்படி தபால் மந்திரியைக் கேட்டுக் கொண்டார்.

இப்படிப் பல பேர் போட்டி போட்டுக்கொண்டு இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார்கள். இருந்தாலும் அதற்கு நிறைய மூலதனம் தேவையாக இருந்தது. நாஜி கட்சியைச் சேர்ந்த பலர் இதில் தலையிட்டு வந்ததால் ஆராய்ச்சி தடைப்பட்டு வந்தது. ஆயினும், ஜெர்மன் மூளைக்கெட்டாதது வேறு யாருக்கு எட்டப் போகிறது என்று இருந்துவிட்டார்கள். ஜெர்மனி தோல்வியை ஒப்புக்கொள்வதற்கு முந்திய நாள்தான் 'செயின் ரியாக்ஷன்' என்பது சாத்தியம் என்று கண்டுபிடித்தார்கள். அவர்களுக்கு ஒரே உற்சாகம். ஜெர்மனி தோற்றாலும் சமாதானம் ஏற்படும் போது இந்த ரகசியம் தங்களுக்குத் தெரியும் என்பதால் நேச நாடுகளின் ஒப்பந்த ஷரத்துக்கள் அவ்வளவு கடுமையாக இராதபடி பார்த்துக்கொள்ளலாம் என்று அவர்கள் எண்ணினர்கள்.

அமெரிக்க ரகசிய விஞ்ஞானிகள் கோஷ்டியிடம் இவர்கள் சிக்கியதும் அணு ஆராய்ச்சியைப் பற்றி இவர்களை விசாரித்தார்கள். இந்த ஜெர்மன் விஞ்ஞானிகள், "சரி, நமக்கு மதிப்பு இருக்கிறது" என்று பெருமைப்பட்டுக் கொண்டார்கள். நோபெல் பரிசு பெற்ற ஜெர்மன் விஞ்ஞானியான டாக்டர் ஹீஸன்பர்க் தம் லேபரட்டரிக்கே கூட வரும்படி அமெரிக்க விஞ்ஞானிகளை அழைத்தார். அங்கே யுரேனியத்தைப்பற்றி விவரமாகச் சொல்வதாகத் தெரிவித்தார்.

லண்டனில் ஒரு மாளிகையில் இந்த ஜெர்மன் விஞ்ஞானிகளையெல்லாம் காவலில் வைத்திருந்தார்கள். 1945 ஆகஸ்ட் 6-ஆம் தேதி ஹிரோஷிமாவில் முதல்

அமெரிக்க அணுக்குண்டு வெடித்த செய்தியை ரேடியோவில் கேட்டதும் இவர்கள் திகைத்துவிட்டார்கள். முதலில் அவர்கள் இதை நம்பவில்லை. 'நாமே இதுவரையில் அப்படி ஒன்றைக் கண்டுபிடிக்கவில்லை. இது வெறும் பிரசாரம்' என்றுதான் எண்ணினார்கள். ஆனால் விரிவான தகவல் வெளியானதும் இவர்களில் இளம் விஞ்ஞானிகள் பெரியவர்களைக் குறை கூறினார்கள்; மொத்தமாக யுரேனியம் அடுக்குகளையே அணுக் குண்டாகப் பயன்படுத்தியிருக்கவேண்டும் என்று அவர்கள் முதலில் முடிவு கட்டினார்கள். ஆனால், 'அவ்வளவு கனத்தை விமானத்தில் எடுத்துச் செல்ல முடியாது; அதிக அளவு யுரேனியம் உபயோகித்தால் அப்படி வெடிக்காது' என்று அவர்கள் யோசித்துப் பார்க்கவில்லை.

கடைசியில் ஹீஸன்பெர்க், அந்த யுரேனியம் அடுக்குகளைக் கொண்டு புளூடோனியம் என்ற புதிய நுண்பொருளை உண்டுபண்ணின பிறகுதான் இப்படி ஓர் அணுக்குண்டைச் செய்ய முடியும் என்று அவர்களுக்கு விளக்கினார். அப்போதுதான் இந்தப் போட்டியில் தாங்கள் தோற்றுவிட்டது ஜெர்மன் விஞ்ஞானிகளுக்குப் புரிந்தது.

'சிறுபஞ்ச மூலம்' - நூலும் மருந்தும்

'மஞ்சரி' ஆனி இதழில் 'க்விஸ்' 2-ஆம் கேள்வியான "'சிறுபஞ்ச மூலம்' என்பது வியாதியா, நூலா, மருந்தா?" என்பதற்கு 'நூல்' என்று பதிலளித்திருக்கிறீர்கள்.

மருந்தாக உபயோகமாகும் ஐந்து வேர்களின் கூட்டுக்கும் 'சிறுபஞ்ச மூலம்' என்ற பெயருண்டு. கண்டங்கத்திரி, சிறு வழுதணை, பெருமல்லி, சிறுமல்லி, நெருஞ்சில் என்ற ஐந்து செடிகளின் வேர்களே அவை. வாதம் முதலான தோஷங்களைச் சமன் செய்வதே இவற்றின் ஒளஷத குணம்.

இது தவிரப் 'பெரும் பஞ்ச மூலம்' என்ற பெயருள்ள ஐந்து வேர்களும் உண்டு. வில்வம், பெருங்குமிழன், தழுதாழை, பாதிரி, வாகை ஆகியவை அவை. அவை கப வாதங்களைப் போக்கும்.

'மத்யம பஞ்ச மூலம்', 'ஜீவன பஞ்ச மூலம்', 'த்ருண பஞ்ச மூலம்' என்ற பெயர்களுள்ள ஐந்து வேர்களின் கூட்டுக்கள் வேறு சிலவும் உண்டு.

—கே. ஆர். சீனிவாசன், காமாட்சிபுரம், குலசேகரநல்லூர்.

கடுமையான குரு

அநுபவம் என்பது கடினமான உபாத்தியாயர். அது பரீட்சையை முதலில் செய்கிறது; பிறகே பாடத்தைப் போதிக்கிறது.

பிரபல விகடகவி பீர்பாலின் யுக்தி எப்படித்தான் பலிக்கிறது!

ராணி ஏமாந்தாள்

பி. எம்.

அக்பர் பாதுஷாவின் காலத்தில் இந்துக்களுக்கும் முஸல்மான்களுக்கும் ஒற்றுமை வளர்ந்தது. அக்பர் சுத்த வீரர்; நியாய நிபுணர். ஆகவே, கவிகளுக்கும் கலைஞர் பலருக்கும் ஆதரவு தந்தார். அவருடைய ஆஸ்தானத்தைத் தேடிக் கவிஞர்களும் பாடகர்களும் கணக்கில்லாமல் வந்தார்கள். அவர்களில் கவியும் சூரனும் சாமர்த்தியசாலியுமான பீர்பாலிடம் அக்பருக்கு மிக்க அபிமானம் உண்டாயிற்று.

அக்பரின் ஆஸ்தானத்தில் பீர்பால் முதல் மந்திரியானது அக்பரைச் சார்ந்த பலருக்குப் பிடிக்கவில்லை; சமயம் கிடைத்தபோதெல்லாம் பீர்பாலைப்பற்றி அக்பரிடம் கோள் சொல்லி வந்தார்கள். ஆனால் உண்மையை அறிந்த அக்பர், அவர்கள் சொல்லிய புகாரை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதால் விட்டுச் சும்மா இருந்தார்.

அக்பரின் செய்கை சிலருக்கு ஆத்திரத்தையும் அவமானத்தையும் உண்டாக்கியது. அவர்கள் ராணியிடம் சென்று தங்கள் குறையைச் சொல்லிக் கொண்டார்கள். "மகாராணி, பீர்பால் முதல்மந்திரி பதவியில் இருக்கத் தகுதியற்றவன். பாதுஷா அவனை அந்தப் பதவியை விட்டு நீக்க வேண்டுமென்பது எங்கள் விருப்பம். அந்தப் பதவியிலிருந்து அவனை நீக்கித் தங்களுடைய தமையனாரை வைப்பது தங்கள்பொறுப்பு" என்றார்கள்.

இந்த யோசனை, ராணியின் மனத்தில் புகுந்து வெகு வேகமாக வேலை செய்யத் தொடங்கியது. அதுமுதல் அவள் பாதுஷாவிடம் கோபம் கொண்டதுபோல் நடித்தாள். தன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அவள் அவரிடம் முதலில் உறுதி மொழி பெற்றுக்கொண்டு பிறகு பீர்பாலை மந்திரிபதவியிலிருந்து நீக்கவேண்டுமென்று அடம் பிடித்தாள். அக்பருக்குக் கவலை உண்டாயிற்று. "ஏதாவது குற்றம் சாட்டியே பீர்பாலை வேலையிலிருந்து நீக்க வேண்டும்" என்றார். ராணி, "பாதுஷா அவர்களே, நீங்கள் என்னிடம் கோபித்துக்கொண்டிருப்பதாகப் பாசாங்கு செய்து வேறு மகலில் இரும். பீர்பால் என்ன விஷயம் என்று விசாரிக்கும்போது, 'எனக்கும் ராணிக்கும் மனஸ்தாபம். இப்போது அவளே நான் இருக்குமிடத்துக்கு வந்து என்னை அழைத்துப் போகும்படி நீர் வழி செய்யும். இல்லாவிட்டால் உம்மை மந்திரி பதவியிலிருந்து நீக்கிவிடுவேன்' என்று சொல்லும்" என்றாள். அக்பர் இந்த யோசனைக்குச் சம்மதித்தார்.

காப்பிரைட்: பிரஜாமத (கன்னடம்), பங்களூர்.

மறுநாள் அக்பர் தனியாக ஒரு மகலில் தங்கியிருப்பதைப் பீர்பால் அறிந்தார். உடனே அங்கே போனார். அக்பர் தமக்கும் ராணிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டதாகவும் ராணியே தம்மை வந்து அழைத்துப் போகும்படி பீர்பால் உபாயம் செய்யவேண்டுமென்றும் சொன்னார். இல்லாவிட்டால் பீர்பாலை வேலையிலிருந்து நீக்கவேண்டியிருக்குமென்றும் சொன்னார். பீர்பால் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு, "சரி, நாளையே ராணி தங்களை வந்து அழைக்கும்படி செய்கிறேன்" என்று சொன்னார்.

அன்று சாயங்காலம் பீர்பால் நம்பிக்கையான ஓர் ஆளைத் தருவித்துக் கீழ்க்கண்டபடி சொன்னார். "நான் நாளைக் காலையில் மகாராணியைப் பேட்டி காணப் போகிறேன். நான் போன பின்பு சற்று நேரத்துக்கெல்லாம் நீயும் அங்கே வா. என்னை வெளியே கூப்பிட்டு, 'பாதுஷா அந்தப் பெண்ணை மணக்கச் சம்மதித்து விட்டார். அவர் தனி மகலில் இருப்பதால், கல்யாணச் சடங்குகளை ரகசியமாகச் செய்ய நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. மகாராணி அவர்களுக்குச் செய்தி தெரியாமல் இருக்கவேண்டும்' என்று சற்று உரக்கவே ராணி காதில் படும்படி சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய்விடு" என்றார்.

ஏற்பாட்டின்படி மறுநாள் பீர்பால் ராணியின் அந்தப்புரத்துக்குப் போனார். ராணி இவரைக் கண்டவுடனேயே, தலை போனாலும் இங்கிருந்து நகரக் கூடாது என்று மனத்தில் நிச்சயித்துக்கொண்டாள். இருவரும் பொது விஷயங்கள் பலவற்றைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். முதல் நாள் சொன்னபடி பீர்பாலின் ஆள் வந்து தயங்கி நின்றான். பீர்பால் எழுந்து அவனை நெருங்கினார். அவர் சொல்லிக்கொடுத்த விஷயத்தை உரக்கவே அவன் பரபரப்போடு சொன்னான். இருவரும் பாதுஷாவின் மகலுக்குப் புறப்பட்டார்கள். இவர்கள் பேச்சை உற்றுக் கேட்ட ராணியும் இவர்கள் பின்னாலேயே ஓடினாள். ராணியை முன்னால் விட்டுப் பின் தங்கிய பீர்பால் பாதுஷாவிடம் சென்று தம் வேலை முடிந்ததென்று தெரிவித்தார். ராஜாவும் ராணியும் மிரள மிரள விழித்தார்கள்.

எது ஆராய்ச்சி?

'ஆராய்ச்சி' (ரிஸர்ச்) என்ற வார்த்தை சென்ற பத்து அல்லது பதினைந்து வருஷங்களில் மிகவும் தாராளமாய்ப் புழங்க ஆரம்பித்து விட்டது. அகராதியைக் கையில் எடுத்து ஒரு பையன் புரட்டி ஒரு சொல்லைத் தேடிப்பார்த்தானானால் கூட, அவன் 'ஆராய்ச்சி' புரிந்து கொண்டிருப்பதாகச் சொல்லுகிறோம். அந்த வார்த்தை இப்படிப் பிரபலப்பட்டு விட்டதே தவிர, அதன் கருத்தைப் பலர் புரிந்துகொள்ளவில்லை. 'ஆராய்ச்சி' என்பதன் நோக்கம் புதிய விஷய ஞானத்தை அடைவதே.

—ஹென்ரி டி ஸ்மித்

வயது மாறும்போது தோன்றும்
விபரீதங்களின் காரணம்-

பெண்களின் மனநோய்

புச்சா வேங்கடராமையா

பெண்களுக்கு 40, 50 வயது ஆகும்போது உடலில் முதிர்ச்சி ஏற்படுகிறது. அப்போது இன்னதென்று விவரிக்க முடியாத பெரிய மாறுதல் உண்டாகும். இளம் பருவ நிலை மாறி உடலில் பலம் குறையும். ஜனனேந்திரியங்களின் சக்தி குறைந்து கருத்தரித்துப் பாலூட்டும் சக்தி முடிந்துவிடும். ஆதி மனிதர்களிலிருந்து நவநாகரிக மனிதர் வரைக்கும் இந்த நியதிக்கு உட்பட்டே தீரவேண்டியிருக்கிறது. இந்த நிலை மனிதர்களைப் போலவே மனிதக் குரங்கு முதலிய மிருக ஜாதிகளையும் கட்டுப்படுத்துகிறது. மனிதர்களில் ஆண்களுக்குங்கூட வயது முதிர்ந்தபின் இந்த நிலை ஏற்படுகிறது. சிருஷ்டி செய்யும் சக்தி குன்றிவிடுகிறது. பழைய நிலையைக் காப்பாற்ற உடம்பின் எல்லா உறுப்புக்களும் முயலும். அதனால் நரம்புகள் தளர்ச்சி அடையும். உருவமும் சுபாவமும் விபரீதமாக மாறும். மனநோய் வைத்தியர், வீட்டு வைத்தியர், நரம்பு வைத்தியர் ஆகியவர்களெல்லாம் அவர்களுடைய உடலில் ஏற்பட்ட குறையை நீக்க முயலுவார்கள். இவர்களுடைய முயற்சிகள் வீணே. தங்கள் சுயமுயற்சியே இவர்களுக்கு உதவக்கூடியது.

இந்த நிலையில் நரம்புகளின் போராட்டத்தால் நாடிகள் சில சமயம் எதிர்த்து வேலை செய்யும்; சில சமயம் அமைதியாக இருக்கும். அதனால் சில சமயம் இவர்கள் சிடுசிடுத்து மிகவும் கோபத்துடன் வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டிருப்பார்கள்; சில சமயம் மிக இனிமையாகப் பேசுவார்கள். ஒரு சமயம் பலவீனமாயும் மற்றொரு சமயம் பலத்தோடும், ஒரு சமயம் மந்தமாகவும் மற்றொரு சமயம் சுறுசுறுப்பாகவும் தோன்றுவார்கள். உடலின் உட்புறத்தில் ஏற்படும் போராட்டத்தினால் மனம் சமநிலையை இழப்பதே இதற்கெல்லாம் காரணம். கொஞ்ச காலம் இதற்கெல்லாம் பதறாமல் பொறுமையாக இருந்தால் இந்த நிலை மாறிவிடும்.

வயதில் மாற்றம் நிகழும்போது அடிக்கடி, சுலபமாக மனநிலை மாறுபடும். மிகுந்த கோபத்தின் லட்சணம் முகத்தில் தோன்றிப் பார்ப்பவர்களுக்கே கஷ்டத்தைக் கொடுக்கும். காம இச்சையும் சமநிலையை இழக்கும். ஒரு சமயம் மனம் விரியும்; ஒரு சமயம் குவியும். சபல சித்தம் உண்டாகி முதுமைப் பித்தமும் உண்டாகும். சில சமயம் பயம் தோன்றும். அளவுக்கு மீறிய புலம்பலும் பைத்தியக்காரத்தனமான செய்கையும்

மூலம்: பிரக்ருதி (தெலுங்கு: ஏப்ரல் '53), விஜயவாடா.

ம—5

நிகழும். ஒரு சமயம் பிறருக்கு மரியாதை செய்யத் தோன்றும். ஒரு சமயம் அழுவார்கள்; ஒரு சமயம் சிரிப்பார்கள். தமக்கு வேண்டியவர்களிடம் ஒரு சமயம் அன்பு காண்பிப்பார்கள்; மற்ெறாரு சமயம் அவர்களை எடுத்தெறிந்து பேசுவார்கள். இவர்களுடைய பார்வை வெறிச்சென்றிருக்கும்.

வீட்டு மனிதர்கள் நல்ல பேச்சுப் பேசினாலும் கூட இவர்கள் அதற்கு விபரீதமாக அர்த்தம் கற்பித்துக் கொண்டு கலகம் செய்வார்கள். இவர்களுக்கு உணவு விஷயத்திலும் சிரத்தை இராது. நாடகம், சமூக காரியங்கள் இவற்றைப் பற்றிக்குறை கூறுவார்கள். ஏமாற்றமும் அதைரியமும் கொள்வார்கள். இந்த நிலையிலுள்ளவர்கள் தாமே வீட்டுக்குத் தலைமை தாங்க வேண்டுமென்று விரும்புவார்கள். எதையும் அலட்சியம் செய்வார்கள். பிறரை அவமதிப்பார்கள்.

இதற்கு நிவர்த்தி உண்டா? முன்னோர்கள் நிவர்த்திக்கு வழி காண்பித்திருக்கிறார்கள். இந்த நிலையில் உள்ள ஸ்திரீகளை நிழல் தரும் குளிர்ந்த பிரதேசத்தில் வைத்துப் போஷித்தார்கள். ஆனால் அடிமையாகப் பாவித்துச் சுதந்தரத்தைப் பறித்தார்கள். அதிகமாக உழைத்துக் களைத்த சமயத்தில் சற்று நேரம் நிழலில் இருப்பது அவசியமே. சூடேறிய நாடிகள் குளிர்ச்சி பெற்றுச் சமநிலை பெறும் வரையில் மட்டும் நிழலில் இருந்தால் போதும். எப்போதும் நிழலில் இருக்கக் கூடாது.

ஒரு ராஜ்யத்தைக் கட்டிக் காப்பது எவ்வளவு சிக்கலானதோ, அவ்வளவு சிக்கலானது வீட்டு நிர்வாகம். வீட்டுக்கு ராணி தானே யாகையால், பெண் தன் புருஷனுக்குச் சமமான உரிமையைத் தானும் பெற விரும்புவாள். பகிரங்கமாய்ப் புருஷனைப்போல் சஞ்சரிக்கவும் அரசியலில் உழைக்கவும் விரும்புவாள். இந்த விருப்பம் நிறைவேறாததால் பிராயம் முதிரும் சமயத்தில் விபரீத மாறுதலைப் பெறுவாள்.

அளவுக்கு மீறிய உழைப்பு, உழைப்புத் தாங்காத மென்மை, சோம்பல், மிகப் பெரிய குடும்பத்தை ஒரே தலைவியாயிருந்து தாங்குவது, பாலிய விவாகம், அதிகச் சாப்பாடு, உணவில்லாமல் வாடுவது—இவை எல்லாமே மேலே கண்ட நிலைமையை உண்டாக்கும்.

சர்வ சுதந்தரத்துடன் லஜ்ஜையற்றுச் சுற்றுவது, பலாத்காரமாகத் தன் விருப்பப்படி மகவைத் தனத்தை ஏற்பது, தாய்மையை ஏற்கச் சக்தி வரும் முன்பே தானே விரும்பி மணம் செய்து கொள்வது, மனத்தை அடக்கி வைப்பது, இயற்கைக்கு மாறான வழியில் காம இச்சையைத் தீர்த்துக்கொள்வது ஆகிய செயல்கள் வயது சென்ற காலத்தில் மேலே கண்ட விபரீத நிலையை உண்டாக்கும்.

எல்லா விதத்திலும் திருப்தியைத் தரும் மண வாழ்க்கையே இதற்குச் சரியான மருந்து. உடலுக்குப் பூர்ண வளர்ச்சியும் பலமும் வந்து தாய்மையை ஏற்கத் தகுதி பெற்ற பின்பே மணம் செய்துகொள்ளவேண்டும். அதனால் கூடிய மட்டும் இந்த அவஸ்தையை விலக்கி வைக்கலாம்.

'குடும்ப வாழ்க்கை சம்பந்தப்பட்ட மன நோயைப் பகவான் தான் மாற்ற வேண்டும்' என்று

நினைத்து வீட்டிலுள்ள பிறர் சற்றுப் பொறுமையுடன் நடந்து கொண்டால் வந்த நோய் தானே தீர்ந்துவிடும்.

மனத்தத்துவ சாஸ்திரி களுக்கோ, டாக்டர்களுக்கோ, நரம்புச் சிகிச்சையாளர்களுக்கோ இந்த நோய் வசப்படாது. மின் சாரச் சிகிச்சைக்கும் தீராது.

இந்த லட்சணங்கள் தோன்றிய போது இவற்றைப் பொறுமை யுடன் தாங்குவதே நோயை நீக்க வழி. நோயாளியை ஓரளவு எதிர்த்துப் பேசினுலும் நோய் அதிகரிக்கும். வயது முதிர்ந்த நிலையில் ஜீரணப் பைக்கும் மற்ற உறுப்புக்களுக்கும் பலம் குறையு மாகையால், ஆகாரத்தைக் கொஞ் சம் குறைத்துச் சாப்பிடுவது நலம். சுலபமாய் ஜீரணமாகக் கூடிய லேசான உணவைச் சாப்பிட வேண்டும். அரிசிச் சோற்றை அளவில் குறைத்துக் காய் கறி களை நிறையச் சாப்பிடுவது நல்லது. பழங்களைச் சாப்பிடுவ தால் அவற்றில் உள்ள உப்புச் சத்துக்கள் ஜீரணப்பைக்குப் பலத் தைக் கொடுத்து ஜாடராக்கினி யைத் தூண்டிவிடும்; நாடிகளின் அதிகச் சூட்டைத் தணித்துக் கழிவுப் பொருள்களை வெளியேற் றிக் கோபம் முதலிய உணர்ச்சிப் பெருக்கைச் சமப்படுத்தும். நோய் பொறுக்க முடியாத நிலைக்கு வந்து விட்டால் கடி (இடுப்பு) ஸ்நானம் முதலிய தொட்டி ஸ்நான முறைகள் பூர்ண பலன் தரும்.

என்ன அநியாயம்!

இரண்டு திருடர்கள் ஒரு பெரிய தையல் கம்பெனிக்குள் கன்னம் வைத்து நுழைந்தார்கள். அங்கிருந்த கால்சட்டை, கைச்சட்டை முதலிய ஸூட்டுகளை எடுத்து டிரங் பெட்டி களில் அடைத்துக்கொண் டிருந்தார்கள். அப்போது இருவரில் ஒருவன் திடுக்கிட்டவனாய்க் கூச்சலிட்டான்.

"என்ன? என்ன?" என்று பரபரப்புடன் கேட்டான் மற்றவன்.

"இதோ பார், இந்த ஸூட்டின் விலை என்ன போட் டிருக்கிறுன் பார்த்தாயா? ஒரே கொள்ளையாயிருக்கிறது! திருட்டுப் பயல்!" என்றுன் முதல் திருடன்.

—'ஈவினிங் டைம்ஸ்', க்ளாஸ்கோ.

உயர்வு வேண்டாம்!

மானேஜர்: பையா, உன் வேலையைப் பார்த்து எனக்கு மிகவும் சந்தோஷம். உனக்கு உத்தியோக உயர்வு கொடுத்து, சம்பளமும் வாரம் ஐந்து ஷில்லிங் அதிகமாகக் கொடுக்கலாம் என்று எண்ணுகிறேன். நீ என்ன சொல்லுகிறுய்?

பையன்: ஸார், எனக்குப் பழைய சம்பளமே போதும். தபால் தலைக் கணக்கை மாத்திரம் வழக்கப்போல் நானே வைத்து வர இடம் கொடுங்கள். —'வொர்ல்டு டைஜெஸ்ட்'



விலங்குகள் வேகம்

ஜான் வ்ரைட்

எந்த எந்தப் பிராணி எவ்வளவு வேகம் ஓடும்? எவ்வளவு தூரம் அப்படித் தாக்குப் பிடித்து ஓடும்? இந்த விவரங்களை விளக்குகிறார் இவர்.

ஓட்டத்தில் மனிதனையும் விலங்குகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது கடினம். பயிற்சி பெற்ற ஓட்டப்பந்தயக்காரர்கள் எவ்வளவு அதிக வேகமாய் ஓடமுடியும் என்று சரியாய் நமக்குத் தெரியும். ஆனால், ஒரு யாத்திரிகர், “காட்டிலே காரை விட்டுக்கொண்டு ஒரு கழுதையைத் துரத்தினேன். அது மணிக்கு 40 மைல் வேகத்தில் ஓடியது” என்று சொல்வதாக வைத்துக்கொள்வோம். அப்போது பல சந்தேகங்களுக்கு இடமுண்டாகிறது. காரின் ‘ஸ்பீடோ மீட்டர்’ சரியாய் வேலை செய்ததா? அந்தக் காட்டுக் கழுதை இளமையானதா, நடுத்தரமானதா, கிழடா? அது நோய் நொடியில்லாமல் ஆரோக்கியமாக இருந்ததா?

விலங்குகளுக்குள்ளே மிக அதிக வேகமாய்ப் பாயக்கூடியது, ஆப்பிரிக்காவிலும் தெற்கு ஆசியாவிலும் உள்ள ‘சீட்டா’ என்ற சிறுத்தைப் புலிதான். அது இரண்டே செகண்டில் மணிக்கு 45 மைல் வேகத்தை அடைந்து விடுகிறது; பிறகு 60 முதல் 70 மைல் வேகம் வரையில்கூட எட்டி விடுகிறது. இந்தியாவிலும் ஈரானிலும் பல நூற்றாண்டுகளாக மான்போன்ற ‘ஆண்டிலப்’ என்ற ஓட்டத்தில் சிறந்த விலங்கையும் பிற விலங்குகளையும் சிறுத்தைப்புலி வேட்டையாடி வருகிறது. ஒரு காரில் சிறுத்தைப் புலி ஒன்றைச் சங்கிலி போட்டுக் கட்டி, திரையிட்டு மூடி, காட்டுக்குக் கொண்டு போனார்கள். அந்தக் காருக்கு நாலு புறமும் தட்டி எதுவும் இல்லாமல் திறப்பாக வைத்திருந்தார்கள். இருநூறு கஜ தூரத்தில் அதற்கு இரையாகக் கூடிய விலங்கு எதாவது தென்பட்டதும், திரையை விலக்கிச் சங்கிலியைக் கழற்றிப் புலியை விட்டுவிட்டார்கள்.

வேகத்திலே மிகச் சிறந்த மனிதன்கூடப் புலியின் வேகத்துக்குத் தோற்றோட வேண்டியதுதான். போன தடவை நடந்த ஒலிம்பிக் விளையாட்டில், மெல் பாட்டன் என்ற கலிஃபோர்னியா வாசி, 220 கஜ (200 மீட்டர்) தூர ஓட்டப்

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 5-4-’53), கல்கத்தா.

பந்தயத்தில், இதற்கு முன் ஓடிய வரையெல்லாம் வேகத்தில் பிந்தச் செய்துவிட்டார். அவர் ஓடிய நேரம் 20.3 ஸெகண்டு. சமீபத்தில் ஒரு பர்லாங்கு தூரம் அவரே ஓடிய போது, 20.2 ஸெகண்டில் ஓடினுர். இது அவருடைய ஓட்ட நேரத்தை விட 0.1 ஸெகண்டுதான் குறைவு. அவருடன் ஒரு சிறுத்தைப்புலியைப் போட்டி போட விடுவதாக வைத்துக்கொள்ளலாம். அவர் 60 கஜ தூரம் ஓடிய பிறகே சிறுத்தைப் புலி கிளம்பினுல்கூட, ஒரு பர்லாங்கில் அவரை அது நிச்சயமாய் வென்றுவிடும்.

ஆனுல், போன தடவை நடந்த அதே ஒலிம்பிக் விளையாட்டுக்களில் வின்ட் என்பவர் 880 கஜ தூர ஓட்டப்பந்தயத்தில் அதி வேகமாய் ஓடி வென்ருர். அந்தப் பந்தயத்தில், ஒரு சிறுத்தைப் புலி அவரிடம்-ஏன், ஆரோக்கிய திடசாலியான யாராவது ஒரு மனிதன் அல்லது ஸ்திரீயிடமே கூட-தோற்றுப்போகவேண்டியதுதான். சிறுத்தைப் புலியால் அதிக தூரம் தாக்குப் பிடித்துப் பாய முடியாது. முந்நூறு அல்லது நானூறு கஜ தூரம் பாய்ந்ததும் அது களைத்துப் போகும்.

மார்ட்டின் ஜான்ஸன் என்ற பிரபல வேட்டையாடி, 'சீட்டா' என்ற சிறுத்தைப் புலி ஒன்றும் அப்படி வேகமாய்ப் பாயாது என்



கிருர். 100 கஜ தூரப் பாய்ச்சலில் 'லெப்பர்டு' என்ற சிவிங்கிப் புலிக்கே முதலிடம் அளிக்க வேண்டும் என்பது அவர் கருத்து. ஆனுல் மற்ற வேட்டையாடிகள் வேறு விதமாக அபிப்பிராயம்

சொல்லுகிறார்கள். சிறுத்தைப்புலி மணிக்கு 60 முதல் 70 மைல் வேகம் வரையில் பாயும் என்றும் மணிக்கு 50 மைல் வேகம் வரை ஓடக்கூடிய 'ஆண்டிலப்' என்ற மானையே மிக எளிதில் துரத்திப் பிடித்துவிடும் என்றும் கூறுகிறார்கள். இந்த மான், உலகத்துப் பிராணிகளுக்குள்ளேயே மிக வேகமாய் ஓடக்கூடிய ஒன்று. இந்த மானையே பிடித்து விடக்கூடிய தென்றாலும், சிறுத்தை பெரிய சோம்பேறி. அவசியம் ஏற்பட்டாலொழிய, உடம்பு வணங்கி ஓடாது.

சிவிங்கிப்புலி வேகமானது என்று ஜான்ஸன் ஒருவர்தான் சொல்லுகிறார். நானறிந்த மட்டும் வேறு யாரும் சொல்லவில்லை. சிங்கம், 'டைகர்' என்ற வேங்கைப் புலி இரண்டும் இரையைக் கண்டதும் அதன்மீது அதிவேகமாய்ப் பாயக் கூடியவைதான். ஆனால், அவற்றின் வேகம் சிறுத்தையின் வேகத்துக்குக் குறைந்ததுதான்.

சிறுத்தைக்கு அடுத்த ஸ்தானத்தை மங்கோலியாவில் உள்ள கேஸல், வட அமெரிக்காவில் உள்ள ப்ராங் பக் என்ற மான் இனங்களுக்கும் ஸாலுக்கி என்ற அரேபிய மான்-வேட்டை நாய்க்கும் அளிக்கவேண்டும். "கோபி வனாந்தரத்தில் மங்கோலிய மான் மணிக்கு 60 மைல் வேகத்தில் ஒன்று அல்லது இரண்டு மைல் தூரம் ஓடுவதை நாங்கள் கண்டோம். பிறகு அது மணிக்கு 50 அல்லது 40 மைல் வேகத்துக்கு இறங்கி விடுகிறது. எவ்வளவு தூரம் இதே வேகத்தில் அது தாக்குப் பிடித்து ஓடும் என்பதை நாங்கள் கண்டு பிடிக்கவில்லை" என்று ராய் சாப்மான் ஆண்ட்ரூஸ் என்ற அமெரிக்க யாத்திரிகர் சொல்லுகிறார். பிறந்த மறு நாளே மங்கோலிய மான் மணிக்கு 25 மைல் வேகம் ஓடுகிறது.

ஸாலுக்கி என்ற வேட்டை நாய் ஒரு ஸெகண்டில் 32 கஜம் - அதாவது மணிக்கு 65 மைலுக்கு மேற்பட்ட வேகம்-ஓடும் என்ற ஈ. வீ. ஆஷ் என்டவர் எழுதுகிறார். ஆனால், ப்ரேவியர் ஹொவெல் என்ற நிபுணர் இதைச் சந்தேகிக்கிறார். கேஸல் என்ற மானை விரட்டிக் களைத்துப் போகும்படி செய்ய ஹாக் என்ற ராஜாளியை அரேபியர் உபயோகிக்கிறார்களாம். இப்படி ராஜாளியின் உதவியில்லாமல் மானைப் பிடித்து விடக்கூடிய வேட்டைநாய் மிகவும் அபூர்வமாம்.

ப்ராங் பக் என்ற மானை ஓடவிட்டு, மணிக்கு 60 மைல் வேகம் சென்ற காரைக் கொண்டு துரத்தியபோது, இரண்டு மைல் தூரம் வரைக்கும் களைப்பின்றிச் சௌகரியமாக அது கைக்கு அகப்படாமல் ஓடியதாம்.

ஜாக் ராபிட் என்ற குழிமுயல், மணிக்கு 45 மைல் வேகத்தில் ஓடும். சிவப்புக் குள்ளநரியும் இதே வேகத்தில் ஓடும். சிறந்த ஜாதி ரேஸ் குதிரை, மணிக்கு 42.3 மைல் ஓடும். மங்கோலியக் காட்டுக் கழுதை, மணிக்கு 40 மைல் ஓடும்.

இன்னும் சில விலங்குகளின் வேகத்தை இங்கே பாருங்கள்:

மணிக்கு மைல்	விலங்கு
36	க்ரேஹவுண்ட் என்ற வேட்டை நாய்.
36	மங்கோலிய ஓநாய்.
35.5	விப்பெட் என்ற வேட்டை நாய்.
35	கயோட்டி என்ற ஓநாய்.

மணிக்கு மைல்	விலங்கு
32.28	ஜிராஃப் என்ற ஒட்டைச் சிவிங்கி.
20.25	கறுப்பு ரைனுஸெரஸ் என்ற காண்டா மிருகம்.
24	ஆப்பிரிக்க யானை.

ஓட்டத்தில் சிறந்த இன்னும் இரண்டு பிராணிகள் இருக்கின்றன. ஆனல், அவைகள் விலங்குகள் அல்ல; பட்சிகள். ஓடும் தூரம் அரை மைலுக்கு மேற்படாவிட்டால் மணிக்கு 50 மைல் வேகத்தில் ஆஸ்ட்ரிச் என்ற நெருப்புக் கோழி ஓடும் என்று மார்ட்டின் ஜான்ஸன்என்பவர் சொல்லுகிறார். ஈமு என்ற ஆஸ்திரேலிய நெருப்புக் கோழி மணிக்கு 30 மைல் வேகத்தில் பத்து மைல் தூரம் ஒரு காருக்கு முன் ஓடியிருக்கிறதாம்.

மனிதனுக்குக் கால் நீளமாயிருக்கிறதே யொழிய, ஓட்டத்துக்கு அவ்வளவு ஏற்றதல்ல. அதி வேகமாக ஓடும் பல மிருகங்களின் கால்களை டாக்டர் வில்லியம் கே. க்ரிகாரி என்ற அமெரிக்க ம்யூஸியம் அதிகாரி அளந்து பார்த்திருக்கிறார். மான், குதிரை போன்ற வேகமான விலங்குகளுக்குக் காலின் மேல் எலும்பைவிடக் கீழ் எலும்பு நீளமாயிருக்கிறது. அவை அடிவைத்து வேகமாய்த் தள்ளித் தள்ளி ஓடுகின்றன. இதேபோல வெள்ளைக்காரனை விட நீக்ரோ அதிக வேகமாய் ஓடுவதற்குக் காரணம் அவனுடைய குதிகால் நீளமாயிருப்பதுதான் என்று சொல்கிறார்கள்.

ரேஸ் குதிரையோடு மனிதன் பல பந்தயங்கள் போட்டிருக்கிறான். சில தடவைதான் அவனுக்கு ஜயம். பல தடவை அபஜயந்தான். 1936-ஒலிம்பிக் விளையாட்டில் 100 மீட்டர், 220 மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் ஜயித்த ஜெஸ்ஸி ஓவன்ஸ் என்பவர், ரேஸ் குதிரைகளுடன் போட்டி போடத் தொடங்கினார். பல தடவை அவர் ஜயித்தார். ஆனல், 100 கஜத்துக்கு மேற்பட்ட தூரங்களில் ஒரு போதும் அவர் ஜயிக்கவில்லை.

220 கஜ தூரத்தைச் சுமார் 15 ஸெகண்டில் ரேஸ் குதிரை ஓடிவிடும். ஓட்டத்தில் மிகச் சிறந்த மனிதர்-எற்கனவே நான் சொன்ன மெல் பாட்டன் - அதே தூரத்தை 20.3 ஸெகண்டில்தான் ஓடியிருக்கிறார்.

மிக அதிக தூரம் ஓடும் பந்தயத்தில், குதிரையை மனிதன் ஜயித்துவிடக்கூடும். சென்ற ஒலிம்பிக் விளையாட்டில், மராத்தன் என்ற நீண்ட தூரப் பந்தயத்தில், 26 மைல் தூரத்தை 2 மணி 34 மினிட் 51.6 ஸெகண்டில் டி. காப்ரெட்டா என்ற ஆர்ஜெண்டைன் வாசி ஓடி முடித்தார். 1936-இல் இதே தூரத்தை 2 மணி 29 மினிட் 19.2 ஸெகண்டில் கிட்டெல்ஸென் என்பவர் ஓடியிருக்கிறார்.

நீளம் தாண்டும் விஷயத்தில், விலங்குகளுக்கு மனிதன் சளைத்தவனல்ல.

பெர்லின் நகரில் 1936-இல் ஜெஸ்ஸி ஓவன்ஸ் 26 அடி 5 5/16 அங்குலம் தாண்டி மற்றவர்களை வென்றார். அதற்கு முதல் வருஷம் 26 அடி $8\frac{1}{4}$ அங்குலம் இவரே தாண்டியிருக்கிறார். ஆனல் இவர் மிகச் சிறப்பானவர். பொதுவாக, மிகச் சிலரே 25 அல்லது 26 அடி வரையில் தாண்டியிருக்கிறார்கள். கங்காரு என்ற ஆஸ்திரேலிய விலங்கோ வேகமாக ஓடும்

போது சுமார் 26 அடி தாண்டுகிறது. ஆனால், ஒவ்வொரு முறை தாவும்போதும் இவ்வளவு தூரம் அது தாண்டுவதில்லை. ஒரு தாவு 26 அடியானால் அடுத்த ஒன்றிரண்டு தாவு சுமார் 10 அடிதான் இருக்கும்.

உயரம் தாண்டுவதில் கங்காரு பெயர் போனது. நிர்ப்பந்தம் ஏற்பட்டால் 9 அடி உயரங்கூட அது தாவும். வாலபி என்ற ஒரு வகைக் கங்காரு ஒன்றைச் சில நாய்கள் ஒரு சமயம் துரத்தினவாம். அப்போது அந்தப் பக்கம் நின்றுகொண்டிருந்த ஓர் ஆஸ்திரேலியரின் தலைக்குமேலே அது தாண்டிக் குதித்தோடி விட்டதாம்!

கங்காருவையும் மிஞ்சி உயரம் தாண்டக்கூடியது க்ளெப்-ஸ்ப்ரிங்கர் என்ற ஆப்பிரிக்க மான். இந்தச் சின்னஞ்சிறு மானின் நிறை சுமார் 20 பவுண்டுதான். இது 8 அல்லது 9 அடி உயரத்தைச் சுலபமாகத் தாண்டி விடுகிறது.

விசித்திர விரல்!

படம் 1



படம் 2

இரண்டு கைகளையும் நன்றாய் முன்புறம் நீட்டுங்கள். அப்படி நீட்டியபடியே, முதல் படத்தில் கண்டபடி இரண்டு கை ஆள்காட்டி விரல்களும் ஒன்றையொன்று தொடும்படி பிடியுங்கள். அப்படியே இரண்டு கைகளையும் மெல்ல மெல்லக் கிட்ட இழுங்கள். அப்போது, இரண்டாவது படத்தில் கண்டபடி ஓர் அதிசயத்தைக் காண்பீர்கள். ஒன்றை ஒன்று தொட்டுக்கொண்டிருக்கும் இரண்டு ஆள்காட்டி விரல்களுக்கும் இடையே இரு நகவிரல் துண்டு ஒன்று எங்கிருந்தோ வந்து தோன்றும்.

—'ஃப்ரீ இந்தியா', சென்னை.

உபகாரத்துக்குப் பலன்

தண்ணீரில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்த ஒரு சிறுவனை, அந்தப் பக்கம் சென்ற ஒரு வாலிபன் தீரத்தோடு காப்பாற்றினான்.

"நீர்தான் எங்கள் பையனைக் கரையேற்றினீரா?" என்று கேட்டார் சிறுவனின் தந்தை.

"ஆமாம்" என்று மிக்க அடக்கத்தோடு சொன்னான் வாலிபன்.

"அப்படியானால் அவன் தொப்பியை என்ன செய்தீர்?" என்று ஆத்திரத்தோடு கேட்டார் தந்தை.

'ஹ்யூமரிஸ்டென்' ஆஸ்லோ.

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி, 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க, இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத்துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்த பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித் தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்யவேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

ஆ. கி. ரா. சென்னை:

கேள்வி: டான்சில் சதை வளர்வதால் என்ன என்ன கேடுகள் விளையும்? ஆபரேஷன் செய்தால்தான் அது குணமாகுமா?

விடை: டான்சில் என்பது தொண்டையில் இருக்கும் ஒரு வகை உறுப்பு. சிலருக்கு அது மிகச் சிறிதாயிருக்கும்; சிலருக்குச் சற்றுப் பருத்திருக்கும். அதிகமாய்ப் பருத்திருந்தால் உணவை விழுங்குவதுகூடக் கஷ்டமாகிவிடும். டான்சில், நோயை விளைவிக்கும் அணுவுயிர்களை வடிகட்டும் உறுப்பென்பார்கள் சில நிபுணர்கள். வேறு சிலர், 'டான்சில் இந்த அணுவுயிர்களை ஏற்றுக்கொண்டு நிணதாரைகள் மூலமாய் உடலில் வேறு உறுப்புக்களுக்குக் கொண்டு செல்லும் குணமுடையது' என்பார்கள். முதல் வகை நிபுணர்கள், 'டான்சிலை ஆபரேஷன் செய்து எடுக்கக் கூடாது. அதில் குற்றமிருந்தால் பெனிசிலின் போன்ற நவீன மருந்துகளைப் புகுத்திக் குணப்படுத்தி விடவேண்டும்' என்பார்கள். இரண்டாவது வகுப்பு நிபுணர்கள் 'டான்சிலும் அப்பெண்டிக்ஸ் என்ற உறுப்பைப்போல்தான். அதனால் ஒருவகை உபயோகமுமில்லை. ஆகவே, அப்பெண்டிக்ஸை அறுத்து நீக்கிவிடுவதுபோல் டான்சிலைக் கண்டால் அறுத்து நீக்கிவிட வேண்டும்' என்கிறார்கள். இத்தகைய அபிப்பிராய பேதம் இருப்பதால், டான்சில் விஷயத்தில் பொதுவான தீர்மானம் செய்வதற்கில்லை. ஒவ்வொரு நோயாளியையும் தனியாகப் பரிசீலனை செய்து சிகிச்சை முறையை வகுக்க வேண்டும்.

ஹை. ரா., சென்னை.

கே: ஓயாது மூக்கு ஒழுகும் குழந்தைக்கு என்ன பரிகாரம்? இது பிற்காலத்தில் ஏற்படக்கூடிய பெரிய வியாதியின் அறிகுறியாகுமா?

வி: குழந்தைகளுக்கு மூக்கு ஒழுகுவது எளிதில் ஏற்படலாம். வெகு நாள் குணமாகாமல் இருந்தால் காதுக்குக்கூடக் கேடு விளையக் கூடும். மூக்கு ஒழுகுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளை ஆராய்ந்து தக்க சிகிச்சை

செய்யவேண்டும். டிப்திரியா நோய் கூட மூக்கு ஒழுகுவதில் துவங்கலாம். அம்மை நோய்களும் அப்படியே ஆரம்பமாகலாம். வயிற்றில் அஜீர்ணம் ஏற்பட்டுக்கொண்டே இருப்பதால் மூக்கு ஒழுகலாம். நாக்குப்பூச்சி வயிற்றில் உண்டாவது வேறொரு காரணம். வைட்டமின் குறைவாலும் மூக்கு ஒழுகலாம். இந்தக் காரணங்களை நீக்குவதே இந்த நோய்க்குப் பரிகாரம். மாவுப் பண்டங்களைக் குறைத்து, பால்வகைகளையும், பழ வகைகளையும் அதிகமாய் உபயோகித்து, மூக்கு ஒழுக்கைத் தடுக்கலாம்.

கே: ஏன் கர்ப்பஸ்தரீகள் கிரகணம் பார்க்கக் கூடாதென்கிறார்கள்?

வி: அப்படி வைத்தியர்கள் சொல்வதாய் நான் கேட்டதில்லை. குழந்தை அங்கக் குறையோடு பிறந்துவிடுமோ என்ற அச்சம் தான் இந்த ஆட்சேபத்துக்குக் காரணம். அப்படி அச்சப்படும் கர்ப்பஸ்திரீகள் பார்க்கக் கூடாது தான்.

கே: தேரையை மிதித்தாலோ தாண்டிச் சென்றாலோ கர்ப்ப ஸ்திரீகளுக்குப் பிறக்கும் குழந்தை நோஞ்சலாயிருக்கும் என்பதற்குக் காரணம் என்ன?

வி: தேரை ஒட்டி உலர்ந்து புஷ்டியில்லாத பிராணியாக இருப்பதால், அது இந்த அபவாதத்தை ஏற்றுக்கொள்கிறது! வேறு காரணம் நான் அறியேன்.

சா. கி. சென்னை.

கே: யானைக்கால் நோய்க்கு நிவர்த்தி உண்டா?

வி: யானைக்கால் நோய்க்குக் காரணமான ஒருவகைப் பூச்சி உடலில் நிணதாரைகளில் புகுந்து குஞ்சும் குட்டியுமாக வாழ்கிறது. இதன் குஞ்சுகள் இரவில் ரத்தத்தில் தோன்றுவதைச் சில மருந்துகள் தடுத்து விடுகின்றன. ஆனால் தாய்ப் பூச்சியைக் கொல்லத் தக்க மருந்து இதுவரைக்கும் கண்டு பிடிக்கப்பட்டதாய்த் தெரியவில்லை. யானைக்கால் வீக்கத்தை ஆபரேஷன் செய்து குறைக்கலாம். ஆனால் அது வெகு கடுமையான சிகச்சையாகும்.

கிரீன்லாம்பு, தென்காசி.

கே: தகப்பனுக்கு க்ஷயரோகம் இருந்தால், அது கருப்பையிலுள்ள குழந்தையையும் பாதிக்குமா?

வி: பாதிக்காதென்றே சொல்லலாம். தாய்க்கு க்ஷயரோகம் இருந்தால்கூடக் கருப்பையில் இருக்கும் குழந்தைக்கு க்ஷயரோகம் தோன்றுவதில்லை. பிறந்த குழந்தைக்கு, ரோகம் தாயிடமிருந்து அல்லது தந்தையிடமிருந்து தொத்திக் கொள்ளலாம்.

சந்திரசேகரன், சென்னை.

கே: மந்த புத்தியுள்ள தாயின் பாலைக் குடித்து வளரும் குழந்தையும் மந்த புத்தியாக இருக்குமா?

வி: எருமைப் பாலைக் குடித்து எருமையின் மந்த புத்தி நமக்கு

ஏற்படுவதில்லை. முன் காலத்தில் எதிரியின் ரத்தத்தைக் குடித்து எதிரியின் தீரத்துவம் பெற வேண்டுமென்று நினைத்தவர்களைப் பற்றி நாம் கேட்டிருக்கிறோம். அந்த மாதிரி எண்ணந்தான் இது. ஆனால் எத்தகைய உணவாயிருந்தாலும் சரி, குடலில் சென்றவுடன் அது சில அடிப்படை அம்சங்களாகப் பகுக்கப் பெறுகிறது. அவற்றில் தனக்கு வேண்டியவைகளை உடல் திரும்பவும் கிரகித்துக் கட்டுமானம் செய்துகொள்கிறது. ஆகவே, மாமிச வகையிலிருந்தோ பாலிலிருந்தோ பிற பிராணிகளுடைய புத்தி வருவதில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

வி. ராஸையா, கொழும்பு.

கே: தலையில் சிறு சிறு பருக்கள் தோன்றித் தலைமயிரும் அந்த இடங்களில் உதிர்ந்து விடுகின்றன. இதைத் தடுக்க உபாயம் வேண்டும்.

வி: இவர் கேள்வியைச் சுருக்கித் தந்திருக்கிறேன். ஆனால், தமது நோயை இவர் விவரமாகவும் தெளிவாகவும் சொல்லியிருக்கிறார். இதைப் பொடிப்பு நோய் என்பார்கள். தலையில் சிறு சிறு பருக்கள் தோன்றி அதிலிருந்து மாவு போன்ற பொடியும் உதிரும். இந்த நோயை ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்து குணப்படுத்த வேண்டும். இதற்காகச் சரும வைத்திய நிபுணரை ஆலோசனை கேட்கவேண்டும். இந்தக் காலத்துப் புருஷர்களுக்கு வழுக்கைத் தலை சுமார் முப்பது வயதிலேயே ஆரம்பித்து விடுகிறது என்று சொல்லுகிறார்கள். இது உண்மைதான் என்று தோன்றுகிறது. இதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கவேண்டும்.



இதுவரைக்கும் நன்றாய் ஆராய்ந்திருப்பதாய்த் தெரியவில்லை. ஆண் - பெண் வேற்றுமையால் நேரும் அமைப்பும் இதற்குக் காரணமாயிருக்கலாம். இல்லாவிட்டால் ஸ்திரீகளும் வழுக்கைத் தலையராகிவிடுவார்களே! அதைப் புருஷர்களால் சகிக்கமுடியாது போய்விடுமே!

ராமநாதபுரத்தில் ஒரு மாது:

கே: வலிப்பு நோய்க்குப் பரிகாரம் உண்டா? வலிப்பு நோய் உள்ளவள் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமா?

வி: இந்த நோய்க்குச் சில மருந்துகள் உண்டு. அவைகளை நிரந்தரமாக உபயோகித்தாகவேண்டும். ஒருத்திக்கு வரும் வலிப்பு, குடும்பத்தில் பாரம்பரியமாக இதுவரை வராத நோய்தான் என்று உறுதியாய்ச் சொல்ல முடியுமானால், அந்தப் பெண் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம். இல்லாவிட்டால், அந்தப் பெண் கல்யாணம் செய்து கொண்டு சந்ததி ஏற்படும்போது, அதற்கும் இந்த நோய் தோன்றக் கூடும்.

தலை வெட்டும் இந்த ஜாதியாருக்குத்
தனிச் சுதந்தர ராஜ்யம் வேண்டுமா?

நாகர் கிளர்ச்சி மர்மம்

ஆலோக் ஸேன்

மத்திய இந்தியாவில் கோண்டுகள், மேற்கு இந்தியாவில் பில்லர்கள், கானேட்கள், வட மேற்கே லடாக்கிகள், சோட்டா நாகபுரியில் ஸந்தால்கள் இப்படிப் பல பழங் குடிகளைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதே மாதிரி வடகிழக்கு இந்திய எல்லையில் வசிப்பவர்கள் நாகர்கள்.

சின்னச் சின்ன ஓலைக் குடிசைகளில் அவர்கள் வசிப்பார்கள். வெயில் மண்டையைப் பிளக்கும். குடிசையைச் சுற்றி மூங்கில் நட்டிருக்கும். இரவில் மென்மையாகக் காற்று வீசும். திடீரென்று ஒரு விதப் பயங்கரக் கூச்சல் கேட்கும். தலையைச் சீவப் புறப்பட்டு விடுவார்கள் நாகர்களில் சிலர்.

அங்கே நம்மைப் போல் சாதாரண ஆசாமி ஜாக்கிரதையாகத் தூங்கவேண்டியிருக்கும். நாகர்களிடம் சிக்கிவிட்டால் ஆபத்துத்தான். விடியற்காலை வேளையாக இருந்தாலும் சுற்றிலுமுள்ள பசும் புதர்களில் யார் மறைந்திருப்பார்களோ என்று திகில் ஏற்படும். தூரத்தில் தெரியும் மலை வரிசைகளையும் இள மூங்கில்கள் ஆடுவதையும் பார்த்ததும் உள்ளுக்குள் நடுக்கமாக இருக்கும்.

அஸ்ஸாமின் கிழக்குப் பாகத்தில் நாகர் மலைப் பிரதேச ஜில்லா 4,290 சதுர மைல் பரப்புள்ளது. 13 வகை நாக ஜாதியார் - மொத்தம் சுமார் 2,15,000 - அங்கே வசிக்கிறார்கள்.

அங்கே பல வருஷங்களாகவே அதிருப்தி இருந்துதான் வருகிறது. 1948 - இல் ஷாப்லி என்பவரை அஸ்ஸாமை விட்டு உடனே போய் விடவேண்டுமென்று இந்திய சர்க்கார் உத்தரவிட்டது. பிறகு ஒரு வருஷம் தவணை கொடுத்தது. இதற்குள் நாகர்களுக்குத் தனிச் சுதந்தர ராஜ்யம் வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்பட்டுப் பெரும் பிரச்னையாகிவிட்டது.

காஷ்மீர், தெலுங்கானா, பஞ்சாபு, பெப்சு விவகாரங்களை இத்தனை நாளும் நாம் அக்கறையாகக் கவனித்துக்கொண்டிருந்தோம். ஆனால் சமீபத்தில் நம் பிரதமர் நேரு மார்ச் 30 - ஆம் தேதி கோஹிமாவுக்குப் போயிருந்தபோது அவர் பிரசங்கம் செய்து கொண்டிருக்கையில், 2,000 நாகர்கள் அந்தக் கூட்டத்தை விட்டு மொத்தமாக வெளியேறி விட்டார்கள். இந்த மாதிரி நடந்து அவர் இதுவரை பார்த்ததேயில்லை.

இப்படிச் சுதந்தர நாக ராஜ்யம் வேண்டும் என்று ஒரு கிளர்ச்சி ஏற்படுவதற்குக் காரணம், சென்ற நூற்றாண்டு முடிவில் பிரிட்டிஷ் டோரிகள் ஒரு திட்டம் இட்டது

மூலம்: பம்பாய் கிரானிக்கிள் வீக்லி (ஆங்கிலம்; 31-5-'53), பம்பாய்.

தான். அதன்படி நாகர் மலைப் பிர தேசத்தையும் சிட்டகாங், அரக்கான் மலைப் பிரதேசங்களையும் சேர்த்து வடகிழக்கு எல்லை மாகாணம் ஒன்று அமைப்பதாக இருந்தார்கள்.

புரொபசர் கூப்லண்டு என்பவர் இந்தியா சம்பந்தமாக ஒரு திட்டம் வெளியிட்டார். சர்ச்சில் அப்போது நாகர் வாழும் பிரதேசத்துக்கு விசேஷ அதிகாரி ஒருவரை அனுப்பித் தனி மாகாணம் அமைப்பது சாத்தியமா என்று பார்த்து வரச் சொன்னார். பிரிட்டிஷார் தந்திரம் தெரிந்தது தானே; சாம்ராஜ்ய ஆசையை வெளிக்குக் காட்டாமல் காரியத்தைச் சாதித்துக்கொள்ள, அங்காமி நாகர்களைக் கிளப்பி விட்டார்கள். இந்த நாகர்களில் முக்கால் வாசிப் பேர் கிறிஸ்துவர்களாக மாறிவிட்டவர்கள்.

மற்ற நாகர்கள் யாரும் அவ்வளவு எளிதில் கிறிஸ்துவர்களாகி விடவில்லை. ஆகவே, இவர்களுக்கு உள்ளூரில் வழக்குகளைத் தீர்க்க அதிகாரம் வழங்கினார்கள், பழைய பிரிட்டிஷ் இந்திய சர்க்கார்.

இப்படி ஏற்பட்டதுதான் அங்காமி தேசீயக் கவுன்ஸில் என்ற ஸ்தாபனம். இதன் தலைவர் ஏ. இஸட். ஃபிஸோ என்பவர். இவர்தான் இப்போது தலைமறைவாக இருந்துகொண்டு இந்தத் தனி நாக ராஜ்யக் கிளர்ச்சியை நடத்திவருகிறார்.

"ஏன் இந்த அநாவசியக் கிளர்ச்சி?" என்று கேட்டீர்களானால் இவரும் இவருடைய சகாக்களும் என்ன பதில் சொல்லுகிறார்கள் தெரியுமா? "ஃபார்மோஸா சின்னத் தீவுதானே? அதைச் சுற்றிப் பகை நாடுகள் இருந்தும் அது சமாளிக்கவில்லையா? நாகர்களுடைய நாடு பல வழிகளுக்கு நட்ட நடுவில் கடற்பிரதேசம் எதுவும் இல்லாமல் இருக்கிறதே என்றுதானே சொல்லுகிறீர்கள்? ஏன், ஆப்கனிஸ்தானம் அப்படி இருந்தும் சுதந்தர நாடாக இல்லையா? இத்தாலிக்கு அருகிலுள்ள ஸான் மாரினோ என்ற தீவு தனியரசாக இல்லையா?" என்று கேட்பார்கள். ஆனால் இத்தாலியை நம்பித்தான், பாவம், ஸான் மாரினோ வாசிகள் வாழ வேண்டியிருக்கிறது என்று அங்காமிகள் யோசிப்பதில்லை.

1947 - இலும் சரி, 1950 - இலும் சரி, இவர்களோடு ஏதாவது ஒப்பந்தத்துக்கு வர இந்திய சர்க்கார் தம்மால் ஆன அளவு முயன்று பார்த்தார்கள். அப்படியும் அஸ்ஸாம் சட்ட சபை, பார்லிமெண்ட், நாகர் மலைப் பிரதேச நிர்வாக சபை எந்தத் தேர்தலிலும் நாகர்களின் தேசீயக் கவுன்ஸில் கலந்துகொள்ளவே யில்லை.

வெளி நாட்டு நிருபர்கள் சிலர் அங்காமிகள் தான் அங்கே முக்கியமானவர்கள் என்று வெளி நாட்டில் பிரமாதமாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். உண்மையில் பார்க்கப் போனால் 13 வகை நாக ஜாதியாரில் அங்காமிகள் ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள்; அவ்வளவுதான். இவர்கள் கோஹிமாவிலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வசிக்கிறார்கள். இன்னும் ஆவோ, சேமா, தாங்குல் இப்படிப் பல நாக ஜாதியார் இருக்கிறார்கள். மலைப் பிரதேசத்தைத் தாண்டியும் சில நாகஜாதியார் வசிக்கிறார்கள். இவர்களெல்லாரும் தனி ராஜ்யம்

வேண்டுமென்று கிளர்ச்சி செய்த தாகத் தெரியவில்லை.

நாகர்களைத் தவிரக் காஸி, மிஷ்மி, மைஸோ இப்படி வேறு வகை மலை ஜாதியார்களும் அஸ்ஸாமில் இருக்கிறார்கள். காரோ, லூஷால் மலைப்பிரதேசத் தாரும் இதுவரை குறை கூறின தாகத் தெரியவில்லை. இப்போது அரசியல் திட்டப்படி வழங்கி யுள்ள அதிகாரமே யதேஷ்டம் என்ற நிலையில் இருக்கிறார்கள். பிரதமர் நேரு இன்னும் அதிக மாக உரிமைகள் வழங்கத் தயார் என்று வாக்குறுதி அளித்ததும் அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

பொருளாதார நிலை சீரழியச் சீரழியத் தேசிய உணர்ச்சி தலை தூக்கத் தொடங்குகிறது. கெனி யாவில் சுதேசி மக்களின் கிளர்ச்சி யைக் கவனித்தால் இது தெரியும். நாகர்கள் விஷயத்தை இப்படிச் சொல்வதற்கில்லை. இன்னும் பழைய சம்பிரதாயப்படிதான் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். பொருளாதாரத் துறையில் இது வரையில் அவர்களுக்கும் மற்றவர் களுக்கும் போட்டி பொறாமை எதுவும் ஏற்படவில்லை. இதி லிருந்தே இந்த அங்காமி நாகர்கள் கிளர்ச்சியின் மர்மம் - வேண்டு மென்றே இவர்களைச் சிலர் கிளப்பி விட்டிருக்கிறார்கள் என்பது - தெரியும்.

இந்த மாதிரி நிலையில் நாகர் வாழும் பிரதேசங்களில் திறமை யும் வலிவும் உள்ள நிர்வாகம் இருக்க வேண்டியது அவசியம். ஆனால் அதுதான் இப்போது அங்கே இல்லை. அந்தப் பக்கத் தில் நல்ல அநுபவமுள்ள உத்தி யோகஸ்தர்கள் இராததே ஒரு பெருங்குறை.

மார்ச் 30-ஆம் தேதி நேரு வின் பிரசங்கத்தின்போது இந்த மாதிரி நடக்கும் என்று அதிகாரி கள் யோசித்ததாகக்கூடத் தெரிய வில்லை. நாகர் தேசியக் கவுன் ஸில், யாரும் விரசமாக நடந்து கொள்ள மாட்டார்கள் என்று சொன்னதை அதிகாரிகள் அப் படியே கண்ணை மூடிக்கொண்டு நம்பிவிட்டார்கள்.

பிறகு ஏப்ரல் முதல் வாரத்தில் கோஹிமாவில் சில வீடுகளைச் சோதித்தபோதுதான் பல விஷ யங்கள் தெரிந்தன. டில்லியிலுள்ள வெளிநாட்டு நிருபர்களுக்கு நாகர் தேசீயக் கவுன்ஸில் அவ்வப் போது பொய்த் தகவல்கள் அனுப்பினதாகவும் இன்னும் நாட்டுக்கே தீங்கு விளைவிக்கும் சில செயல்கள் செய்திருப்பதாகவும் தெரிந்தது. ஓர் அமெரிக்கப் பாதிரியின் வீட்டைச் சோதித்த போது துப்பாக்கித் தோட்டாக் களும் செப்புக் கம்பிகளும் கிடைத் தன.

நேரிலேயே நாகர் விவகாரத்தை நேரு கவனித்துவிட்டு வந் திருப்பதால் இனியாவது நிலைமைக் கேற்றபடி அதிகாரிகள் நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். நாகர் தேசியக் கவுன்ஸில் இனி உருளைக் கிழங்கு முதலிய பொருள்களின் மேல் விதித்திருக்கும் வரியை வசூலிக் கக் கூடாது என்று உத்தரவிட எண்ணியிருக்கிறார்கள் இந்திய சர்க் கார். இப்படி வருஷந்தோறும் லட் சம் ரூபாய் வசூலாகிறது. முன்பு நாகர் கவுன்ஸில் மூலம் யுத்தத்தில் ஏற்பட்ட சேதத்துக்குப் பரிகாரத் தொகை அளித்து வந்தார்கள். ஆனால் அங்காமி நாகர்கள் இதைப் பிற நாக ஜாதியாருக்குச் சரிவர

விநியோகம் செய்யவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இனிமேல் சர்க்கார் தாங்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளப் போகிறார்கள்; அங்காமிகள் அந்தப் பணத்தையெல்லாம் நாகர் தேசியக் கவுன்ஸிலைப் பலப்படுத்த உபயோகித்து வந்ததாகச் சந்தேகப்படுகிறார்கள்.

அஸ்ஸாம் சட்ட சபையில் மலைப்பிரதேசத்துப் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் நாகர்களுடன் நல்லுறவு நீடிக்க ஒரு கோஷ்டியாகப் புறப்பட்டு நாகர் மலைப் பிரதேசங்களுக்குப் போவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அதோடு வெளி விவகார இலாகாவைச் சேர்ந்த ஒரு மேலதிகாரியை அனுப்பி அங்கே வாழும் பல பழங் குடிகளுடன் நேராகத் தொடர்பு வைத்துக்கொள்ளப் போகிறார்கள். வெளி நாட்டுப் பாதிரிகள் அங்கே என்ன என்ன செய்து வருகிறார்கள் என்று இவர் அவ்வப்போது சர்க்காருக்குத் தகவல் அனுப்பி வருவார். நாகர்களிடையே விஷமப் பிரசாரம் செய்து வந்த ஒரு பாதிரியை அஸ்ஸாம் சர்க்கார் அங்கிருந்து வெளியேற்றி விட்டார்கள்.

இனியாவது அங்கே நன்கு கவனித்து நிர்வாகம் செலுத்தி, நாகர்களும் சமவெளியிலுள்ள மற்ற இந்திய மக்களும் இணைந்து வாழ வழி வகை செய்வது அவசியம்.

அவர் விருப்பம்

கடைவீதியில் ஒரு கனவான் சென்றுகொண்டிருந்தார். தெருவில் சாமான்களைத் தூக்கிச் சென்று விற்கும் ஒருவன் அவரை நெருங்கி, "குட் மார்னிங் ஸார், தங்களுக்கு என்ன விருப்பம்?" என்று கேட்டான்.

"என் விருப்பம் ரிட்டா என்ற நடிகையை முத்தமிட வேண்டும் என்பது. ஆனால், இப்போது எனக்குத் தேவை ஒரு டெர்பி தொப்பி" என்றார் கனவான். —டிட் பிட்ஸ்

கடவுள் காப்பாற்றுவார்

ஒரு கனவான் எப்போது அயலூருக்குப் போனாலும், தம் மனைவிக்கும் குழந்தைக்கும் துணையாக ஒரு நண்பரை அழைத்து வைத்துவிட்டுப் போவது வழக்கம். ஒரு சமயம் அவசர நெருக்கடியால் அப்படிச் செய்யாமல் போய்விட்டார்.

மனைவி மிகவும் தீரமாகவே இருந்தாள். ஆனால் மாலையில் இருட்டத் தொடங்கியதும் கொஞ்சம் பயம் தோன்றி விட்டது. தன் சிறுமகளும் தானுமாக வெகு நேரம் தூக்கம் பிடிக்காமல் விழித்திருந்தாள். அப்புறம், "இனியும் விழித்திருப்பது சரியல்ல. தூங்கு, கண்ணே! பயப்படாதே. கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்" என்று சிறுமிக்குத் தைரியம் சொன்னாள்.

"இன்று ராத்திரிக்கு இது சரி, அம்மா. அடுத்த தடவைக்குக் கொஞ்சம் நல்ல ஏற்பாடாகச் செய்ய வேண்டும்" என்றாள் சிறுமி. —'காரொனெட்'

வராக அவதாரம்

பரீட்சித்து மன்னன், "சாகும் நிலையில் இருப்பவன் என்ன செய்ய வேண்டும்?" என்று சுக முனிவரைக் கேட்டான்.

அவர், "சரியான கேள்வியைத் தான் கேட்டீர்கள். இது ஆத்ம ஞானிகள் போற்றக் கூடியதுதான். ஆத்ம சிந்தனை இல்லாதவர்களுக்குக் கேட்பதற்கும் பார்ப்பதற்கும் எத்தனையோ விஷயம் இருக்கலாம். தூக்கத்திலும் சுகபோகத்திலும் இரவில் பாதி வாழ்வு கழிந்துவிடுகிறது. பகலிலோ பணம் சம்பாதித்துக் குடும்பத்தைக் காப்பாற்றுவதில் காலம் கழிகிறது. தம் உடல், மனைவி மக்கள் எல்லாம் அழிந்துபோவதைப் பார்த்தும் பாராதிருப்பவர் போலவே உலகத்தார் வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே, குடும்பத்தில் கவலையும் திகிலும் படாமல் இருந்துவர, ஹரி நாமத்தைக் காதால் கேட்டும் வாயால் ஜபித்தும் வாழவேண்டும். அவரைப்பற்றியே என்றும் தியானித்தும் வரவேண்டும். இறக்கும் போது பகவானின் நினைவு வருவதுதான் பிறவி எடுத்ததற்கே பயனாகும். முனிவர்கள் உலகத்தைத் துறந்து காடு சென்றார்கள்; பகவானுடைய நாமத்தைச் சொல்லி மகிழ்ந்தார்கள். வேதத்துக்கு ஒப்பான இந்தப் பாகவத புராணத்தைத் துவாபர யுகத்தின் ஆரம்பத்தில் என் தந்தை வியாசரிடமிருந்து கற்றேன். நான் ஆத்மாவிலேயே ஈடுபட்டிருந்தாலும் பகவானின் சிறந்த லீலைகள் என்னைக் கவர்ந்துவிட்டன. அதனால்தான் எப்போதும் பாகவதத்தைக் கூறி வருகிறேன். அதையே உங்களுக்கும் சொல்கிறேன். கட்வாங்கன் என்ற மன்னன் தனக்கு முடிவுக் காலம் நெருங்குவதை உணர்ந்து ஒரே கணத்தில் எல்லாவற்றையும் விட்டுப் பகவானைச் சரணமடைந்தான். உங்களுக்கோ ஆயுட்காலம் இன்னும் ஏழு நாள் இருக்கிறது.

கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.

அதற்குள் நற்கதிக்கு வேண்டிய எல்லாவற்றையும் செய்து முடிக்கலாம்'' என்றார்.

இப்படி அவர் பாகவதத்தின் மகிமையைப் பரீட்சித்துக்குக் கூறி முக்தியின் நிலை, பக்தியின் உயர்வு, உலக சிருஷ்டி முதலியவற்றைப் பற்றி விரிவாகச் சொன்னார். பிறகு விதுரருக்கும் மைத்திரேயருக்கும் நடந்த சம்பாஷணையை எடுத்துரைத்தார்:

''பிரம்மாவின் உற்பத்தி முதல் பல விஷயங்களை மைத்திரேயர் விதுரருக்குச் சொல்லிக்கொண்டே வந்தார். பிறகு ஸ்வாயம்புவ மநுவின் வரலாற்றைக் கூறலானார்: ஒரு சமயம் பிரம்மா தம் சரீரத்தை இரண்டாகச் செய்துகொண்டார். அதில் ஒன்று ஆணாயிற்று; மற்றொன்று பெண்ணாயிற்று. ஆண் வடிவமே ஸ்வாயம்புவ மநு. பெண் சதரூபை என்ற பெயருடன் அவர் மனைவியானாள். இவர்களுக்குப் பிரியவ்வதன், உத்தானபாதன் என்று இரு பிள்ளைகளும் ஆகூதி முதலிய மூன்று பெண்களும் பிறந்தார்கள். இவர்களும் மணம் செய்துகொண்டு உலகத்தை வளர்த்து வந்தார்கள்.

''ஒரு நாள் மநு தாம் வசிக்கும் பூமி நீரில் மூழ்கி இருப்பதைக் கண்டு பிரம்மாவைப் பார்த்து, 'பிரபுவே, இதென்ன இப்படி நீரில் மூழ்கிவிட்டதே! இதை எடுக்க அருள் புரியவேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

''பிரம்மா, 'இதை எப்படி மேலே எடுப்பது? சிருஷ்டிக்குப்போதே இது நீரில் அமிழ்ந்து பாதாளத்தில் போய்விட்டது. பூமி இல்லாமல் எப்படிப் படைக்க முடியும்? இப்போது என்ன செய்வது?' என்று யோசித்தார்.

''அப்போது அவர் மூக்கிலிருந்து கட்டைவிரல் அளவுடைய பன்றிக் குட்டி ஒன்று வெளிவந்தது. பார்த்துக்கொண்டே இருக்கும்போது அது கணப் பொழுதில் யானை

போல் பெரிதாகிவிட்டது. மரீசி முதலிய அந்தணர்களும் ஸனகாதி முனிவர்களும் இதைக் கண்டு ஏதேதோ எண்ணித் திகைத்தார்கள்.

"பிரம்மா, 'ஒருவேளை பகவானே நம்மைத் தேற்ற இந்த வடிவத்தில் வந்திருக்கிறாரோ?' என்று முனிவர்களிடம் சொன்னார்.

"இதற்குள் அந்தத் தெய்வப் பன்றி திக்கெங்கும் எதிரொலிக்கக் கர்ஜித்தது. பிரம்மாவும் மற்றவர்களும் அது பகவான்தான் என்பதை உணர்ந்துகொண்டார்கள். ஜனோலோகம், தபோலோகம், சத்தியலோகம் இவற்றில் வசிப்பவர்களுடன் சேர்ந்து பகவானைப் பிரம்மா போற்றலானார்.

"மீண்டும் வராகமூர்த்தி கர்ஜித்துக் கடலில் தாவினார். வாலைத் தூக்கிக்கொண்டு பிடரி மயிர் சிலிர்த்து நிமிர்ந்து நிற்கக் குளம்புகளால் மேகத்தை அடித்துக் கண்கள் தீயைக் கக்க வெண்மையான கோரைப் பல்லுடன் நீரில் நுழைந்தார். பூமி இருக்கும் இடத்தை மோப்பம் பிடித்துக்கொண்டே சென்றார். அவர் குதித்த வேகத்தில் கடல் கலங்கிக் கொந்தளித்தது. அலைக் கைகளைத் தூக்கி அது, 'பகவானே, என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று ஓலமிட்டது.

"அப்போது பூமி தட்டுப்படவே வராகமூர்த்தி அதை நீரிலிருந்து எடுத்து உயரத்தில் பிடித்து நீரின் மேல் வந்தார். அப்போது பராக்கிரமசாலியான ஹிரண்யாட்சன் என்ற அசுரன் கதையைத் தூக்கிய படி அவரைத் தடுக்க வந்தான். அவனை அவர் விளையாட்டாகவே நீரில் கொன்றுவிட்டார். பிறகு கோரைப்பல்லில் பூமியை ஏந்திக் கொண்டு மதயானைபோல் திரும்பி வரும் வராகமூர்த்தியை எல்லாரும் வணங்கித் துதித்தார்கள்.

"அதைக் கேட்டு மகிழ்ந்த பகவான் உலகனைத்தும் மகிழப் பூமியைக் கடலில் மிதக்கவிட்டார். பின் எல்லாருக்கும் அருள் புரிந்து மறைந்தார்.

'பகவானுடைய இந்த லீலையைப் பக்தியோடு கேட்டாலும் கேட்டவருக்குக் கூறினாலும் நம் உள்ளத்தில் அவர் குடி கொண்டு நம் கஷ்டங்களைப் போக்குவார். அவர் அருள் இருந்தால் நமக்கு எதுதான் கிட்டாது!" என்று சொல்லி முடித்தார் சுகர்.

புருஷனின் பயம்

தன் புருஷன் எங்கேயோ காணமல் போய்விட்டதாக ஒரு பெண் போலீஸாரிடம் முறையிட்டாள். போலீஸ் அதிகாரியிடம் தன் புருஷனின் போட்டோ ஒன்றையும் கொடுத்தாள். அதை வாங்கிப் பார்த்துக்கொண்டே அவர், "இவரைக் கண்டுபிடித்தோமானல், முதலில் இவரிடம் ஏதாவது செய்தி சொல்ல வேண்டுமா?" என்று கேட்டார்.

"சொல்லுங்கள். கடைசியாக, என் அம்மா இப்போது வரப் போவதில்லை என்று தந்தி அடித்துவிட்டாள் என்று சொல்லுங்கள்."

—வால் ஸ்ட்ரீட் ஜர்னல்

இந்த 'ஸ்லாட் மெஷின்'கள் தான் என்ன என்ன வியாபாரங்களைப் புரிகின்றன!

எதையும் விற்க யந்திரம்

★

2000 ஆண்டுகளுக்கு முன் அலெக்ஸாண்டிரியாவில் வாழ்ந்துவந்த கிரேக்க நாட்டுப் பௌதிக சாஸ்திரி ஒருவர் ஒரு யந்திரத்தைக் கண்டுபிடித்தார். அதில் ஒரு நாணயத்தைப் போட்டால் புண்ணிய தீர்த்தம் கொஞ்சம் வெளியே கசியும். அதை விசேஷ ஸந்தர்ப்பங்களில் பயன்படுத்துவார்கள். அதில் போட்ட நாணயம், உள்ளே ஒழுங்காகத் தொங்கும் ஒரு கம்பியின் மேல் படும். கம்பி மேலுங்கீழும் ஆடி அசைவதால் அதோடு பொருந்திய தண்ணீர்த் தொட்டி ஒன்றின் மூடி திறந்துகொண்டு அதிலிருந்து நீர் வெளியே விழும். கம்பி பழையபடி மேலுக்கு வந்ததும் நாணயம் உள்ளே ஓரிடத்தில் விழும். மூடியும் உடனே மூடிக்கொள்ளும்.

ஹீரோ என்பவர்தான் இதைக் கண்டு பிடித்தார். 'யுவர் லைஃப்' என்ற பத்திரிகையில் இதைப் பற்றி விவரமாக ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது.

பல நூற்றாண்டுகள் வரை இந்த மாதிரி யந்திரத்தைப் பலவிதத்தில் பயன்படுத்த முடியும் என்று யாருக்கும் தெரியாது; யாரும் எந்த வித முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. 1882-இல் ஜெர்மன் ஃபென்னிக் என்ற பென்னி நாணயம் போட்டால் நம் எடை எவ்வளவு என்று காட்டும் ஒரு கருவியை ஓர் ஆசாமி கண்டுபிடித்தார். அமெரிக்காவில் இது விசேஷமாக விற்பனையாயிற்று. ஒரு சத நாணயத்தைப் போட்டால் எடை காட்டும்படி அதை அங்கே அமைத்துக்கொண்டார்கள். இப்படியே ஒரு பென்னிக்கு மிட்டாய் அல்லது வேர்க்கடலை தரும்படி அமைத்தார்கள். இவை எங்கும் பிரபலமாகிவிட்டன.

'ஸ்லாட் மெஷின்' என்று வழங்கும் இந்த யந்திரங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் கிராக்கி சொல்லி முடியாது. இரண்டாம் உலக மகா யுத்தம் நின்ற பிறகு இவை இரண்டு மடங்காகப் பெருகிவிட்டன. சென்ற ஆண்டு இப்படிக் கற்கண்டு, நைலோன், துணி முதலிய பல சாமான்கள் லட்சக் கணக்கில் வியாபாரமாயின. இன்னும் 10 வருஷத்தில் வியாபாரம் இதைவிட மூன்று மடங்கு கூடப் பெருகும் என்று தெரிகிறது.

இந்த மாதிரி யந்திரம் இடத்தை அதிகமாக அடைத்துக்கொள்ளாது. திருட்டுத்தனத்துக்கு வழியில்லை. சாமான் வாங்குபவரும் அதிக நேரம் காக்க வேண்டியிராது.

காப்பிரைட்: ஃப்ரீ இந்தியா (ஆங்கிலம், 7-6-'58), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை.

நியூ யார்க் நகரின் பல தெருக்களில் சூயிங் கம், சாக்கலேட், கற்கண்டு, டொமாடோ ரசம், பால், அன்னாசி ரசம், ஆரஞ்சு ரசம், கோகோ கிரீம் இப்படிப் பல தின்பண்டங்களையும் கொடுக்கும் யந்திரங்களைக் காணலாம். போன ஆண்டு 37,40,251 டாலருக்கு இப்படி வியாபாரமாயிற்று.

பாஸ்டன் நகரில் உள்ள ஒரு கம்பெனியார் பஸ் புறப்படுமிடம், விமான நிலையம் இங்கெல்லாம் ஒரு டாலருக்குப் பொம்மை ரெயில் வண்டி, பெண்களுக்காக 75 சதத்துக்குப் பாட்டரி விளக்குகள் இப்படி 30 சாமான்களுக்குமேல் 'ரோபட்' யந்திர மூலம் விற்கிறார்கள்.

நெவார்க் விமான நிலையத்தில் ஒரு குவார்ட் நாணயத்தைப் போட்டால் மின்சார ரேஸர் சுக க்ஷவரம் செய்துவிடுகிறது.

ஆஸ்திரேலியாவில் எல்மெர் என்ற ஒரு யந்திரம் ஒரே சமயத்தில் 25 பண்டங்களை விற்பனை செய்கிறது. சமீபத்தில்தான் டெவிகாயின் கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனத்தார் பிரிட்டனில் இதைத் தருவித்திருக்கிறார்கள். பென்னி, நிக்கல், டைம், க்வார்ட்டர், அரை டாலர், 1.98 டாலர் வரை நாணயங்களைப் போட்டால் அது அதற்கேற்றபடி ஒரே தடவையில் 5 ரேஸர் பிளேட் முதல் பெட்டியில் வைத்து மூடிய பெரிய சாமான் வரையில் பெற்றுக் கொள்ளலாம்.

மிடில்வெஸ்ட் பிரதேசத்தில் இப்படி ஒரு யந்திரத்தில் நாணயம் போட்டால் ஒரு வேளைச் சாப்பாடு தாராளமாகக் கிடைக்கிறது. உருளைக்கிழங்கில் நாலு வகை, காய்கறியில் பதினொரு வகை, மாமிசத்தில் பதினாலு வகை இவற்றில் ஏதாவது ஒரு வகையை நம் இஷ்டம் போல் பெறலாம்.

1920-இல் இந்த மாதிரி இன்னும் விநோதமான யந்திரங்களெல்லாம் புழக்கத்தில் இருந்தன. 5 சதத்துக்கு ஒரு யந்திரம் பூட்ஸைத் துடைத்துவிடும்; கைக்குட்டைக்கு வாசனை தெளிக்கும்; ஒரு கண்ணாடியை நம் எதிரே நீட்டும். அதில் முகம் பார்த்து மகிழலாம்.

லண்டன் மிருகக் காட்சிச்சாலையில் சீல் என்ற கடற் பிராணி இருக்கும் இடத்தில் கிராதியில் இப்படி ஒரு யந்திரம் இருந்தது. அதில் ஒரு நாணயத்தைப் போட்டால் அடிபட்ட பன்றி கத்துவது போல் ஒரு சத்தம் கேட்கும். சீல்கள் அதனருகில் ஓடிவரும். உடனே அதிலிருந்து ஒரு பெரிய மீன் வந்து தண்ணீரில் விழும். இதைக் கேட்டுப் பார்த்துப் பழகிய சீல்கள் அந்தச் சமயம் பார்த்துக் காத்திருந்து மீன் தண்ணீரில் விழுவதற்குள் கவ்விப் பிடித்துவிடுகின்றன.

ஆரம்பத்தில் இந்த மாதிரி யந்திரங்கள் முன்னேறுவதற்குச் சில தடைகள் இருந்தன. இப்படிப் புது முறையில் சாமான் வாங்குவது பழம்பசலிகள் சிலருக்குப் பிடிக்கவில்லை. நுட்பமான யந்திரங்களாகையால் ஏமாற்றம் நேர்ந்தால் அந்தக் கோபத்தில் அதை உடைக்காதபடியும் போக்கிரிகள் அதைக் கெடுக்காதபடியும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டியிருந்தது.

அமெரிக்கர்கள் பிறத்தியார் யாரையும் ஏமாற்றமாட்டார்கள். ஆனால் யந்திரத்தை ஏமாற்றுவதென்றால் அவர்களுக்கு ஒரு குஷி.

யத்துச் சதம் விலையுள்ள பித்தளைக் காசை, வேலை மெனக்கட்டு வெகு நேரம் உட்கார்ந்து டாலர் அள வுக்கு அராவி ஸ்லாட் மெஷினில் போட்டுவிடுவார்கள். பித்தான், டோக்கன், வாஷர்கள் இப்படிப் பல பொருள்களை நாணயத்துக்குப் பதிலாக ரோபட் என்ற யந்திரத் தில் போட்டுப் பண்டங்களைப் பெற முயலுவார்கள்.

இது பலிக்காதபடி ஒரு புது யந்திரம் கண்டுபிடித்து அமைத் தார்கள். இதன் விலை 50 டாலர். இப்போது பிரிட்டனில் இந்த யந்திரத்தையும் இணைத்தே உப யோகிக்கிறார்கள். குவார்ட்டர் நாணயம் உள்ளே முதலில் 'ரிஜக் டர்' என்ற இந்தக் கருவியில் விழுகிறது. அதன் நிறை, அளவு எல்லாவற்றையும் 'ரிஜக்டர்' பரிசோதித்துப் போலிகளை ஒரு புற மாக ஒதுக்கித் தள்ளிவிடும். பிறகு ஓர் ஊசி அதைக் குத்திப் பார்த்து, வாஷர் அல்லது நடுவில் தொளை யிட்ட டோக்கன் இல்லையா என் பதை நிதானிக்கும். கடைசியில் காந்தம் அதைப் பரிசோதிக்கிறது. அது மற்ற மட்டரக உலோகம் முதலியவற்றைச் சரியான நாண யங்களைவிட நிதானமாகவோ சற்று அதிக வேகமாகவோ தூக்கி எறிகிறது. இப்படி எறியும்போது சரியான நாணயம் மட்டும் சரி யான வேகத்தில் சரியான தொளை யில் போய் விழுகிறது. அப்புறந் தான் 'ஸ்லாட் மெஷின்' வேலை செய்யும். ஆகவே, உபயோகமற்ற உலோகம் முதலியவை தரையில் போய் விழும். சில பழைய மெஷின் மட்டரக நாணயங்களை உள்ளே வீசியடிக்கும்போது முதலில் ஒரு மணியின்மேல் பட்டுத்தான் அவை கீழே விழும். அந்த மணியோசை கேட்டதும் நாணயம் போட்டவர் திகைத்து விடுவார்.

முதலில் சில 'ஸ்லாட்' மெஷின் களில் நாணயத்தைப் போட்டதும் எல்லாப் பண்டத்தையும் ஒரே மொத்தமாக வெளியில் கொட்டி விடும்படி செய்வதில் சிலர் சாமர்த் தியமாகப் பழகியிருந்தார்கள். சில குடிகாரர்கள் அதில் 'பீர்' ஊற்றி வேடிக்கை பார்ப்பார்களாம். ஆகவே, கெட்டியாக இருப்பதோடு நன்றாகக் கவசமிட்டு மூடிய யந் திரங்களைத் தயாரிக்க வேண்டி யிருந்தது.

இதே முறையில் சிகரெட் விற்கும் யந்திரங்கள் வந்தன. பிறகு புட்டிகளில் பண்டம், கோப்பை யில் குளிர்ந்த பானம், சூடான பானம் எல்லாம் இப்படியே விற்பனையாயின. சுடச் சுட ஒரு கோப்பை காபி என்றதும் கிராக்கிக்குக் கேட்பானேன்! முதலில் குடிக்க முடியாத அளவு சூடு இருந்தது. பின்னல் அவரவர் இஷ்டம்போல் சர்க்கரை சேர்த் தும் சேர்க்காமலும் கஷாயமாகவும் பால் கலந்தும் இப்படிப் பலவித மான வசதிகளுடன் காபி கிடைத் தது. டெட்ராயிட் மோட்டார்த் தொழிற்சாலையில் தொழிலாளர் வேலை செய்யும் இடத்திலேயே இப்படி ஒரு ஸ்லாட் யந்திரம் இருக்கிறது. நடு நடுவே அவர்கள் அதில் நாணயம் போட்டுச் சுடச் சுடக் காபிப் பெற்றுச் சாப்பிடுவார் கள்.

ஆனல் பொதுவாக எல்லா 'ஸ்லாட்' மெஷின்களும் ஆதிகாலத் தில் ஹீரோ என்பவர் செய்த முறையில்தான் இயங்குகின்றன. உள்ளே தொங்கும் கம்பி, நாணயத் தின் கனம் தாங்காமல் மேலுங் கீழும் ஆட ஒரு மூடி திறந்து அத

னால் யந்திரம் வேலை செய்யத் தொடங்குகிறது. பிறகு பண்டம் வெளியில் நம் கைக்கு எட்டும்படி கிடைக்கிறது.

அமெரிக்காவில்தான் இந்த மாதிரி யந்திரங்கள் ஏராளம் என்று எண்ண வேண்டாம். ஐரோப்பாவில் பல நாடுகளில் - முக்கியமாக நார்வே, டென்மார்க், ஸ்வீடன் முதலிய நாடுகளில் - பக்குவப்படுத்தி டப்பியில் வைத்த மாமிசம், பழம், பசைக் காய் கறிகள் இப்படி எத்தனையோ வகைப் பண்டங்களை இந்த 'ஸ்லாட் மெஷின்'களே விற்பனை செய்கின்றன. மூக்குப் பொடி, போட்டோ பிடிக்கும் பிலிம் இப்படி இன்னும் என்ன என்னவோகூட இவைகளில் கிடைக்கின்றன.

டென்மார்க்கில் இரவு ஆறு மணிக்குக் கடைகளை மூடிவிட்டாலும் இந்த யந்திரங்களை வேலை செய்ய வைத்துவிட்டுப் போய் விடுவார்கள். ரொட்டிக் கடைக்காரர், பழக்காரர், மீன் விற்பவர் எல்லாரிடமும் இப்படி ஒரு யந்திரம் இருக்கிறது. தக்காளியோ, ஆப்பிள் பழமோ, மீனோ, கேக்கோ, பாட்டரி விளக்கோ எது வேண்டுமானாலும் இதனிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம். சில யந்திரங்கள் தனித்தனி 70 பண்டங்களுக்குக் குறையாமல் விற்கின்றன என்றால் பாருங்கள்!

புத்தகம், தினசரிப் பத்திரிகை, சஞ்சிகை இவைகளை விறக இப்படிச் சில யந்திரங்கள் பயன்படுகின்றன. 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' பத்திரிகை நிர்வாகிகள் நியூயார்க், சிக்காகோ இரண்டு நகர விமான நிலையங்களிலும் இந்த யந்திரத்தை வைத்துப் பரீட்சித்துப் பார்த்தார்கள். நல்ல பலன் கிட்டியது. அதனால் ஐக்கிய அமெரிக்கா முழுதும் இப்போது நூற்றுக்கணக்கில் இந்த மாதிரி யந்திரங்கள் வைத்து இந்தப் பத்திரிகையை விற்பனை செய்கிறார்கள். 25 சத நாணயம் ஒன்றைப் போட்டால் அருகிலுள்ள ஏஜெண்டு அங்கே பெட்டியில் வைத்திருக்கும் பிரதிகளில் ஒன்று நமக்குக் கிடைக்கும். பத்திரிகை ஏஜெண்டு அங்கே இராமலே அவருடைய வியாபாரம் ஓங்கி அவருக்கு லாபமும் கிடைக்கும்.

'டைம்' என்ற பத்திரிகை நிர்வாகிகளும் இந்த முறையில் சந்தா வசூலிக்க முயன்று வருகிறார்கள்.

லாஸ் ஏஞ்சலஸ் என்ற இடத்தில் நமக்குப் பிடித்த கிராமபோன் ரிகார்டுகளை இப்படி ஒரு மெஷின் மூலம் வாங்கலாம். இதே மாதிரி நாம் குறித்த நேரத்தில் நம்மை எழுப்பும் யந்திரம் ஒன்றை லாஸ் வேகாஸ் என்ற இடத்திலுள்ள ஹோட்டல்களில் காணலாம். இன்னொரு யந்திரம், சோர்ந்திருக்கும் நம் உடலுக்கு ஊக்கம் அளிக்கிறது. ஸான் அண்டோனியோ என்ற இடத்தில் 25 சத நாணயம் போட்டால் சுத்தமான பிராண வாயுவை 10 செகண்டு நேரம் நாம் சுவாசித்ததும் சோர்வெல்லாம் நீங்கி நிமிர்ந்து நடப்போம்.

இன்னும் என்ன என்ன அற்புத யந்திரமெல்லாம் வரப் போகின்றனவோ?



நாம் வாழ்வது எந்தக் காலத்திலே? கடிகாரம் காட்டும் காலத்திலே அல்லவாம்!

மூளைக் கடிகாரம்

ஜான் ஈ. கிப்ஸன்

காலம் சில சமயம் மெதுவாகவும் சில சமயம் வேகமாகவும் ஓடுகிறதே, இது ஏன்? நீங்கள் மனத்திலே உணரும் காலத்தை, எந்தக் கடிகாரத்தாலும் அளக்க முடியாது. உங்கள் மூளையிலே அளவு ஸெண்டர்கள் இருக்கின்றன. அவைதான் உடலில் உள்ள உணர்ச்சிக் கடிகாரம். அந்தக் கடிகாரமே நீங்கள் மனத்தில் உணரும் காலத்தை அளக்கிறது.

களிப்பு, சோர்வு, வெகுளி முதலிய உணர்ச்சிகள் உங்களுக்கு உண்டாகும்போது, உடலிலே சில ரசாயன (கெமிக்கல்) மாறுதல்கள் ஏற்படுகின்றன. அந்த மாறுதல்களின் சக்தியால்தான் உங்கள் மூளைக்கடிகாரம் வேலை செய்கிறது. அது வேகமாக ஓடும்போது, நிமிஷங்களெல்லாம் மணிகளாகி விடுகின்றன; மெதுவாக ஓடும்போது, மணிகளெல்லாம் நிமிஷங்களாகிவிடுகின்றன.

சில பேருடைய மூளைக்கடிகாரம் எப்போதுமே மெதுவாக ஓடுகிறது. எந்தச் சமயத்திலும் சரி, தாங்கள் நினைப்பதைவிட அதிக நேரம் ஆகியிருப்பதைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். அழைப்பு, கூட்டம் முதலியவைகளுக்கு எப்போதும் நேரம் கடந்தே அவர்கள் செல்லுகிறார்கள். அவர்களுக்குக் கடிகார நேரம் அதிகமாக ஓடிவிடுகிறது. அதை எட்டிப் பிடிக்க அவர்களால் முடிவதேயில்லை.

வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்களுடைய மூளைக்கடிகாரம் மிக வேகமாக ஓடுகிறது. காலம் ஊர்ந்து செல்லுவதாக அவர்களுக்குத் தோன்றுகிறது. 15 நிமிஷம் சென்றால், ஒரு மணி சென்று விட்டதுபோல் அவர்கள் உணர்கிறார்கள். அவர்களில் ஒருவருக்கு ஏதாவது அழைப்பு அனுப்பிப் பாருங்கள். குறிப்பிட்ட நேரத்துக்கு மிகவும் முன்னதாகவே அநேகமாய் அவர் வந்து விடுவதைக் காண்பீர்கள்.

சில பேருடைய மூளைக் கடிகாரம், சுவரில் மாட்டியிருக்கும் கடிகாரத்தோடு சரி சமமாக ஓடுகிறது. எப்போது வேண்டுமானாலும் சரி; மணி என்ன இருக்கும் என்று அவர்களைக் கேட்டால், பத்து நிமிஷம் முன் பின்னாகச் சரியான நேரத்தை அவர்கள் ஊகித்துச் சொல்லி விடுவார்கள். பிரபல யூனிவர்ஸிட்டி ஒன்றின் மாணவர்

மூலம்: திஸ் வீக் (ஆங்கிலம்), ஐக்கிய அமெரிக்கா.

களைப் பரீட்சித்துப் பார்த்ததில், படிக்குப் பாதிப் பேர் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி எழுந்துவிட்டார்கள். இந்த மானிடக் கடிகாரங்கள்கூடச் சில சமயம் வேகமாகவோ மெதுவாகவோ ஓடி விடுவதுண்டு.

நம்முடைய மூளைக்கடிகாரங்களை, நம் உடம்பின் உஷ்ணம் பாதிக்கிறது. பிரபல உயிர் நூல் நிபுணரான டாக்டர் ஹட்ஸன் ஹோக்லாண்ட் என்பவர் இது சம்பந்தமாய்ச் சில உண்மைகளைக் கண்டு பிடித்திருக்கிறார். நம் உடம்பிலே அதிக உஷ்ணம் ஏற்படும்போது, காலம் மெதுவாக ஓடுவதுபோல் தோன்றுகிறதாம். மிகக் கடுமையான காய்ச்சல் அடிக்கிறபோது, நத்தைபோல் காலம் ஊர்கிறதாம். சகஜமான நிலைக்குக் கீழே உடம்பின் உஷ்ணம் இறங்கும்போதோ, காலம் அதிவிரைவாய்ப் பறந்துவிடுகிறதாம்.

உங்கள் மனத்தின் பல நிலைகளும் உங்கள் காலமதிப்பைப் பாதிக்கின்றன. அரிஸோனு ஸ்டேட் காலேஜில் ஒரு சோதனை நடத்தினர்கள். மனத்திலே நம்பிக்கையும் உற்சாகமும் இருந்தால் காலம் வேகமாக ஓடும். அப்படி இல்லாமல், சந்தேகமும் கவலையும் காலத்தின் கதியை மெதுப்படுத்திவிடும். காலம் ஊர்வதாக உங்களுக்குத் தோன்றி, அதைத் துரிதப்படுத்த நீங்கள் விரும்பினுல், ஒரு கப் காபி அல்லது டீ குடியுங்கள். அது நல்ல பலன் தரும். ஆனுல், மதுபானம் செய்வீர்களானுல், அது இரண்டு பக்கமும் சாய்ந்துவிடும். குடித்த பிறகு சிறிது நேரம் வரை 15 நிமிஷ நேரம் 45 நிமிஷம் போல வேகமாய் ஓடிவிடும். இதற்குப் பிறகோ காலம் வெகு மெதுவாக ஓடத் தொடங்கும். இருபதே நிமிஷத்தில் இப்படி நம் கால ஓட்டத்தை மதுபானம் திசை திருப்பிவிடும் என்று ஆத்மார் ஸ்டொர்லிங்கர் என்ற ஜெர்மன் விஞ்ஞானி சொல்லுகிறுர். ஆகவே, கால ஓட்டத்தைத் துரிதப்படுத்த மது பானம் பயனில்லை.

காலம் உங்கள் விஷயத்தில் எவ்வளவு வேகமாக ஓடுகிறது என்பது உங்கள் வயதையும் பொறுத்திருக்கிறது. உங்கள் குழந்தைப் பிராயத்திலும் வாலிபப் பிராயத்திலும், காலம் ஊர்கிறது; ஒவ்வொரு வருஷமும் செல்லச் செல்ல, அது விரைவுபட்டுக் சம்பிரமாக நடை போடுகிறது; கிழப்பருவம் வந்ததும், ஓட்டமாய் ஓடத் தொடங்குகிறது. உடல் வாழ்விலும் மனவாழ்விலும், அறுபது வயதுக் கிழவன் ஒருவன் ஐந்துமணி நேரத்தில் அடையும் அநுபவத்தை, ஒரே மணி நேரத்தில் ஒரு குழந்தை அடைந்து விடுகிறது என்று பியரி லி காம்டே டு நுவி என்ற பிரெஞ்சு விஞ்ஞானி சொல்லுகிறுர். இதனுல்தான் ஒரு குழந்தையின் கவனத்தை எந்த விஷயத்திலும் சில நிமிஷ நேரத்துக்கு மேல் நிலை நிறுத்தமுடிவதில்லை. ஏனென்றுல், கிழவனின் 50 நிமிஷம் எவ்வளவு நீண்ட நேரமோ அவ்வளவு நீண்ட நேரமாக இருக்கிறது குழந்தையின் பத்து நிமிஷம்.

இந்த விஷயங்களை யெல்லாம் பார்க்கும்போது, 'நாம் வாழ்வது கடிகாரம் காட்டும் காலத்தில் அல்ல; நம் மூளைக்குள் உள்ள கடிகாரம் உணரும் காலத்திலேயே' என்று தெளிவாய்த் தெரிகிறது.

'அதிசய உலக' ஆசிரியர்

★

அவர் ஒரு பாதிரி. அவர் பெயர் ரெவரண்டு சார்லஸ் லுட் விஜ் டாட்ஜ்ஸன். அவர் கணித சம்பந்தமாகப் பல அரிய நூல் எழுதிய நிபுணர். 'அதிசய உலகில் ஆலிஸ்' என்ற அற்புதமான சிறுவர் கதையை ஆங்கிலம் தெரிந்த குழந்தைகள் எல்லாருமே படித்திருப்பார்கள். அதை அவர்தான் எழுதினார். சொந்தப் பெயர் போடாமல் லூயி கரோல் என்ற புனைபெயர் வைத்துக்கொண்டு எழுதினதால் வெகுநாள் வரைக்கும் அவர்தான் அதை எழுதினார் என்று அநேகம் பேருக்குத் தெரியாது!

ஒல்லியாகவும் உயரமாகவும் வெள்ளை வெளேர் என்று இருப்பார் டாட்ஜ்ஸன். குழந்தைகளைக் கண்டால் அவருக்கு எவ்வளவு அன்பு தெரியுமா? எப்போதும் தலையில் உயரமான கறுப்புத் தொப்பியும் கையில் கம்பளி க்ளவ்ஸும் போட்டுக்கொண்டிருப்பார். குழந்தைகளுக்கு அவரைக் கண்டால் ஒரே குதூகலம். ஒரு சமயம் தம் நண்பர் ஒருவரின் வீட்டுக்கு அவர் போயிருந்தார். அங்கிருந்த குழந்தைகள் அவரைச் சுற்றிக் கூடிவிட்டார்கள். "பள்ளிக்கூடத்தில் கணக்கெல்லாம் போடுவீர்களோ இல்லையோ?" என்று அவர் விசாரித்தார். "ஓ! நிறையப் போடுவோமே!" என்றார்கள் குழந்தைகள். டாட்ஜ்ஸன் சற்று நேரம் சும்மா இருந்துவிட்டு, "உங்கள் பள்ளிக்கூடம் நல்ல பள்ளிக்கூடம் இல்லைபோல் இருக்கிறது!......நான் முதலில் கணக்கைப் போடுகிற வழக்கமில்லை. விடையைத்தான் போடுவேன். அப்புறந்தான் கேள்வியைத் தயாரிப்பேன்" என்றார். குழந்தைகள் அவர் சொல்வதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். "நாம் சில கணக்குகள் போட்டுப் பார்க்கலாமா?" என்று சொல்லி அவர்கள் வீட்டைச் சேர்ந்த ஓர் அம்மாளிடம் ஏதோ சில எண்களை எழுதிக் கொடுத்தார்; "விடை

'அதிசய உலகில் ஆலிஸ்' என்ற அற்புதச் சிறுவர் கதையை எழுதிய ஆசிரியரின் வாழ்க்கை வரலாறும் மிக்க ரஸமானதே. அவர் ஒரு கணித நிபுணர். புனை பெயர் வைத்துக்கொண்டார். குழந்தைகளிடம் பேரன்பு சொரிந்தார். அவரைப்பற்றிச் சிறுவரும் பெரியோரும் அறிந்து கொள்ள வேண்டும்

இந்த அம்மாளிடம் இருக்கிறது. நாம் கணக்குப்போட்டு முடித்ததும் விடை சரியா என்று பார்க்கலாம்'' என்றார்.

குழந்தைகள் உற்சாகத்துடன், 'நான் முந்தி, நீ முந்தி' என்று கணக்குப் போட முன்வந்தார்கள். பிறகு அவர் 1,066 என்று ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி ஒரு பெண்ணிடம் கொடுத்தார். ''உன் இஷ்டம்போல் இதன்கீழ் இதே மாதிரி நாலு ஸ்தானத்துக்கு ஒரு தொகை எழுது'' என்றார்.

அந்தப் பெண் 3,478 என்று எழுதினாள். அதற்குக் கீழ் அவர் 6,521 என்று போட்டார். அப்புறம் ஒரு பையனைக் கூப்பிட்டார். ''நீயும் அவள் மாதிரி நாலு ஸ்தானத்தில் ஒரு தொகை போடு'' என்றார். அவன் 7,150 என்று எழுதினான். கடைசியில் அவர் 2,849 என்று போட்டார். இன்னொரு பையனைப் பார்த்து, ''எல்லாவற்றையும் கூட்டிச் சொல்'' என்றார். அவன் அதைக் கூட்டி, ''21,064'' என்று விடையைச் சொன்னான்.

முன்னதாகவே டாட்ஜ்ஸன் எழுதிக் கொடுத்த தாளைக் கையில் வைத்துக்கொண் டிருந்த அம்மாளும், ''அதே தொகைதான்'' என்றாள். குழந்தைகள், ''ஓ!'' என்று சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

இது குழந்தைகளுக்கு அதிசயமாயிருந்தாலும், அவர் செய்தது மிகவும் சுலபமான யுக்தியே. ஒரு குழந்தை போடும் தொகைக்கு அடுத்தாற்போல் அவரும் ஒரு தொகை போட்டார் அல்லவா; அந்த இரண்டையும் சேர்த்துக் கூட்டினால், 9999 என்ற எண்ணே வரும்படி அவர் பார்த்துக்கொண்டார். இப்படி இரண்டு 9999 சேர்ந்தால், 20 ஆயிரத்துக்கு இரண்டு குறையும்; இதுதான் சூட்சுமம்.

பிறகு ஒரு பையனை 12345679 என்று வரிசையாக எழுதச் சொன்னார். அவன் அப்படியே எழுதினதும் அதைச் சற்று நேரம் கவனித்துவிட்டு, ''தெளிவாக எழுத மாட்டேனென்கிறாயே! இந்த எட்டு எண்ணில் எதை ரொம்ப விகாரமாக எழுதியிருக்கிறாய், பார்'' என்றார்.

பையன் உற்றுப் பார்த்துவிட்டு, ''5-ஐத்தான்'' என்றான். ''சரி; 45-ஆல் இந்தத் தொகையைப் பெருக்கு, பார்க்கலாம்'' என்றார் அவர். பையன் கஷ்டப்பட்டுப் பெருக்கி முடித்தான். அவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 555555555 என்ற விடை கிடைத்தது. பத்துத் தடவை 5 என்ற எண்ணை 'இம்போஸிஷன்' எழுதின மாதிரி ஆகிவிட்டது! பையன், ''சரி. நான் 4 என்று சொல்லியிருந்தேனால்-!'' என்றான். ''விடையில் வரும் எண்ணெல்லாம் நாலாக இருக்கும்'' என்றார் அவர். அப்போது 36-ஆல் பெருக்கவேண்டும் என்று அவர் சொல்லியிருப்பார். ''45-ஐப்போல் 36-உம் 9-ஆல் மிச்சமில்லாமல் வகுக்கக்கூடிய தொகை. எந்த எண்ணை நன்றாக எழுதவில்லை என்று சொல்கிறாயோ அதை 9-ஆல் பெருக்கி வந்த தொகையினால் 12345679 என்பதைப் பெருக்கவேண்டும். அப்போது வரிசையாக அதே எண் கொண்ட தொகை விடையாக வரும்'' என்றெல்லாம் அவர் விவரித்துக்கொண்டிருக்கவில்லை.

இப்படிக் குழந்தைகளுக்கான விடுகதைகள், தமாஷ் கணக்கு

கள், சிறுவர் நாடகங்கள் எல்லாம் தயாரித்து வந்தார் டாட்ஜ்ஸன். அப்போது அவர் ஆக்ஸ்ஃபோர்டு சர்வகலாசாலையில் கணிதம் போதித்து வந்தார்.

ஒரு நாள் மாடியில் தனியே தம் அறை ஜன்னலருகில் அமர்ந்திருந்த போது மூன்று பெண் குழந்தைகள் அடுத்த வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர்களுக்குச் சில வேடிக்கை விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுத்தார். அதுமுதல் அந்தக் குழந்தைகள் அவரைத் தேடிக்கொண்டு வருவார்கள்; கதை சொல்லச் சொல்வார்கள். அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு நாள் ஓர் ஆற்றங்கரைப் பக்கம் 'பிக்னிக்' நடத்தப் புறப் பட்டார். அந்தக் கரையோரம் வைக்கோல் போரின் நிழலில் சிற்றுண்டி சாப்பிட உட்கார்ந்ததும் குழந்தைகள் ஒரு கதை சொல்லச் சொன்னார்கள். "அருகே இருந்த ஒரு வளையில் ஆலிஸ் நுழைந்தாள்" என்று கதையை ஆரம்பித்தார் டாட்ஜ்ஸன். வளைக்குள்ளிருந்த அதிசய உலகில் அவள் பல விநோதப் பிராணிகளைப் பார்ப்பதாகக் கதையைப் பின்னிக் கொண்டே போனார்.

அந்த மூன்று குழந்தைகளில் ஆலிஸ் லிட்டெல் என்பவள் கதையை அப்படியே எழுதிக் கொடுக்கும்படி அவரைக் கேட்டுக் கொண்டாள். அவர் ஒருநாள் இரவு முழுதும் உட்கார்ந்து எழுதிக் கொடுத்த அந்தக் கதையை லிட்டெல் குடும்பத்தார் தம் வீட்டு மேஜைமேல் வைத்திருந்தார்கள். வீட்டுக்கு வருவோர் போவோரெல்லாம் அதைப் படித்துவிட்டுக் கட்டாயம் அதை அச்சிட்டு வெளியிட வேண்டுமென்று அடிக்கடி சொல்லி வந்தார்கள். டாட்ஜ்ஸனுக்குச் சம்மதமில்லை. கடைசியில் 'பஞ்ச்' என்ற ஹாஸ்யப் பத்திரிகையில் படம் எழுதிவந்த டென்னியல் என்ற பிரபல ஓவியர் தாம் அந்தப் புத்தகத்துக்குப் படம் எழுதுவதாகச் சொல்லவே, டாட்ஜ்ஸன் புதிதாகப் பல அத்தியாயங்களைச் சேர்த்தார். தம் சொந்தச் செலவில் மாக்மில்லன் கம்பெனியார் மூலம் அதை அச்சிட்டு வெளியிட ஏற்பாடு செய்தார். ஏற்கனவே ஓர் இலக்கியப் பத்திரிகையில் கரோல் என்ற புனைபெயரில் தமாஷ் கவிதைகள் எழுதிவந்தார். அதேமாதிரி இதையும் லூயி கரோல் என்ற பெயரில் 1865-இல் வெளியிட்டார்.

விக்டோரியா மகாராணி அதைப் படித்து ரசித்து, அரண்மனைக்கு வரும்படி அவருக்கு அழைப்பு அனுப்பினாள். அப்படியே வந்து பேசிவிட்டு, அவர் மகாராணியிடம் விடை பெற்றுக் கொள்ள எழுந்தபோது அவள், "மிஸ்டர் டாட்ஜ்ஸன், அடுத்த புத்தகம் ஏதாவது அச்சானதும் எனக்குக் கட்டாயம் ஒரு பிரதி அனுப்பி வைக்கவேண்டும்" என்றாள். மகாராணியின் உத்தரவுப்படியே அவர் அடுத்து வெளியிட்ட ஒரு புத்தகத்தை அனுப்பிவைத்தார். ஆனால் மகாராணி அதைப் பிரித்துப் பார்த்ததும் ஏமாற்றம் அடைந்தாள். கணித சம்பந்தமான ஓர் ஆராய்ச்சி நூல் அது!

'ஆலிஸை'ப் பாராட்டாதவரில்லை. வேறு யாராவதாக இருந்தால் தலைக்கிறுக்கு ஏற்பட்டிருக்கும். ஆனால் டாட்ஜ்ஸனுக்குத்

தம்மை யாராவது புகழ்ந்தால் கூச்சம் வந்துவிடும். அந்த இடத்தில் நிற்காமல் ஓடி விடுவார். பத்திரிகையில் வெளியாகும் மதிப்புரைகளை அவர் படிப்பதில்லை. விருந்து, வேறு ஏதாவது விசேஷ நிகழ்ச்சிகளுக்கு யாராவது அழைத்தாலும் அவர் போவதில்லை. நண்பர்களைத் தனியே கண்டு களிக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். "நீங்கள் அழைத்தீர்களோ இல்லையோ? அதனால் நான் வரப் போகிறதில்லை'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுவார்.

பிரயாணத்தின்போது முன் ஜாக்கிரதையாக இருக்கவேண்டிப் பல உறைகள் தைத்த தோல் பை வைத்திருப்பார். அவற்றில் அந்த அந்தச் சந்தர்ப்பத்துக்கு வேண்டிய படி சரியான அளவு தொகையைச் சில்லறையாகவும் முழுசாகவும் வைத்திருப்பார். கடிதப் போக்குவரத்து விஷயத்திலும் கவனமாக இருந்து குறிப்பு எழுதிவைப்பது வழக்கம். அவருடைய கடைசிக் குறிப்பில் 98,721 என்ற கடித எண் இருந்தது.

ரஸ்கின், டென்னிஸன், ராஸெட்டி முதலிய பிரபல அறிஞர்கள் அவருடைய ஆப்த நண்பர்கள். அப்படி இருந்தும், குழந்தைகளிடம் குழந்தை உள்ளத்தோடு அவர் பழகி வந்தார். ரெயில் வண்டியிலோ தோட்டங்களிலோ குழந்தைகளைக் கண்டால் அவர் அவர்களோடு விளையாட ஆரம்பித்து விடுவார். அவர் ஜேபியில் எப்போதும் விளையாட்டுக் கருவிகள், சின்னக் கத்திரி இப்படிப் பல சாமான்கள் இருக்கும்.

'ஆலிஸ்' கதையை நாடகமாகப் பல இடங்களில் நடத்தினர்கள். அதில் ஆடிய பல குழந்தைகளுக்குச் சிறந்த கல்வி போதிக்க ஏற்பாடு செய்தார் டாட்ஜ்ஸன்; அவர்களை அடிக்கடி தம் விடுதிக்கு அழைத்து விருந்தளிப்பார். பொழுது போகக் கிராமங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுவார்.

அவருடைய பீரோவில் குழந்தைகளுக்கு வேண்டிய தினுசு தினுசான உடைகள், புதிர்கள், யந்திரம் வைத்த சுண்டெலி தவளைப் பொம்மைகள், விசையைத் திருகி விட்டால் அறை முழுதும் பறக்கும் வௌவால் இப்படிப் பல சாமான்கள் இருந்தன. சாப்பிட்டானதும் கணப்பு எதிரில் குழந்தைகளை மடிமேல் வைத்துக்கொண்டு பல அற்புதமான கதைகளைச் சொல்லி மகிழ்விப்பார்.

ஐஸா பௌமான் என்ற சிறுமி 'ஆலிஸ்' ஆகப் பல தடவை வேஷம் போட்டு ஆடினவள். அவளுக்குத் தாமே பூகோளம், கணிதம், பைபிள் எல்லாம் சொல்லிக்கொடுத்தார். அவள் தன் தாயோடு ஷேக்ஸ்பியர் நாடகங்களில் குழந்தை வேஷம் போட அமெரிக்காவுக்குப் போயிருந்தாள். அப்போது தபால் மூலம் அவளுக்குப் பாடம் போதித்து வந்தார் டாட்ஜ்ஸன். அவள் இங்கிலாந்திலிருந்து புறப்படுவதற்குமுன் ஒரு கண்காட்சிக்கு அவளை அழைத்துச் சென்றார். அங்கே நயாகரா நீர்வீழ்ச்சிபோல் ஒரு காட்சி அமைத்திருந்தார்கள். பிரயாணிகள் இருவரும் ஒரு நாயும் அந்தக் காட்சியைப் பார்ப்பதுபோல் அங்கே மெழுகில் செய்து வைத்திருந்தார்கள். டாட்ஜ்ஸன் பூகோளத்தை மறந்து அந்த நாயைப்பற்றி ஒரு கதை சொல்ல ஆரம்பித்துவிட்டார். "இதை அசையாமல் இருக்கப்

பழக்கியிருக்கிறார்கள். உற்றுப் பார். இதன் வால்மட்டும் சற்று அசையும்'' என்றார் ஐஸாவிடம். ஐஸா அப்படியே கவனித்தாள்.

''ஆமாம்! வால் அசைகிறது!'' என்று அவள் உற்சாகமாகக் கூவினாள். பிறகு அவர், ''இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால் இதற்கு இரைபோட ஆள் வருவான பார். ஒரு நாள் ஒரு பெண் இங்கே வந்து அப்பம் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். அப்போது சப்பென்று இந்த நாய் அதைக் கவ்வ வந்துவிட்டது...'' என்றார். இதற்குள் பெரியவர்கள் பத்துப் பன்னிரண்டு பேரும் சில குழந்தைகளும் அவர்களைச்சுற்றிக் கூடிவிடவே திக்கித் தயங்க ஆரம்பித்துவிட்டார் டாட்ஜ்ஸன். அப்புறம் அவர் அங்கே ஏன் நிற்கிறார்? பரபரவென்று ஐஸாவை அழைத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டார்.

இன்னொரு சமயம் குழந்தைகள் அழைக்கவே ஒரு வீட்டுக்குப் போயிருந்தார். வீடு சரியாக நினைவிராமல் பக்கத்து வீட்டில் நுழைந்தார். வாசல்பக்க அறையில் நுழையும்போது மண்டியிட்டுத் தவழ்ந்து கரடிபோல் கத்திக்கொண்டே வந்தார். ஆனால் அங்கே குழந்தைகளைக் காணவில்லை; சில ஸ்திரீகள்தான் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் இவ்வளவு பெரியவர் இப்படிக் கத்துவதைப் பார்த்துத் திகைத்தார்கள். உடனே வெட்கம் தாங்காமல் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார் டாட்ஜ்ஸன்.

எந்தக் குழந்தைகளாக இருந்தாலும் அவர் வித்தியாசம் பாராட்டுவதில்லை. கில்டுஃபோர்டு என்ற இடத்தில் பெரிய பட்சணக்கடை ஒன்று இருந்தது. அங்கே டாட்ஜ்ஸன் சாப்பிடப் போவது வழக்கம். ஒருநாள் காலையில் குளிர் நடுக்கி எடுத்தது. சில ஏழைக் குழந்தைகள் வாசலில் கண்ணாடி பீரோவில் தின்பண்டங்கள் அடுக்கி வைத்திருப்பதைப் பார்த்து ஏங்கி நின்றார்கள். மனமுருகி அவர்களையே சற்றுநேரம் கவனித்துவிட்டு, ''குழந்தைகளே, உள்ளே வாருங்கள். உங்களுக்கு எது வேண்டுமோ, கேட்டுச் சாப்பிடுங்கள்'' என்று கடைக்குள் அழைத்துப் போனார்; அவர்கள் ஆசை தீரத் தின்பண்டங்கள் வாங்கிக்கொடுத்தார்.

சிறுவர்களுக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம், ''நீங்கள் எந்தக் குழந்தையைச் சந்தித்தாலும் அதற்கு என் அன்பையும் ஆதரவையும் தெரிவியுங்கள்'' என்று அவர் எழுதுவது வழக்கம். குழந்தைகள் என்றால் அவ்வளவு ஆசை அவருக்கு.

பவுண்டன் பேனு ஏஜெண்ட்

ஒரு வியாபாரி தம் கூட்டாளியை, ''என் அந்தப் பவுண்டன் பேனுக்களுக்குக் கொடுத்த ஆர்டரை ரத்து செய்துவிட்டீர்கள்?'' என்று கேட்டார்.

''அந்தப் பவுண்டன் பேனு ஏஜெண்ட், நம் ஆர்டரைப் பென்ஸிலால் குறித்துக்கொண்டார், அதனால்தான்'' என்றார் கூட்டாளி.

—'புவன் ஹ்யூமர்,' ஸ்பெயின்.

இந்தக் காலத்தில் இந்த அநுபவம்
எல்லா நகரிலும் சர்வ சகஜம்!

வீடு எப்படி?

ஜி. வி. குல்கர்னி

நாங்கள் புது வீடு தேடினேம். ஏனென்ருல், இப்போது நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்காரர், "வீட்டைப் புதுப்பிக்கப் போகிறேன். இன்னெரு மாடி கட்டப் போகிறேன்" என்று எங்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டார். எங்கேயாவது 'டு-லெட்' அட்டை தொங்குகிறதா என்று நான் கண்ணை அகல விழித்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். எனக்கேற்ற வீடு கண்ணில் தென்பட்டால் தெரிவிக்கும்படி ஒவ்வொருவரிடமும் சொல்லி வைத்தேன். நண்பர்கள், சகாக்கள், பந்துக்கள், பியூன்கள், பால்காரன், சலவைக்காரன் எல்லாரிடமும் என் வீட்டுத் தேவையைத் தெரிவித்திருந்தேன். வீடு இன்ன இன்ன மாதிரி இருக்க வேண்டும், இன்ன வாடகையாக இருந்தால்தான் எனக்குக் கட்டும் என்ற விவரங்களையெல்லாம் அவர்களிடம் தெரிவித்துவிட்டு, அவர்களுடைய தகவலுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன்.

இப்படி நான் தெளித்திருந்த விதை காலக்கிரமத்தில் முளைவிடத் தொடங்கியது. சலவைக்காரன்தான் முதல் முதலாக என்னிடம் வந்தான். "இதோ பாருங்கள்; பூக்காரன் சந்தில் நல்ல இடம் ஒன்றிருக்கிறது" என்ருன்.

"சரி. போய்ப் பார்க்கலாமா?"

"போய்ப் பார்க்கத் தேவையே இல்லீங்க. இடம் விஸ்தாரமாயிருக்குது; சுத்தமாயிருக்குது. வேண்டிய வசதியெல்லாம் உண்டு. வாடகை மட்டு. உங்களுக்காகவே கட்டினது மாதிரி இருக்குது."

"அப்படியானுல் உடனே குடி போய் விடலாம்."

"ஆனுல், ஒரே ஒரு குறை. குறை என்றுகூடச் சொல்ல முடியாதுங்க. இருந்தாலும் ஒரு குறைதான்."

"என்ன, ஏதாவது பேய் அடைந்த வீடா? கொலை, தற்கொலை நடந்ததோ? அதெல்லாம் எனக்குப் பரவாயில்லை."

மூலம்; சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்; 24-5-'53), புது டில்லி.

"அப்படி யெல்லாம் இல்லே. அந்த வீட்டுக்குத் தனி வழி இல்லே."

"என்ன? சொல்வதைப் புரியும்படி சொல்லு."

"அதுதானுங்க குறை. ஒவ்வொரு தடவையும் வீட்டுக்குள்ளே போகும்போது இன்னொருவர் வசிக்கிற வீட்டுக்குள்ளே புகுந்தே போக வேண்டும். ஆனல், இரவோ பகலோ எப்போது வேண்டுமானலும் கதவைத் திறந்து விட அவர் மறுக்க மாட்டார்."

"ஹூம்" என்றேன் நான். சரிதான். நாங்கள் போய்க் கதவை இடித்தால், அவர் தூங்குவது போல் பாசாங்கு செய்வார்; அல்லது பல்லேக் கடிப்பார். இராத்திரியிலே நாங்கள் ஸினிமாவுக்குப் போய்விட்டு வந்தால், அவர் திடீரென்று வீட்டைப் பூட்டிக் கொண்டு எங்கேயாவது போய் விடுவார். வீட்டுக்குள்ளே ஏதாவது ஆபத்து என்ருல், ஜன்னலே உடைத்துவிட்டு, போர்வைத் துணிகளேக் கொண்டு கயிற்றேணி தயாரித்துத்தான் நாங்கள் வெளியிலே குதித்தோட வேண்டும். "பார்க்கலாம், அப்பா"

என்று சொல்லி அவனே அனுப்பினேன்.

அடுத்தபடியாக, பக்கத்து வீட்டுக்காரர் தகவல் கொண்டு வந்தார். திலகர் சதுக்கத்தில் எங்களுக்கு ஓர் அருமையான வீடு பிடித்துத் தருவதாக அவர் சொன்னர். அதைப் பார்ப்பதற்குத் தம்மோடு வரும்படி என்னே அழைத்தார். யாரும் அழையாமலே என் மனேவியும் கிளம்பி விட்டாள். மூன்று பேருமாகத் திலகர் சதுக்கத்துக்குப் போனேம். அது ஒரு பெரிய கட்டிடம். முதல் மாடி ஏதோ ஓர் ஆஸ்பத்திரி மாதிரி தோன்றியது. என் நண்பர் சாவி கொண்டு வந்திருந்தார். அலி பாபா குகையைத் திறப்பது போல ஒரு கதவைத் திறந்தார். "பாருங்கள்" என்ருர்.

நாங்கள் உள்ளே நுழைந்தோம். "இடம் நிறைய இருக்கு. இல்லேயா? சகல வசதிகளும் அமைந்திருக்கு. வாடகை முப்பது ரூபாய்தான். என்ன சொல்லுகிறீர்கள்?" என்ருர் நண்பர்.

நான் திகைப்படைந்து ஊமை போல் நின்றேன். மனேவியும் அப்படியே ஊமையாகிவிட்டாள்.

"உங்களுக்கு ஏதாவது குறை தோன்றுகிறதா?" என்று நண்பர் கேட்டார்.

"ஒரு குறையும் தோன்றவில்லை. இங்கேதான் சுவரே இல்லையே. சுவர் இருந்தால்தானே குறை சொல்ல. எனக்கு வேண்டியது மூன்று அல்லது நான்கு ரூம் உள்ள ஜாகை. இங்கே என்னடா என்றால் ஒரே திறப்பாக இருக்கிறது. ஆஸ்பத்திரிக்கு ஒரு வேளை இந்தச் சவக்கூடம் தேவைப்படவில்லையோ? அதனால்தான் இதை வாடகைக்கு விடுகிறார்களோ?" என்று நான் கேட்டேன்.

"சுவர்கள் எதற்கு? கூடத்தில் நீங்கள் எந்த மூலையில் உட்கார்ந்திருந்தாலும், மனைவி சமைப்பது தெரியும். குழந்தை தாராளமாய்த் தவழலாம்; தத்தி நடக்கலாம். புறாக்கள் மாதிரி அறையறையாய் எதற்காக அடைய வேண்டும்?"

"என்ன செய்வது? அப்படி நாங்கள் பழகிவிட்டோம்" என்றேன். இதோடு நாங்கள் திரும்பிவிட்டோம்.

மூன்றாவதாக என் நண்பன் ரஞ்சித் ஓர் இடம் பார்த்துக் கொண்டு வந்தான். அதைப்பற்றி அவன் வர்ணித்த வர்ணனையையெல்லாம் கேட்டுத் தலையை அசைத்தேன். பிறகு, "இனி அதில் என்ன குறை? அதைச் சொல்லு" என்று கேட்டேன்.

"ஒரே ஒரு குறைதான். அதில் குழாய் கிடையாது. அப்படியானால் தண்ணீரே அகப்படாதோ என்று பயந்து விடாதே. அந்த வீட்டில் தண்ணீருக்குப் பஞ்சமே இல்லை. நல்ல கிணறு இருக்கு. வேண்டிய தண்ணீரை நீ இறைத்துக்கொள்ள வேண்டியது. அவ்வளவுதான்."

"கிணற்றிலிருந்தா?"

"ஆமாம். அருமையான ராட்டினம் போட்டிருக்கு. சொந்தக்காரர் உங்களுக்குக் கயிறு தருவார். கிணற்று நீரில் சிறந்த மருந்து சத்துக்கள் இருக்கு."

"அப்படியானால், இது தேவலையே" என்றாள் மனைவி.

"இல்லை; இல்லை" என்று நான் கத்தினேன். அவளுக்கென்ன கவலை? அவ்வளவு தண்ணீரும் கிணற்றிலிருந்து வந்தாலும் அவளுக்குக் கவலையில்லை. அவ்வளவையும் நான் அல்லவா இறைக்க வேண்டும்? "இல்லை. இது வேண்டாம். மருந்து சத்துக்கள் வேண்டுமென்றால், மருந்துக் கடையில் வாங்கிக்கொள்ளுகிறேன். குழாய்த் தண்ணீர்தான் எனக்கு வேண்டும். வீட்டுக்காரரின் கயிற்றை அவரே வைத்துக்கொள்ளட்டும்" என்றேன்.

இந்த வீட்டு விஷயம் இதோடு முடிந்தது.

பிறகு எத்தனையோ பேர் எனக்கேற்ற வீடு பார்த்து வந்து சொன்னார்கள். ஆனால், ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரே ஒரு குறை சொன்னார்கள். "படகு நல்ல படகு; ஆனால், ஓட்டை மாத்திரம் ஒன்றே ஒன்று உண்டு" என்பது போலத்தான். எலி வளை, குருவிக் கூடு, இருட்டறை, குகை இந்த மாதிரி யெல்லாம் எத்தனையோ வீடுகளைப் பார்த்துவிட்டேன். ரெயில்வே லெவல் க்ராஸிங் பக்கத்திலே ஒரு வீடு இருந்தது. அதில் குடி புகுந்தால், என்ன நடக்கும் தெரியுமா? ராத்திரி நாம் படுத்திருக்கும்போது, நடு ராத்திரியில் ஓடும் எக்ஸ்பிரஸ் வண்டியின் அதிர்ச்சி நம்மை அலாக்காய்த் தூக்கி எறிந்துவிடும். இன்னொன்று மீன் மார்க்கெட்

அருகே இருந்தது. அந்தச் சந்தை இரைச்சலில் ஒருவன் பேசுவது அவன் காதிலேயே விழாது.

கடைசியாக ஒரு வீட்டைச் சிபாரிசு செய்தவர் ஓர் உறவினர். விவரங்களை யெல்லாம் அவர் சொன்ன பிறகு, அதில் உள்ள குறை என்ன என்றேன்.

"அதில் குறையே இல்லை" என்றார் உறவினர்.

"அப்படியானால் அதைப்போய்ப் பார்ப்போம்" என்றேன்.

வழக்கப்படி என் மனைவி, குழந்தை சகிதம் அந்த உறவினரும் நானும் வீட்டைப் பார்க்கப் புறப்பட்டோம். முதல் மாடியி லிருந்த அறைகள்தான் காலியா யிருந்தன. படிக்கட்டில் ஏறினோம். உர் என்று மூஞ்சியை வைத்துக் கொண்டிருந்த ஒரு மனிதன் வந்து எங்களை உள்ளே அழைத்துக் கொண்டு போனான். அவன்தான் வீட்டுக்காரனாக இருக்க வேண்டும்.

நாங்கள் இடத்தைப் பார்த் தோம். எல்லாம் திருப்திகர மாகவே இருந்தன. குழாயில் தண்ணீர் வந்தது. விளக்குகள் போட்டிருந்தன. இடம் சுத்தமா யிருந்தது. ஜன்னல்கள் இருந்தன. அத்தனைக்கும் கதவுகள் போட் டிருந்தன. எதற்கும் நான் கொஞ் சம் ஜாக்கிரதையாகவே கால் கட்டை விரல் நுனியை ஊன்றி மெல்ல மெல்ல நடந்தேன். எந்த மூலையிலாவது ஏதாவது குறை பதுங்கியிருந்து திடீரென்று பாய்ந்து வெளிப்படுமோ என்பது என் பயம்.

"பார்த்தீர்களா?" என்றார் வீட்டுக்காரர்.

சரி என்ற பாவனையில் தலையை அசைத்தேன். அப்போது சமைய லறைக் கதவு ஒன்றைத் திறந்து கொண்டே, வீட்டுக்காரரைப் பார்த்தபடி ஒரு காலை நிலைப்படிக் கப்பால் நீட்டிவிட்டேன். என் மனைவியும் குழந்தையும் ஏதோ கூச்சல் போட்டது காதில் விழுந் தது. அதற்குள் விஷயம் மிஞ்சி விட்டது. நான் அந்தரத்தில் பாய்ந் ததுபோல் தோன்றியது. பதினைந்து அடி கீழே போய்ப் 'பொத்' என்று கொல்லை முற்றத்தில் விழுந் தேன். கால் பலமாய்ச் சுளுக்கிக் கொண்டது.

"அவருக்கு மாடிப்படியைக் காட்டு" என்று தம் மகனை நோக்கி உரக்கக் கத்தினார் வீட்டுக்காரர். அவருடைய சமையல்கட்டு வழி யாக வாசல் பக்கத்துக்கு வந்து சேர்ந்தேன். அங்கே என் மனைவி, குழந்தை, உறவினர் மூவரும் கதவடியில் காத்துக்கொண் டிருப்பதைக் கண்டேன்.

"என்ன நினைக்கிறீர்கள்?" என்றார் உறவினர்.

"பார்க்கலாம்" என்றேன் நான்.

இந்த வீட்டிலே அந்தக் கதவு தான் குறை. அதைத் திறந்தால், அப்பால் ஒன்றுமில்லை; ஒரே பள்ளம். ஒவ்வொரு தடவையும் இதே ஞாபகமாயிருக்க முடியாது. யாராவது விருந்தாளிகள் வந்தால், ரகஸ்யப் பொறி மாதிரி இது வேலை செய்துவிடும்.

இதுதான் என் கடைசி முயற்சி. வீடு தேடும் வேலையை இதோடு விட்டுவிட்டேன். இப்போது குடியிருக்கும் வீட்டிலே சீர்திருத்தம் நடந்து முடியும் வரையில், இதன் கொல்லைப் புறத்திலேயே ஒரு கொட்டகை போட்டுக்கொண்டு வசிக்கத் தீர்மானித்தேன். வீட்டுக்கார ரிடம் அதற்கு அநுமதி பெற்றுக் கொண்டேன்.

கார்ட்டூன் கதம்பம்



—'ப்ளிட்ஸ்'



—'அல் முஸ்ஸாவர்', கெய்ரோ.



"ஆந்திர மந்திரி சபைக்கு உள்ளேயோ வெளியேயோ ப்ரகாசம்காருவுக்குக் கௌரவமான இடம் அளிப்போம்" என்றார் ஸஞ்சீவி ரெட்டி. ஆந்திரகேசரிக்குத் தங்கக் கூண்டு!

—'சங்கர்ஸ் வீக்லி'



—'ஸெயிண்ட் லூயிஸ் க்ளோப் டெமொக்ராட்'

புதிய உலக அமைப்பு

டேவெரிட்ஜ், எர்வின் கருத்து

> அநுபவ சாத்தியமான யோசனைகளைச் சொல்லும் நவீன லட்சியவாதிகள் இருவருடைய கருத்துக்களை இங்கே விவரிக்கிறார் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

ஜூலியன் ஹக்ஸ்லி (Julian Huxley) எழுதிய 'நான் சர்வாதிகாரியாக இருந்தால்' என்ற நூலை நாம் ஆராய்ந்திருக்கிறோம். இந்தத் தலைப்பின் கீழ்ப் பல சான்றோர்கள் தம் ஆழ்ந்த கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் சான்றோர்களில் ஸெயிண்ட் ஜான் எர்வின் (St John Ervine) என்பவர் ஒருவர். அவரைப்பற்றி நினைக்கும் போது ஸர் வில்லியம் பெவெரிட்ஜ் (Sir William Beveridge) இயற்றிய 'உலகப் பொருளாதார நெருக்கடி' என்ற நூலுக்கு நம் மனம் விரையாமற் போகாது.

"ஆண்டவன் தன் உலகப் படைப்பை ஆறு நாட்களில் ஆற்றிவிட்டு ஏழாம் நாளில் ஓய்வு எடுத்துக்கொண்ட செய்தியை நீங்கள் அறிவீர்கள். அந்த முறையை நானும் பின்பற்றி என் செய்கடனை நிறைவேற்றி உலக அலுவல்களிலிருந்து விலகிவிடுவேன்" என்று தம் நூலைப் பெவெரிட்ஜ் தொடங்குகிறார்.

"முதல் இரண்டு நாட்களில் செய்யவேண்டிய காரியங்கள் இவைதான்: போர்க் கடன்களைப் பற்றியும், நஷ்ட ஈடு பாடுகளைப் பற்றியும் எந்த அரசாங்கமும் சிந்திக்கக் கூடாது. இவைகள் மாந்தரின் மனத்தை அரித்துத் தின்றால் உலக அமைதி ஏற்படாது. மனக்கசப்புக்கும், அமைதியின்மைக்கும் இவையே விதைகளாகும். இவைகளை வேரோடு களைந்து விடுவதே சான்றோர்களுக்கு அழகு. தட்டுத் தடங்கலின்றி வியாபாரம் பெருகுவதன் பொருட்டு, சுங்கங்களை அகற்றிவிட வேண்டும். ஒரே சமயத்தில் அவைகளை நீக்கினால் சில நாடுகள் பாதகமடையலாம். கொஞ்சங் கொஞ்சமாக அவைகள் மறையும்படி செய்தால், எல்லா நாடுகளும் மனக்கசப்பின்றி இன்புற்று வாழும். இத்தகைய அலுவல்களில் இரண்டு நாள் மெல்லத் தேய்ந்துவிடும்.

"மூன்றாம் நாள் வேலையின்மை என்ற கோரமான நெருக்கடியைத் துடைப்பது நலம். வியாதிக்காரருக்கு வயோதிகருக்கு வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதுபோலவே, வேலை இல்லாத மக்களுக்கும் ஒருவிதத் திட்டம் வகுப்பது அரசாங்கத்தாரின் கடமை.

"நான்காம் நாள் ஒரு கமிஷனை ஏற்படுத்தவேண்டும். உலகத்திலேயே பொருளாதார சாஸ்திரத்தில் பெரிய மேதைகளான நான்கு ஐந்து பேர்களைக் கொண்டதாக அந்தக் கமிஷன் அமைய வேண்டும். உலகத்தின் விளைவுகளை ஒழுங்குக்குக் கொண்டு வருகிற

ஓர் அமைப்பை அது வகுப்பது நலம். நாணயத்தைச் சர்வதேச முறையில் அமைப்பது, ஒவ்வொரு நாட்டின் பாங்கும் சர்வதேச பாங்குக்கு ஓர் அங்கமாயிருக்கும் படி செய்வது - இத்தகைய அலுவல்களில் அந்தக் கமிஷன் இறங்க வேண்டும். ருஷிய நாட்டுக்கு அது விஜயம் செய்து அங்கே நடக்கும் அலுவல்களைக் கவனித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்தக் கமிஷனர்களுக்குள் அபிப்பிராய பேதம் வருமானால், முதலாளித்துவ முறையில் உலகத்தை முதலில் அமைத்து விடுவது நலம். அதில் குறைபாடுகள் தோன்றுமானால், சம உடைமைத் திட்ட முறையைக் கைப்பற்ற வழியுண்டு. முதல் முதலிலேயே சம உடைமையைக் கைக்கொண்டு விட்டால், பிறகு முதலாளித்துவ முறையில் இறங்குவது இயலாத காரியமாய்ப் போய்விடும்.

"ஆறும் நாள் எல்லாம் ஒழுங்காய்ப் போய்விடும் என்பதில் சந்தேகமில்லை. ஏழாம் நாள் என்னுடைய சர்வாதிகாரத்தை உதறித் தள்ளி நானும் ஓய்வு எடுத்துக் கொள்ளுவேன்" என்று தம் கருத்தை அவர் வெளியிடுகிறார்.

இனி ஸெயிண்ட் ஜான் எர்வின் கருத்துக்களை நாம் ஆராய்வோம். "நான் சர்வாதிகாரியாய் வந்தால் என்னுடைய முதல் வேலை வேறு சர்வாதிகாரிகளைத் தூக்குமேடைக்கனுப்பி, நானும் அந்தப் பதவியிலிருந்து விலகி விடுவேன்" என்று நகைச்சுவை ததும்பத் தம் கட்டுரையைத் தொடங்குகிறார்.

சர்வாதிகாரிகள் வேண்டும் என்கிற உணர்ச்சி ஒரு நாட்டின் ஆதரவற்ற நிலையில்தான் பிறக்கும். ருஷிய நாட்டில் சர்வாதிகாரிகள் தோன்றுவதற்குக் காரணம் அந்த நாட்டின் அறியாமையும் மூட நம்பிக்கையுந்தான். அங்கே உள்ளவர்கள் சம்மட்டியையும் அரிவாளையும் தமக்குச் சின்னங்களாய் அமைத்துக்கொண்டு, க்ரெம்ளின் மாளிகையில் கண்ணாடிக் கூட்டில் உள்ள லெனின் சவத்தை வலம் வருகிறார்கள். கார்ல் மார்க்ஸின் தாடி மயிரொன்றைத் தங்கத்தில் கட்டி அதை ஒரு பளிங்குக் கூட்டில் வைத்து, அதற்கு வணக்கம் செய்கிறார்கள். ஜெர்மன் நாட்டில் வெந் துயரால் மக்களின் நரம்புகள் தளர்ந்து குலைந்து போயின. காக்கை வலிப்பிலே பேசிய ஹிட்லரைத் தெய்வமாய்க் கொண்டாடினார்கள். "நான் சர்வாதிகாரியாக வருவதாயிருந்தால், நாடு சீர்குலைந்து போனதாகக் கருதவேண்டும்" என்று எர்வின் மொழிகிறார். இதில் எத்தனை பெரிய உண்மை நிற்கிறது பாருங்கள். நாட்டின் நோய் அகல்கிறவரையில்தான் சர்வாதிகாரிக்கு இடமுண்டு.

எர்வின் தம் புஸ்தகத்தில் மோஸஸ் புரிந்த வீரச்செயல்களைக் குறிக்கிறார். யூதர்கள் படும் துயர் கண்டு மோஸஸ் கண்ணீர் வடித்தார். எகிப்து வேந்தர்களின் கொடுங்கோல் ஆட்சியில் வாடி வதங்கிய அவர்களை மீட்க அரும்பாடு பட்டார். சுதந்தரத்துக்காகப் பாடுபட்ட அந்தச் சர்வாதிகாரியை நாம் போற்றாமல் இருக்க முடியாது. சுதந்தரந்தான் வாழ்வின் வேர். அது கருகினால் வாழ்க்கை தழைக்காது; உதிர்ந்து மண்ணோடு மண்ணாய்ப் போய்விடும். ஒரு சர்வாதிகாரி நாட்டின் மக்களிடையே சுதந்தர தாகத்தை எழுப்பவேண்டும்.

அதுதான் அவன் கடமை. பொது ஜன ஆதரவே தக்க கருவியாக அமையும். ஏசுநாதர் தமக்குச் சீடர்களாய்ச் சாதாரண மக்களையே தேடிக்கொண்டார். அவர்கள் மூலமே தம் உண்மைகளை வெளியிட்டாரன்றோ?

ஏதோ ஒரு தொழிலைச் செய்யும் மக்கள் நிரம்பிய சமுதாயத்தைத்தான் ஆசிரியர் விரும்புகிறார். அந்தச் சமுதாயம் சில பேர்களை வேலை செய்யாமல் விடலாம். அது ஓர் உரிமையாகாது. ஏதோ தயவாகவே சமுதாயம் அவர்களை மன்னித்துவிடுகிறது போலும்!

ஆரோக்கியம், சுதந்தரம், அறிவு இவை வளரச் சட்டதிட்டங்கள் வகுக்க வேண்டும். மாந்தர்கள் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவரல்ல.

ஷா வகுக்கும் சமுதாயத்தில் ஷாவைப்போன்றவர்களே நிரம்பியிருப்பார்கள். வெல்ஸ் அமைக்கும் சமுதாயத்தை வெல்ஸைப் போன்றவர்களே அலங்கரிப்பர். இப்படி இராமல் ஒரு சமுதாயத்தில் எல்லா வகைப்பட்ட மாந்தர்களுக்கும் இடமுண்டு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

தொழிலாளிக்கு நல்ல வீடு அமைய வேண்டும். பிரபுக்கள் எப்படி நாகரிகமாய் வாழ்கிறார்களோ அப்படியே தொழிலாளியும் வாழவேண்டும். தொழிலை விட்டு வீடு வந்து சேர்ந்தால், புனலில் தோய்ந்து வனப்பு வாய்ந்த உடையை அணிந்து நல்லுணவை அவன் அருந்த வேண்டும்.

ஒரே உடையை உடையவன் எப்படி அழுக்கு நீங்கக் குளத்தில் குடைந்து நீராட முடியும்? "ஏன் நீங்கள் குளிப்பதில்லை?" என்று ஆந்திர தேசத்திலுள்ள ஏழை மக்களை மகாத்மா காந்தி கேட்டபோது, "வேறு துணி இல்லையே" என்று கண்ணீர் விட்டு அவர்கள் பதிலளித்தார்களாம். இத்தகைய கோர வறுமை, தொழிலாளர்களிடமிருந்து அகல அரும்பாடு படவேண்டும்.

தொழிலாளியின் மனைவிக்குத் தகுந்த காற்றோட்டமுள்ள விசாலமான, மின்சார விளக்கோடு கூடிய வீட்டை முதலில் அமைப்பது நமது முதற் கடமை. இடையறாத சுடு தண்ணீர் அந்த வீட்டில் பெருக வேண்டும். சமையலறையில் அருந்தும் பண்டங்களுக்குக் குறைவு இருக்கக் கூடாது. பதினாறு வயதுக்கு மேலான மக்கள் ஒவ்வொருவருக்கும் தனி அறை வேண்டும். ஒவ்வொரு படுக்கை அறையிலும் நீர் வசதியை அமைப்பது நலம். துணிமணிகளைத் துவைக்க ஒரு தனி விடுதியை நிறுவுவதையும் முக்கியமான அம்சமாகக் கருதவேண்டும்.

'யுகப்பிரளயத்தக்குப் பின்' (After the Deluge) என்ற புஸ்தகத்தில் லியோனார்ட் உல்ஃப் (Leonard Woolf) என்பவர் ஓர் அற்புதமான லட்சிய சித்திரம் தீட்டியிருக்கிறார். போதுமான வருமானம், நேர்த்தியான வீடு, தின்பதற்கோ குடிப்பதற்கோ இன்பமான உணவு, சுவையான பானம், வனப்பு வாய்ந்த ஒரு தோட்டம், ஆழ்ந்த அமைதி நிலவும் ஓய்வு, பிரயாணத்துக்குச் சிறந்த கார், நல்ல பேச்சு, நல்ல படிப்பு, சங்கீதத்தை நுகரக்கூடிய பண்பட்ட செவி, கவிகளின் கருத்துக்களை அறியக்கூடிய நுண்ணறிவு இத்தனையும் விளங்கும்படியான ஒரு சமுதாயத்தைச் சமைக்க வேண்டும் என்கிறார் உல்ஃப்.

இதை எர்வின் முற்றும் ஆமோதிக்கிறார்.

மேலும் எர்வின் கருத்துப்படி ஜனங்களை ஒரே இடத்தில் திரளவிடாமல் பல இடங்களில் உறையும்படி செய்வது சாலவும் நன்று. போர்க்காலங்களிலும் இத்தகைய அமைப்பு நன்மையை நல்கும். சாதாரணக் காலங்களிலும் எல்லா விதமான சௌகரியங்களையும் இந்த முறை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. விவசாயிகளும் வாழ்க்கையில் இன்புறவேண்டும். சுருங்கக் கூறுமிடத்து எல்லா மனிதர்களுக்கும் நாகரிக வாழ்வுக்கு எவையெல்லாம் வேண்டுமோ அவைகளையெல்லாம் அமைத்துத் தர வேண்டும். ஆனால் அறிவு வாய்ந்தவர்களும், ஆற்றல் வாய்ந்தவர்களும் முன்னேறுகிற பாதையில் இடையூறுகளை எழுப்பக் கூடாது.

1914-ஆம் வருஷத்திலிருந்து தொழிலாளிகளின் நிலை உயர்ந்து கொண்டே தான் போகிறது என்பது உண்மை. ஆனால் 'பசிப்பிணி அபாயம் அவர்கள் முன் உலாவினால்தான், அவர்கள் சிக்கனத்தையும் உழைப்பையும் போற்றுவார்கள்; இது அரசாங்கத்துக்குப் பலம்' என்று ஓர் அறிஞர் கருதினாராம். 'இது எதைப்போல இருக்கிறது தெரியுமா?' என்ற கேள்வியை எழுப்பி, அதற்கு விடையையும் எர்வின் அளிக்கிறார். பெண்கள் கற்போடு வாழ்வதற்குக் காரணம் விலைமகள் என்ற ஜாதி இருப்பதால் என்று லெக்கி (Lecky) கூறினதுபோல்தான் இதவும் இருக்கிறது என்கிறார் அவர்.

தொழிலில் ஒரு தருக்கு வேண்டும். அந்தத் தருக்குக் குலைந்து போகுமானால், நாடு முன்னேற முடியாது. அறிவு நிரம்பிய விவசாயிகளின் தொகை விரிவடைய வேண்டும். மண்ணில்தான் வாழ்க்கை வேர் ஊன்ற வேண்டும். வேளாண்மைதான் வாழ்வின் ஆணிவேர் என்று ஆசிரியர் கண்டுவிட்டார்.

இருபத்தெட்டு வயதுக்குள் இருப்பவர்களுக்கும் அறுபத்தெட்டு வயது கடந்தவர்களுக்கும் வோட்டுரிமை கிடையாது. மத்திய வயதுள்ளவர்களே அரசாங்கத்தை நடத்த வேண்டும். பள்ளியில் பதினெட்டு வயது வரையில் படித்தே தீரவேண்டும். உலகத்திலுள்ள அறிவுச் செல்வத்தை யாவரும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

மனிதர்களுக்குத் தம் கொள்கைகளை வெளியிடச் சுதந்தரம் வேண்டும். ஒரு சாக்ரடீஸை விஷம் வைத்துக் கொன்ற நாடு, ஓர் ஏசுநாதரைச் சிலுவையில் அடித்து மாய்த்த நாடு, ஒரு ஜோன் ஆவ் ஆர்க்கை உயிரோடு கொளுத்திய நாடு, ஓர் ஐன்ஸ்டீனைத் துரத்திய நாடு - இத்தகைய நாடுகள் நல்வாழ்வு வாழ முடியுமா?

"சமத்துவத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. அமர நாட்டிலும் தெய்வங்களுக்குள்ளே பேதங்கள் இருப்பதை உணர்கிறோம். எல்லோருக்கும் சமமாக ஊதியத்தை அளித்தாலும் மனத்திலே, ஆற்றலிலே, அறிவிலே பேதம் இருக்கத்தானே இருக்கும்? வித்தியாசந்தானே வாழ்க்கைக்கு ஒரு புதிய சாயம், ஒரு புதிய மெருகைத் தருகிறது. பரமபதம் என்பது ஒரே அச்சில் வார்த்த

தன்மை உடையதல்ல. அங்கே பலவிதமாக இருந்தாலும் ஆண்டவனின் அருளும் அழகும் எங்கும் மிளிர்ந்துகொண்டிருக்கும். இந்த உலகில் பல விதக் காட்சிகளுக்கிடையே சுதந்தரமும் இன்பமும் பெருகிக்கொண்டே இருக்கும். "சுதந்தரத்தோடு வாழ்கிற மனித சமுதாயம் வேண்டுமா? அல்லது ஓர் எறும்புக் கூட்டம் வேண்டுமா?" என்ற கேள்வியை இவர் எழுப்புகிறார்.

[சென்ற இதழில் இந்த வரிசையில் வெளியான 'பழைய கம்யூனிஸம்' என்ற கட்டுரையின் முதல் பாரா ஐந்தாம் வரியில் 'ஐந்து நாடகங்கள்' என்று இருப்பதை 'ஐம்பத்தாறு நாடகங்கள்' என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறோம்—ப - ர்.]

வானவில்—தூரம் எவ்வளவு?

ஆகாயத்தில் வானவில் பார்க்கிறோமே; அதன் தூரம் என்ன? "மழைத் துளியால் மேகங்களுக்கிடையே தெரிவது பத்து மைல் தூரத்தில் இருக்கலாம்; தோட்டத்தில் சல்லடை போன்ற குழாய் மூலம் பீச்சும் நீர்த் துளிகளில் தெரிவது பத்தடி உயரத்தில் இருக்கலாம்" என்றுதான் பதில் சொல்லத் தோன்றும்.

ஆனால், உண்மை இது அல்ல. மேகத்திலும், குழாய் நீர்ப் பீச்சிலும் சரி, வானவில் தோன்றும் தூரம் சுமார் 9 கோடியே 30 லட்சம் மைல் என்கிறார் டொனல்டு எச். மென்ஸெல் என்ற விஞ்ஞானி.

மிகச் சிறு நீர்த்துளிகளில் சூரிய கிரணங்கள் பட்டுப் பிரதிபலிப்பதாலேயே வானவில் தோன்றும். சூரியனோ பூமிக்குச் சுமார் 9 கோடியே 30 லட்சம் மைல் தூரத்தில் இருக்கிறது.

வீதி விளக்குக்கு 100 அடி தூரத்தில் நீங்கள் நிற்பதாக வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு அப்பால் 5 அடி தூரத்தில் ஒரு நிலைக்கண்ணாடி இருப்பதாக உத்தேசித்துக் கொள்ளுங்கள். அந்த நிலைக் கண்ணாடியில் வீதி விளக்கின் பிரதிபிம்பத்தை நீங்கள் காண்பீர்கள். 110 அடி தூரத்தில் இருப்பது போலவே அந்தப் பிம்பத்தை நீங்கள் காண்பீர்கள்; 5 அடி தூரத்தில் இருப்பதுபோல் அல்ல. இதே போல்தான் வானவில்லை நாம் காண்பதும்.

தோட்டத்துக் குழாய் நீர்ப் பீச்சில் தென்படும் வானவில்லைச் சுட்டிக் காட்டும்படி பல பேரைக் கேளுங்கள். எல்லார் கைகளும் ஒன்றுக்கொன்று 'பாரலெல்' ஆக, அதாவது சமதூரமாக நீண்டிருப்பதைக் காண்பீர்கள். பல கோடி மைல் தூரத்தில் வானவில் பிம்பம் தோன்றுவதே இதன் காரணம்.

—'ஸயின்ஸ் டைஜெஸ்ட்'

கிந்துருவப் பெண்



கிந்தருவர் என்ற தேவ ஜாதியார் வெள்ளியங்கிரியில் சஞ்சரிப்பார்களென்றும் இடுப்புக்கு மேலே மனிதவுடலும், இடுப்பின் கீழ்ப் பட்சி உருவமும் படைத்தவர்களென்றும் பௌத்த நூல்கள் கூறுகின்றன. இவர்கள் செவிக்கு இனிமையாக இசை பாடித் தேவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்துவார்களாம். ஆனால் இதேதொழிலைச் செய்யும் தேவகணத்தவரான கின்னரர், மனித உடலும் குதிரை முகமும் உடையவர்களாகவும் யாழிசையில் வல்லவராகவும் விளங்குகிறார்களென்று இந்து நூல்கள் குறிப்பிடுகின்றன. இலங்கையில் அரசு செலுத்திய மூன்றாம் விக்கிரமபாகு மன்னனின் காலத்தில் கட்டிய எம்மெக்கே தேவாலயத்தின் மர வேலைப்பாடுகளில் காணும் கிந்தருவ உருவத்தில் ஒன்றுதான் இது.

—'ஸ்ரீலங்கா.' சிலோன்.

சிறு கதை:

பாழடைந்த ஊர்

மூலம்: தமிழ்:
வி. ஸ. காண்டேகர் கா. ஸ்ரீ. ஸ்ரீ.

ஆத்ம பக்குவத்துக்குப் பிரார்த்தனை பயன்படும். தேக ரட்சணைக்கு உழைப்புத்தான் பயன்படும். இதை உணராத மக்களின் கதி என்ன என்பதை இந்த அரிய கதையில் ஆசிரியர் மிக அழகாக விளக்குகிறார்.

அந்த வருஷம் எங்கும் மழையே இல்லை.

ஊர் மக்கள் அனைவரும் கோயிலில் குழுமினார்கள். குழந்தைகள் கிழவர்கள், ஆண்கள் பெண்கள், ஏழைகள் பணக்காரர்கள் எல்லாருமாகக் கைகூப்பி ஆண்டவனைத் தொழுதார்கள். "தெய்வமே, இந்த எளியவருக்கு அருள் செய்வாய். கடவுளே, உன் அன்பு முகில் இந்தப் பக்கமாகப் பொழிய வேண்டும். பக்தர்களைக் காப்பவனே, நாங்கள் யாவரும் உன் குழந்தைகள்" என்று பிரார்த்தனை செய்தார்கள்.

பிரார்த்தனை முடியும் தறுவாயில், அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு நாஸ்திகன் முன் வந்தான். கடலைப்போன்ற கம்பீரமான குரலில் அவன் கர்ஜித்தான்: "முட்டாள்களே, இந்தக் கல் தெய்வத்தைப் பாடிப் பாடி என் வீணுகத் தொண்டையை வற்ற அடித்துக்கொள்கிறீர்கள்? கோயிலுக்கு வெளியே கூழாங்கற்கள் குவியல் குவியலாகக் கிடக்கவில்லையா? அவற்றின் அண்ணன் தான் இந்தக் கல். மலர்களைத் தூவுவதனால் கல்லுக்குத் தெய்வக் களை வரும் ஆனால் தெய்வத்தன்மை வந்துவிடாது. உங்களுடைய குழந்தைகள் ஒரு வாய்க் கஞ்சிக்கு வழி இல்லாமல் பட்டினியாகச் சாக வேண்டும் என்பது உங்கள் விருப்பமில்லையே? அப்படியானால் என் பேச்சைக் கேளுங்கள். அலங்காரம் செய்த இந்தக் கல்லை வேண்டிக்கொள்ளும் தொழிலை விட்டொழியுங்கள். இதே நிமிஷத்தில் எல்லாரும் என் பின்னால் வாருங்கள். நான் உங்களுக்கு ஒரு பெரிய ஆற்றைக் காண்பிக்கிறேன். நீங்கள் எல்லாரும் இரவும் பகலும் உழைத்தால் அந்த ஆற்றுநீர் நம் வயலில் வந்து பாயும். உண்மையான தெய்வம், எதிரே இருக்கும் கல்லிலே இல்லை; அது உங்கள் தோள் வலிமையிலே.."

எங்கிருந்தோ ஒரு கூரிய கல் விர்ரென்று பறந்து வந்தது. பறவை கனியை மூக்கால் கொத்துவதுபோல், அந்தக் கல் பிரசங்கியினுடைய மண்டையில் புதைந்தது. குருதியினால் சிவந்த முகத்தோடு அந்த நாஸ்திகன் சுற்றுப்புறத்து மக்களைப் பார்த்து ஆவேசம்

காப்பிரைட்: அந்தி விளக்கு (சிறுகதைத் தொகுப்பு: மராட்டி);
வெளியிட்டோர்: தேஷ்முக் அண்ட் கோ., புனா.

பொங்க, "சகோதரர்களே, இன்னமும் என் பேச்சைக் கேளுங்கள். கண்ணை விழித்துக்கொள்ளுங்கள். பிரார்த்தனையை நிறுத்துங்கள். கல்லிலே கண்ணீரை வருவிக்கும் இந்தப் பைத்தியக்கார முயற்சியை விட்டு...." என்றான்.

அதற்குமேல் அவனால் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. நூற்றுக்கணக்கான கவண்களைக் கொண்டு கல் எறிவது போல, நான்கு பக்கங்களிலிருந்தும் கல்மழை பொழிந்தது. விஷப் பாம்பை அடிப்பதுபோல, மக்கள் அவனை அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

தாரகைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றன. வானத்திலிருந்து ஒரு துளி மழையாவது தரையில் விழவில்லை. ஏழைகளின் வீட்டிலே அடுப்புகள் தூங்கின. குழந்தைகளின் பரிதாபமான முகத்தைப் பெற்றோர்களால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. நாள்தோறும் வீட்டிலும் வாசலிலும் அக்கம் பக்கத்திலும் சாவின் கருநிழல் அந்த மக்களைத் தொடர்ந்தது.

ஊர் மக்கள் யாவரும் மறுபடியும் கோயிலில் குழுமினார்கள். குழந்தைகள் கிழவர்கள், ஆண்கள் பெண்கள், ஏழைகள் பணக்காரர்கள் எல்லாருமாகக் கைகூப்பி ஆண்டவனைத் தொழுதார்கள். "தெய்வமே, இந்த எளியவருக்கு அருள் செய்வாய். கடவுளே, உன் அன்பு முகில் இந்தப் பக்கமாகப் பொழியவேண்டும். பக்தர்களைக் காப்பவனே, நாங்கள் எல்லாரும் உன் குழந்தைகள்" என்று பிரார்த்தனை செய்தார்கள்.

பிரார்த்தனை முடியும் தறுவாயில், அந்தக் கூட்டத்திலிருந்து ஓர் ஆஸ்திகன் முன்வந்தான். ஆற்று வெள்ளம் போன்ற குளிர்ச்சியான குரலில் அவன் பேசினான்: "சகோதரர்களே, இங்கே எதுக்கு வீணாக இப்படிப் பிரார்த்தனை செய்கிறீர்கள்? நாம் எல்லாரும் ஒரே ஆண்டவனின் குழந்தைகள் - ஒரே தாயின் மக்கள் - ஒரே குடும்பத்தில் வாழ்கிறவர்கள் என்பது உண்மைதானே?"

ஆம் என்று எல்லாரும் தலையை ஆட்டினார்கள்.

ஆஸ்திகன் மேலும் பேசினான்: "அப்படியானால் என்னோடு புறப்படுங்கள்! ஊரிலுள்ள தானியம் முழுவதையும் நாம் ஒன்று திரட்டுவோம். களஞ்சியங்களிலும், வீட்டுக்குதிர்களிலும், சுரங்கங்களிலும் பதுக்கி வைத்துள்ள தானியத்தை-ஒவ்வொரு மணி அரிசியையும்-நாம் தேடிக் கண்டுபிடிப்போம். இப்படி நாம் திரட்டும் தானியத்திலிருந்து, ஒவ்வொருவனுக்கும் வயிற்றுக்குப் போதுமான அளவு உணவு மட்டும் தருவோம். இப்படி நாம் செய்தால் இந்த ஊரில் நாய்கள்கூடப் பட்டினியால் சாகமாட்டா. ஆனால் இப்படிச் செய்யாவிட்டாலோ, கோயிலுக்கு வெளியே விழுந்து கிடக்கும் கற்குவியலைப்போல, இந்த ஊரில் அங்கங்கே பிணக்குவியல்கள் புலப்படும். புறப்படுங்கள், சகோதரர்களே, புறப்படுங்கள்! உண்மையான தெய்வம் உங்கள் எதிரே இல்லை; அது உங்கள் உள்ளத்திலே.."

எங்கிருந்தோ ஒரு கூரிய கல் விர்ரென்று பறந்து வந்தது. கடகடவென்று ஓசையோடு மரத்தின் மேல் இடி விழுவது போல, அங்

தக் கல் பிரசங்கியின் மண்டையில் விழுந்தது. ரத்தம் படர்ந்த கையினால், அவன் மக்களிடம் அமைதியை வருவிக்க முயன்றான். பிறகு அவன் ஆவேசத்தோடு, "பைத்தியக்காரர்களே, ஆண்டவன் பேரருள் உடையவன் என்பதை மறக்க வேண்டாம். நீங்கள் எல்லாரும் ஆண்டவனுடைய குழந்தைகள். உங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கும் பொருள், உங்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. அது எல்லாருக்கும்...." என்றான்.

மேலே அவனால் ஒரு வார்த்தை கூடப்பேச முடியவில்லை. நூற்றுக் கணக்கான துப்பாக்கிகள் ஒரே சமயத்தில் வெடிப்பதுபோல, நான்கு பக்கங்களிலிருந்தும் கல் மழை பொழிந்தது. பைத்தியம் பிடித்த நாயை அடிப்பதுபோல, மக்கள் அவனை அடித்துக் கொன்றுவிட்டார்கள்.

அந்த வருஷத்தில் அந்த ஊரில் ஏழைகள் அனைவரும் பட்பட்டென்று செத்தார்கள். மிஞ்சியிருந்த நாலைந்து பணக்காரர்கள் பயத்தினால் ஊரை விட்டு ஓடினார்கள்.

மனிதப் பூண்டே அற்றுப் போன அந்த ஊரில், இப்பொழுது பாழ்பட்ட அந்தக் கோயில் மட்டுமே இருக்கிறது. சில சமயம் நள்ளிரவிலே அந்தக் கோயில் பிராகாரத்தில் இரண்டு பிசாசுகள் கையைக் கோத்துக்கொண்டு சிரித்தபடி உலாவுகின்றன. அவை இரண்டும் எப்பொழுதாவது கர்ப்பக் கிருகத்தின் அருகில் சென்று, "தெய்வமே, இந்த ஊர் ஏன் இப்படிப் பாழாகிவிட்டது? உனக்குப் பிரார்த்தனை செய்த அந்த மக்கள் எங்கே போனார்கள்?" என்று ஆண்டவனைக் கேட்கின்றன.

தெய்வம் என்ன பதில் சொல்லுமோ என்று அவை காதைத் தீட்டிக்கொள்கின்றன. பக்கத்து மரத்தில் தூக்கம் கலைந்த பறவைகளின் இறகுகள் படபடவென்று அடித்துக்கொள்ளும் சத்தமே அவற்றின் காதில் விழுகிறது!

ஐந்தும் ஐந்தும்

ஒரு வாத்தியார் தம் வகுப்புப் பையன் ஒருவனை, "ஐந்தும் ஐந்தும் எத்தனை?" என்று கேட்டார்.

பதில் இல்லை.

"இன்று ராத்திரி படுக்கப் போகும்போது, பூட்ஸைக் கழற்றுவாயே; அப்போது இரண்டு கால் விரல்களையும் கையால் தொட்டு எண்ணிப் பார். விடை தெரியும்."

மறுநாள் சிறுவன் வந்ததும், "எண்ணிப் பார்த்தாயா? எத்தனை?" என்று அவர் கேட்டார்.

"எட்டு" என்றான் சிறுவன்.

"எங்கே, பூட்ஸைக் கழற்று. நானே எண்ணிக் காட்டுகிறேன்" என்றார் வாத்தியார்.

சிறுவன் அப்படியே பூட்ஸைக் கழற்றினான். வாத்தியாரே எண்ணினார். அப்போதும் விடை எட்டுத்தான் வந்தது.

சிறுவனின் கால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விரல் இல்லை.

—'மக்ளீன்ஸ்'

வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்

கி. சந்திரசேகரன்

பிரபலஸ்தரின் ஜீவிய சரித்திரங்கள் தேச சரித்திரத்திலேயே ஒரு பகுதியாகும். அத்தகைய ஒரு பிரபலஸ்தரின் குமாரரே, பல கடிதங்கள், பத்திரிகைச் செய்திகள், வேறு தகவல்களையெல்லாம் ஆதாரமாகக் கொண்டு விரிவாக எழுதியுள்ள ஒரு ஜீவிய சரித்திரம் இது. இன்று சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருப்பவர் ஆசிரியர்.

காப்பிரைட்; வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் (தமிழ்ப் புஸ்தகம்) வெளியிட்டோர்;
கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. 8-0-0.

வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்

★

சீகாழியிலும் மாயூரத்திலும் அடுத்தடுத்து முன்சீப் வேலை பார்த்து வந்த வேங்கடராம ஐயருடைய புதல்வர் என் தந்தை கிருஷ்ணஸ்வாமி ஐயர். அவருடைய மூத்த சகோதரர் சுவாமிநாத ஐயர், அவரைவிடச் சுமார் இரண்டரை வயசு பெரியவர். அவர் பிறந்தது 1861-வருஷம்.

1877-ஆம் வருஷம் மெட்ரிகுலேஷன் வகுப்புக்காகக் கிருஷ்ணஸ்வாமி கும்பகோணம் சென்றார். அவருடைய சகோதரர் ஏற்கனவே கும்பகோணம் காலேஜில் வாசித்து வந்தார். மறு வருஷம் சுவாமிநாதன் சட்ட கலாசாலைக்காகச் சென்னைக்கு வரவே, எஃப். ஏ. வகுப்பில் இருந்த கிருஷ்ணஸ்வாமியும் அண்ணனுடன் சென்னைக்குப் புறப்பட்டார்.

கலாசாலையினுள் புகுந்த வருஷமே கிருஷ்ணஸ்வாமிக்குக் கல்யாணம் ஆயிற்று. திருவாலங்காட்டு ராமஸ்வாமி சாஸ்திரிகளின் புத்திரியான ஸ்ரீமதி வாலாம்பாளைக் கல்யாணம் செய்வித்தார்கள்.

எஃப். ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் நான்காவதாக என் தந்தை தேர்ச்சி பெற்றார். எல்ஃபின்ஸ்டன் உபகாரச் சம்பளத்தைச் சம்மானமாகப் பெற்றார். அந்த வருஷம் பி. ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் இரண்டு பிள்ளைகளும், இரண்டாவது வகுப்பில் இரண்டு பிள்ளைகளும் ராஜதானியில் தேர்ச்சி பெற்றதாகத் தெரிகிறது. ஆகையால் இரண்டாவது வகுப்பில் கிருஷ்ணஸ்வாமி தேர்ச்சி பெற்றதாக இருப்பினும் ராஜதானியில் நான்காமவராக இருந்தார் என்றே தெரிய வருகிறது. மேலும் வடமொழியிலும், தத்தவ சாஸ்திரத்திலும் கலாசாலையில் முதன்மையாக இருந்ததற்காகப் பரிசுகள் அவருக்குக் கொடுக்கப்பட்டன.

1882-ஆம் வருஷம் சுவாமிநாத ஐயர் வக்கீல் தொழில் செய்வதற்காகத் தஞ்சைக்குப் புறப்படவும், மயிலாப்பூர்க் குடித்தனத்தைக் கலைக்க வேண்டியதாயிற்று. தமையனார் சென்னையை விட்ட பிறகு, தம்பி 'பலாத்தோப்பி'ல் ஒரு சிறு வீட்டை எடுத்துக்கொண்டு, தம் ஒன்று விட்ட அத்தையையும், அத்தையின் குமாரரான வலங்கைமான் ராமஸ்வாமியையும் தம்முடன் குடித்தனத்துக்குத் துணையாக அழைத்து வந்திருந்தார்.

பி. ஏ. பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பிறகு சட்ட ஞானம் பெறுவதற்கு என் தந்தை முற்பட்டார். அக்காலங்களில் சட்ட கலாசாலை வகுப்புகள் அநேகமாய்ச் சாயங்கால வேளைகளில்தான் நடைபெற்றன. ஆகையால் ஒழிவு நேரங்கள் மாணவர்களுக்கு அதிகம். மற்றப் பையன்களைப்போல் இல்லாமல், இவர் விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்காகத் தாமாகவே ராஜதானிக் கலாசாலை ஆசிரியரும், ரஸாயன சாஸ்திர நிபுணருமான டாக்டர் வில்ஸ

னுடைய அரிய போதனையைக் கவனிக்க அநுமதி கேட்டு, தவருமல் அவருடைய வகுப்புக்குச் செல்வது உண்டு.

சட்டப் பரீட்சையில் தேறி வக்கீல் தொழில் ஆரம்பமாகியும் கொஞ்ச காலம் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு வருமானம் சிறிதும் வரவில்லை. அவருடைய தந்தை இறந்தார். அசனல் பலவகைத் துன்பங்கள் உண்டாயின. குடும்பத்தில் கொஞ்சம் பூஸ்திதி மட்டும் இருந்தது. வாழ்க்கையை நடத்த அது போதுமா? அவருடைய தமையனார் சீக்கிரமே வக்கீல் தொழிலில் வருமானம் பெறத் தொடங்கிவிட்டார். மாசந்தோறும் அவரிடமிருந்து பணம் தப்பிக்கு வரும். அதில்தான் காலட்சேபம் ஆக வேண்டும்.

என் தாய் ஒரு நாள் வெள்ளிக்கிழமை என்று, தலையில் அலங்கரித்துக்கொள்ள அரை அணுவுக்கு மல்லிகைப் பூ வாங்கினள்; தந்தை அதை அறிந்ததும் சினங்கொண்டு பூவை எடுத்து வாசலில் உள்ள குப்பைத் தொட்டியில் எறிந்தாராம். வீட்டில் இருந்த அவருடைய அத்தை, "என்டா கிருஷ்ணு, உன் மனைவிக்குத் தலையில் பூ வைத்துக் கொள்ளக்கூட அந்தஸ்தில்லையா? நன்ருயிருக்கிறது நீ செய்வது!" என்ற வியந்து கேட்டாள். அதற்கு என்ன பதில் வந்தது தெரியுமா? "ஆம், அத்தை! நான் எங்கள் அண்ணுவிடம் ஜீவனும்சம் வாங்குகிறது; அதில் இவள் பூ வாங்குவதாக்கும்! நாளைக்கு நான் சம்பாதித்துக் கொட்டுவேன். பூவைக் கீழே இறைத்த அதன்மேல் வேண்டுமானுலும் நடக்கட்டும். அப்போது யார் தடைசெய்யப் போகிருர்கள்?" என்ருர் அந்த மானி.

1888-ஆம் வருஷம் முதற்கொண்டுதான் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் தொழில் துறையில் சிறிது சிறிதாகச் சௌகரியங்கள் ஏற்பட்டன.

அடிக்கடி வீடுகள் மாறியவர், 1888-ஆம் வருஷம் பிறந்த பிற்பாடு மயிலாப்பூர் தெற்கு மாடவீதி வீட்டில் வசிக்கத் தொடங்கியதும், அந்த வீடு நிலைத்துவிட்டது.

1895-ஆம் ஆண்டில் மணி ஐயர் நீதிபதி பதவியில் அமர்ந்தமே, வக்கீல் தொழிலில் அவருடைய இடத்தில் பரம்பரைத் தர்மத்தில் வந்தவர்கள்போல் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் அவருடைய நண்பர் சுந்தரமையரும் விளங்கினர்கள். தொழில் சம்பந்தமான வேலைகளும் பொறுப்புக்களும் அவர்களுக்கு அதிகமாயின. 1899-ஆம் ஆண்டில் வி. பாஷ்யம் ஐயங்காரின் சார்பாகப் பிரபல வழக்கு ஒன்றில் என் தந்தை வாதாடிப் புகழ் பெற்ருர். எத்தனையோ பெரிய ஜமீன்தார்களும், நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் போட்டியிட்டுக் கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் தங்கள் வழக்குகளின் தஸ்தாவேஜுகளையும் கட்டுகளையும் கொண்டு வந்து கொடுத்தார்கள். சென்னை ஹைகோர்ட்டிலும் மற்றக் கீழ்க் கோர்ட்டுகளிலும் நியாயவாதம் செய்து பொருளையும் புகழையும் ஒருங்கே அவர் சம்பாதிக்கத் தொடங்கியது 1899-ஆம் ஆண்டுக்குப் பின்பேதான்.

1904-ஆம் வருஷம் ஜூலை மாதம் 25-ஆம் தேதி யன்று கோகலே சென்னைக்கு விஜயம்

செய்து ஒருவாரம் கிருஷ்ணஸ்வாமி ஐயருடன் வாசம் செய்தார். ஒரு வாரப் பழக்கமே பல காலப் பழக்கத்தின் உறுதி வேராக ஊன்றியது. கிருஷ்ணஸ்வாமி ஐயருடைய உள்ளம், கோகலேயைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டதில் பெருமையையும், அவர் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் நம்பிக்கையையும் பெற்றது.

கிருஷ்ணஸ்வாமி ஐயர், 1898-ஆம் வருஷம் நடந்த காங்கிரஸில், மாகாணக் கவர்னர் சபையில் ஓர் இந்தியருக்கேனும் இடம் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசினார்.

அவர் பிரசங்கம் செய்யும் பொழுது, வேகமாயும் வார்த்தைகளில் உணர்ச்சியுடனும் பேசத் தொடங்கினார். அவருடைய வாக்குச் சாதுரியத்தையும கம்பீரமான குரலையும் அதற்குமுன் வட இந்தியாவிலுள்ள தலைவர்களில் பலர் கேட்டறியார்கள். அவருடைய பேச்சு அரை மணிநேரமே நடைபெற்றது. பரஞ்சபை என்ற வட இந்தியர் ஒருவரும் அவர் பேசியதை ஆமோதித்துப் பேசினார். கடைசியில், தீர்மானம் திருப்தியாகச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. காங்கிரஸில் கூடியவர்கள் சென்னை அறிஞரின் அரிய பேச்சை மெச்சினார்கள். அன்று முதற்கொண்டு காங்கிரஸ் தலைவர்களில் பலர் அவரிடம் தங்கள் ஆலோசனைகளை அவ்வப்பொழுது தெரிவிக்கவும் தொடங்கினார்கள்.

மற்ற எல்லாவற்றையும் விட இந்திய ஊழியர் சங்கத்தை முதல் முதலில் ஸ்தாபிதம் செய்வதற்குக் கோகலே மேற்கொண்ட சிரத்தையும், அதில் கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு உண்டான தாராள உள்ளமும் சிலாகிக்கத் தக்கவை. அவ்விருவர்களின் நட்பு ஒரு விதமான சிறுமை இல்லாமலும் இடையூறின்றியும் வளரத் தொடங்கியதற்கு, இந்திய ஊழியர் சங்கத்தின்பால் இருவருக்கும் இருந்த பேரார்வமே காரணம் என்றால் அது பொய்யாகாது.

கோகலேயும் அவருடைய நண்பர்களும் மார்லியிடமிருந்து நன்மை பயக்கும் காரியங்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில், திலகர் கோஷ்டி காங்கிரஸில் வலுத்துக்கொண்டே வந்தது.

சூரத் காங்கிரஸ், காங்கிரஸ் சரித்திரத்திலேயே பெயர் போனது. அதில் நடந்த சண்டையும் பிரிவுமே பல காலம் காங்கிரஸ் ஒற்றுமையைச் சீர்குலையச் செய்தன. டாக்டர் ராஷ்பிகாரி கோஷை அக்கிராசனம் வகிக்கக் கேட்டுக்கொள்ளும் பிரசங்கத்தைச் சிலர் கேட்க வொட்டாமல் செய்தார்கள். பாபு சுரேந்திரநாத் பானர்ஜியின் தொனியையே கேட்க விடாமல் செய்யவேண்டுமானால் ஜனங்கள் போட்ட சப்தம் எவ்வளவு அதிகம் என்பதை ஊகித்துக்கொள்ளலாம். காங்கிரஸ் கூட்டத்தை மறு நாளைக்கு ஒத்திப் போட்டார்கள். பாபு சுரேந்திரநாத் பானர்ஜி மறுநாள் தம் பேச்சை முடித்ததும், அவரை ஆமோதித்த பண்டித மோதிலால் நேருவும் தம் சிறிய பிரசங்கத்தைப் பேசி முடித்தார். டாக்டர் ராஷ்பிகாரி கோஷ் நாற்காலியில் அமர்ந்தவுடன், முதலில் நிறைவேறிய தீர்மானத்தில் சிறு மாறுதலைத் தாம் கொண்டு வருவதாகப் பேசி,

சில வார்த்தைகள் சொல்லத் தமக்கு அவகாசம் வேண்டுமென்றார் பாலகங்காதர திலகர். நிறைவேறிய தீர்மானத்தை மறுபடியும் கலைப்பது சரியன்று என்று வாக்குவாதம் கிளம்பியது. திலகர் பிடிவாதக்காரர்; ஒன்றையும் கவனியாமல் பேசத்தொடங்கிவிட்டார். யார் கேட்டாலும் கேட்காவிட்டாலும் பேசிவிடுவது என்று மேடையில் ஏறினார் அவர். உடனே ஜனங்களில் சிலர், 'வேண்டாம்' என்று கூவினார்கள். திலகரைச் சேர்ந்த சிலர் தடிகளைக் கையில் எடுத்துவிட்டார்கள். பெரிய குழப்பம் உண்டாயிற்று பந்தலில். அறுந்த செருப்புகளில் ஒன்று மேதாவின் மீதும், ஒன்று பாபு சுரேந்திரநாதரின் முதுகிலும் விழுந்தன. பலருக்கு இன்னது செய்வதென்று புரியவில்லை. சிலர் மேடையிலிருந்து வேகமாய்க் கீழே இறங்கினார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயர் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழாமல் உரக்க அதிகாரம் செய்யத் தொடங்கிவிட்டார். ஆனாலும் அன்று காங்கரஸ் பந்தலில் ஏற்பட்ட அமர்க்களம் அடங்கவில்லை. கூட்டத்தைக் கலைக்க அக்கிராஸனர் உத்தரவிட்டு விட்டு உடனே எழுந்து பல பிரமுகர்களுடன் வெளியே சென்றார். சூரத்தில் கலகம் ஏற்பட்ட பின், ஒரு சிறு பகுதியாகக் காங்கிரஸைக் கூட்டும்படி கிருஷ்ணஸ்வாமி ஐயரே யோசனை சொன்னார். கோகலேயிடமே முதலில் அதை அவர் சொன்னார். அவரும் கேட்டவுடன் சந்தோஷமடைந்தார். கோகலே, டாக்டர் ராஷ்பிகாரி கோஷிடம் இந்த யோசனையை உடனே தெரிவித்தார். அவரும் சந்தோஷம் பொங்கி, கிருஷ்ணஸ்வாமி ஐயரைக் கட்டியணைத்தார். அன்று நடந்த அமர்க்களங்களுக்கு அப்பால் தன் 6-மணிக்கு ஸர் பிரோஸ்ஷா மேதாவின் விடுதியில் ஒரு சிறு கூட்டம் கூடியது. அதில் கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஒரு தீர்மானத்தைப்பற்றிப் பேசினார். எதையாவது செய்து வழி பிறக்கச் செய்வதுதான் நம்முடைய கடமை என்றும், இன்றில்லாமல் மற்றொரு நாளைக்கு என்று தள்ளிப் போட்டுவிட்டு அவரவர்கள் வீடு திரும்புவதென்பது, நினைக்க முடியாத அவமானம் என்றும் கேட்டவர்கள் மனத்தில் பதிய வைத்தார். அவரை அநுசரித்து, பாபு சுரேந்திரநாதர் பேசினார்.

மிதவாதிகளில் முக்கியமான 900 பேர்கள் கையொப்பமிட்டு ஓர் அறிக்கையைப் பிரசுரித்தார்கள். 23-ஆவது காங்கிரஸ் நடைபெறாமல் போய்விட்டதால் அங்கத்தினர்களில் சிறுபான்மையோரையாவது 'கன்வென்ஷன்' கக்கூட்ட, பெரியோர்கள் தீர்மானித்தார்கள்.

'மறு வருஷம் சென்னையில் காங்கிரஸை நடத்தியே தீருவேன்' என்று கிருஷ்ணஸ்வாமி ஐயர் கொடுத்த வாக்குத்தத்தம் வீண் போகவில்லை. வேறு யாராயிருந்தாலும் சங்கடங்கள் பல உண்டானபோது, 'எதற்கு நமக்கு இத்தனை தொல்லை?'' என்று சளைத்திருப்பார்கள். அவருடைய உண்மையான சிரத்தையேதான் எதிர்ப்புக்களையும் விரோதங்களையும் சுலபமாகத் தாண்டச் செய்தது.

அலாகாபாதில் 'கன்வென்ஷன்' கூடிக் காங்கிரஸுக்கு ஒரு சட்டத்தைத் தயார் செய்தது. 1908

ஆம் வருஷம் ஏப்ரல், 18, 19-ஆம் தேதிகளில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. கோகலேயின் கையெழுத்தில் உள்ள குறிப்புக்களை வைத்துக்கொண்டு தான் விதிகளையும், காங்கிரஸ் சட்டத்தையும் அப்பொழுது தயாரித்தார்கள்.

அர்பத்நட் பாங்கு என்பது சுமார் நூறு வருஷங்களாகப் பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்திருந்தது. சென்னையில் பெரிய தொரு பாங்காக வெகு காலமாய் ஜனங்களின் ஆதரவைப் பெற்றும் வந்தது. அதன் முக்கியமான பங்காளிகளில் ஒருவராகிய ஸர் ஜார்ஜ் அர்பத்நட் என்பவர் மிகுந்த செல்வாக்குப் படைத்தவர். சென்னையில் கவர்னருக்கு அடுத்த படியாகப் பொது ஜனங்கள் அவருக்கு மரியாதைகளைச் செய்வார்கள். அவருடைய சொற்பொழிவுகளைப் பல முறை மேடைகளில் கேட்டவர்கள் உண்டு. சென்னைச் சட்ட சபையில் அரசாங்கத்தாரால் அங்கத்தினராக நியமிக்கப்பட்டவர்களிலும் ஒருவராக இவர் இருந்தார்.

1906-ஆம் ஆண்டு அக்டோபர் 20-ஆம் தேதி சென்னையில் 'அர்பத்நட் பாங்கு' மூடப்பட்டது. பெரியவர்களும் சிறியவர்களும் கோடீசுவரர்களும் சாமான்ய அந்தஸ்துள்ளவர்களும் தாங்கள் சேமித்த சொத்தையெல்லாம் அந்தப் பாங்கில் தான் போட்டிருந்தார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயருக்குச் சொந்தத்தில் பணம் ஒன்றும் 'அர்பத்நட் பாங்'கில் இல்லை. ஆனால் 'சுதேசி நிதி'யின் தொகையில் சிறிது அங்கேதான் வைக்கப்பட்டிருந்தது. பாங்கு மூடும் தினத்தன்றுகூட 2000 - ரூபாயைச் 'சுதேச நிதி'க்காக அதில் கட்டியிருந்த விவரம் பிற்பாடு வெளியாகியது. சுதேச நிதியின் காரியதரிசியாக அந்தக் காலத்தில் கிருஷ்ணஸ்வாமி ஐயர் இருந்தார்.

சீமையில் பாங்கின் கிளைக் காரியாலயம் ஒன்று இருந்தது. அங்கே பங்காளியாக இருந்த மிஸ்டர் மாக்பாடியன் என்பவர் திடீரென்று தற்கொலை செய்து கொண்ட செய்தி சென்னைக்கு எட்டியது.

சீமைப் பங்காளி இறந்ததனால் பாங்கினுடைய சீமை சம்பந்தமான முழுச் சமாசாரமும் தெரிவதற்கு முடியாமல் போய்விட்டது. வேறு சில வதந்திகளும் ஊரில் பரவின.

அர்பத்நட் பாங்கைத் 'திவாலானது' என்று தீர்மானிக்கக் கோர்ட்டில் மனுவும் பாங்கு அதிகாரிகளே கொடுத்திருந்தார்கள். கோர்ட்டும் அன்றைத் தினமே பாங்கின் நிர்வாகத்தை, அதாவது அங்குள்ள பணத்தொகைகள், கணக்குப் புஸ்தகங்கள் எல்லாவற்றையும் கவனமாய்ப் பாதுகாக்க அவைகளை 'அஃபீஷியல் அஸைனி'யிடம் கொடுக்கும்படி பாங்கு அதிகாரிகளுக்கு உத்தரவு இட்டது.

தம் சொந்தப் பொறுப்பில் ஸர் ஜார்ஜ் அர்பத்நட் ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளில் பிரசுரித்தார். தம் பாங்கின் விவகாரங்களை ஒருவிதமாகச் சீர் பெறச் செய்ய ஏற்பாடு செய்வதாக அதில் கண்டிருந்தது. புதிதாக ஒரு கடையைச் சொந்தத்தில் ஆரம்பிக்கும் உத்தேசத்தையும் வெளியிட்டார்.

இதற்குள் கணக்குப் புஸ்தகங்களைப் 'அஃபீஷியல் அஸைனி'

பரிசோதித்ததிலிருந்து பாங்கு முழுகியதன் காரணங்களில் சில வெளிப்பட்டன. சீமைக் காரியாலயத்தில் முதல் பங்காளியான மாக்பாடியன் தம்மிடம் இருந்த தொகையில் ஒரு சிறிதும் வியாபாரத்துக்கென்று முதலாகக் கடையில் போடவில்லையாம். 1871-ஆம் ஆண்டில் ஸர் ஜார்ஜும் கடையில் ஒரு பங்காளியானார்; அவரும் ஒரு சல்லிக் காசைக்கூட முதலாகக் கடையில் போடவில்லையாம். சீமையில வைத்த கடை சென்னைக் கடைக்குப் பிறகே ஏற்பட்டது. 1877-ஆம் ஆண்டில் சென்னையிலிருந்து எடுத்துச்சென்ற பொருளை உபயோகித்தே சீமைக் கடையை ஆரம்பித்த விவரம் பலருக்கு இப்பொழுதுதான் வெளியாகியது. பாங்கின் வரவு மொத்தம் ரூ. 277½ லக்ஷம் என்றும், கையில் அச்சமயம் உள்ளது ரூ. 76 லக்ஷமே என்றும் ஏற்பட்டது. மூன்று மாதங்களுக்குமேல் ஆகி விட்டன, அர்பத்நட் பாங்கு முழுகி. 'இன்சால்வென்சி' கோர்ட்டில் மஞ்சள் காகிதத்தைத் தயாரித்து நீட்டியும் ஆகிவிட்டது. விசாரணைக்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. இவைகளின் அநாவசியமான கால தாமதத்தையும் விசாரணையின் அவசியத்தையும் கிருஷ்ணசாமி ஐயர் உணர்ந்தார்.

ஸர் ஜார்ஜ் ஜனங்களுக்குச் செய்த தீங்கு சாமான்யமன்று; அவர் ஒரு 'கிரிமினல்' குற்றவாளி என்று தண்டிக்கப்படுவதற்கு வேண்டிய அநுமானங்களைக் கோர்ட்டுக்குத் தெரிவித்தால், குற்ற விசாரணைக்கு அவசியம் அவரை அனுப்புவார்கள். அந்தக் காலங்களில் வக்கீலாகச் 'சன்னது' பெற்றவர்கள் 'இன்சால்வென்ஸி நடவடிக்கையில் ஆஜராவது சட்டரீதியாக முடியாது; பாரிஸ்டர்களால் மட்டுமே சாத்தியம். ஆகையால் 'சுதேச நிதி'யின் நிர்வாகஸ்தர்களில் தாமும் ஒருவரென்ற உரிமையிலும், பணம் போட்டவர்களின் வேண்டுகோளின் பேரிலும் கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஆஜரானார்.

ஜட்ஜ் மணி ஐயரின் முன்னிலையில் 1907-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 25-ஆம் தேதிமுதல் விசாரணை தொடங்கியது. நேப்பியர் என்னும் ஆங்கிலேயர் அர்பத்நட்டின் பக்கம் ஆஜரானார். கோர்ட்டில் போட்டுக்கொள்ளும் வக்கீல் மேலங்கியைக் களைந்துவிட்டுச் சொந்த உரிமையில் வாதாடும் சாமானியனைப் போல் விசாரணையைத் தொடங்கினார் கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

சாமான்ய அந்தஸ்தில் இல்லாத பிரபலரான ஸர் ஜார்ஜ் அர்பத்நட்டை விசாரணை செய்யப் போகிறார்கள் என்று கூறவே, நீதிஸ்தலத்தில் எள்ளுப் போட்டால் விழாதபடி ஜனங்கள் கூடினார்கள்.

இரண்டு வாரங்களுக்குக் குறையாமல் விசாரணை நடைபெற்றது. கோர்ட்டில் விசாரணை நடந்தபொழுது ஊரிலுள்ள பத்திரிகைகள் சுருக்கு விசாரணையின் தோரணையை மிகவும் சிலாகித்தன. எங்கும் ஜனங்களுக்குத் திருப்தி. விசாரணையை நேரில் கண்ட சில புத்திமான்கள் சொன்னதாவது: "மணி ஐயர் ஜட்ஜாகவும், ஸர் ஜார்ஜ் அர்பத்நட் போன்றவர் சாட்சிக்கூண்டில் ஏறும்போது குறுக்குக் கேள்விகளைப் போட வி. கிருஷ்ணஸ்வாமி லாயராகவும் இனிக் கிடைப்பார்களா?" என்

ரூர்கள். கடைசியில் தீர்ப்பும் நியாயப்படி மணி ஐயர் வழங்கினார்.

அர்பத்நட் குற்றவாளியே என்று தீர்மானித்து அவரை ஸெஷன்ஸுக்கு அனுப்பினார். அங்கே பிரதம நீதிபதி அர்னலட் வைட், அவருக்குப் பதினெட்டு மாதம் சிறைத்தண்டனை விதித்தார்.

அர்பத்நட் குற்றவாளியென ஏற்பட்டால் போதும் என்று என் தந்தை சும்மா இருந்து விடவில்லை. பணம் நஷ்டப்பட்ட ஜனங்களுக்கும், இனித் தங்கள் சம்பாத்தியங்களை எங்கே சேர்த்து வைப்பது என்று தவித்தவர்களுக்கும் தம்மால் நிலைக்கக் கூடிய ஒரு பாங்கு ஸ்தாபனத்தைப் பலருடைய சகாயத்தின் பேரில், நிர்வகிக்கும் பொறுப்பைப் பலரும் சேர்ந்து பங்கிட்டுக்கொள்ளும் வகையில் ஒரு லிமிடெட் கம்பெனியாகச் செய்ய முற்பட்டார்.

'இந்தியன் பாங்கு லிமிடெட்' என்ற சிறந்த பாங்கை ஏற்படுத்த, செட்டி நாட்டுப் பிரமுகர்களில் திவான் பஹதூர் ச.ர.ம.ம. ராமஸ்வாமி செட்டியாரையும் தம்முடன் சேர்த்துக்கொண்டார். 1907-ஆம் வருஷம் மார்ச்சு 5-ஆம் தேதியில் இந்தியன் பாங்கை ரிஜிஸ்டர் செய்தார்கள்.

1906-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் முதல் தேதியில் தொடங்கியது சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலை. என் தந்தையும், ராவ்பகதூர் ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயரும், ஏ. எஸ். பாலசுப்பிரமணிய ஐயரும் தர்ம நிர்வாகக் கழகத்தின் முதல் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டார்கள். முதலில் மூலதனமாக 25,000 - ரூபாயைக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் தர்ம நிர்வாகஸ்தர்களிடம் சேர்ப்பித்தார். அவரைக் குருவாக மதித்த சி. பி. ராமஸ்வாமி ஐயர் தாமும் அந்த மூலதனத்துடன் சேர்த்து ரூபாய் ஐயாயிரம் கொடுக்கச் சம்மதித்தார். ஸம்ஸ்கிருத கலாசாலை நோக்கங்களில் சாஸ்திரப் பயிற்சி மட்டுமே குறிக்கப்படாமல், ஆராய்ச்சி முறைகள், மற்றும் பண்டித சபைகளை வைப்பது, அதில் பிரகாசித்தவர்களுக்குச் சம்மானங்கள் வழங்குவது போன்ற இந்தத் தேசத்துப் புராதன வழக்கங்களைச் செய்வதற்கு வேண்டிய சௌகரியங்களும் குறிக்கப்பட்டிருந்தன. மூலதனத்துடன் கலாசாலைக்கு இட வசதிக்காக இன்னும் ரூபாய் 20,000 கொண்டதைகையைப் பின்னும் அவர் கொடுத்து உதவினார். மேலும் காலஞ் சென்ற எஸ். ஏ. சுவாமிநாத சாஸ்திரிகளுடைய மனப்பூர்வமான கொடையாகிய ரூபாய் 15 000 சேர்ந்து மொத்தம் ரூபாய் 65 000 மூலதனம் வைக்கப்பட்டு ஆரம்பமாகியது கலாசாலை. பிறகு இடம் வாங்குவதற்கான தொகை முதலிய செலவுகளைத் தம்முடைய சொந்தப் பொறுப்பாகவும் அவர் கருதியதால், அன்று வைத்த மூலதனம் குறைவுபடாமல் விருத்தி அடைய முடிந்தது. "ஸ்ரீ சுவாமிநாத சாஸ்திரி வேதாந்த பாடசாலை" என்று எஸ். ஏ. சுவாமிநாத சாஸ்திரிகளின் பெயரை முன்னிட்டே வழங்கலாயிற்று, அந்தத் தர்ம பாடசாலை.

மேல் நாடுகளில் அநேக நாட்கள் தங்கி, ஹிந்து தர்மத்தையும் சமய வழிபாடு முதலியவைகளையும் பிற நாட்டார் உள்ளங்களில், தம்

வாக்கின் வன்மையினால் நன்கு பதிய வைத்து 1896-ஆம் வருஷம் சொந்த ஊர் திரும்பிய விவேகானந்த சுவாமிகளுக்கு, முதல் முதல் வரவேற்பு உபசாரங்களைச் செய்தது சென்னை மாகாணமே. தாம் வருவதற்கு முன்பே சில அரிய நண்பர்களிடம், சந்நியாசிகளுக்கு உரிய ஓர் இல்லத்தைச் சென்னையில் ஸ்தாபிக்க வேண்டுமென்று தமக்குள்ள விருப்பத்தை அவர் தெரிவித்திருந்தார். அதை 1896-ஆம் வருஷம் டிசம்பர் 16-ஆம் தேதி கூடிய சென்னைப் பிரமுகர்களின் முன்பு, புகழ் பெற்றவரும் மயிலாப்பூர்வாசியுமான டாக்டர் எம். சி. நஞ்சுண்டராவ் தெரிவித்தார். அவ்விதமான ஏற்பாடுகளில் மிகவும் உத்ஸாகத்துடன் சேர்ந்து உழைத்தவர்களில் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் ஒருவர். 1897-ஆம் வருஷம் பிப்ரவரி 7-ஆம் தேதி சுவாமிகள் சென்னையில் வந்திறங்கியதும், அவரை நேரில் உபசரிக்க முன்னால் மணி ஐயரும், அவருடைய நிழல் வழி நின்ற இளங்கன்றுகளில் ஒருவராகக் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் விளங்கினார்கள். சுவாமிகள் அன்று செய்த சொற்பொழிவில் அப்படியே மயங்கிப் போனவர்களுக்குக் கணக்கே இல்லை.

ராமகிருஷ்ணானந்தர் என்னும் பெயருடன் விளங்கியவரும் பரமஹம்ஸருடைய சிஷ்யர்களில் முக்கியமானவருமான ஒரு பெரியாரை, சென்னையில் ராமகிருஷ்ண மடம் ஒன்று நிறுவ வேண்டும் என்னும் கருத்துடைய சுவாமி விவேகானந்தர், தாம் கல்கத்தா சென்றதும் சென்னைக்கு அனுப்பியிருந்தார். அவர் 'ஐஸ் ஹௌஸி'ல் ஏழு எட்டு வருஷங்கள் வாசம் செய்து, தம்மை அணுகும் இளைஞருக்கும் முதியவருக்கும் பல அரிய ஹிந்து தர்ம ரகஸ்யங்களைப் புகட்டியும், ஈசுவர பஜனைகளைச் செய்தும் பெரும் மதப்பற்றை உண்டாக்கிக்கொண்டிருந்தார். ஆனால் விவேகானந்தர் மறுபடியும் பட்டணம் வந்து தாம் மேற்கொண்ட காரியத்தை நிலைக்குப்படி செய்வதற்கு முன்பே காலமானார். அவர் சாயுஜ்யம் அடைந்தபின் நடந்த ஒரு பொதுஜனக் கூட்டத்தில், "சுவாமிகளின் உள்ளத்துக்கு மிகவும் உவப்பான காரியம், சந்நியாசிகளுக்கு இருப்பிடமான ஒரு மடத்தை எழுப்புவது. அப்படிச் செய்தால்தான் அவருடைய அரிய ஞாபகத்தை நாம் போற்றியவர்கள் ஆவோம்" என்னும் கருத்தைக் கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஒரு தீர்மானத்தின் மூலம் அங்கே கூடிய ஜனங்களுக்குத் தெரிவித்தார்.

1907-ஆம் வருஷம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை மயிலாப்பூரில் பிராடீஸ் ரோடில் ஒரு சிறிய வீடுதியாகக் கட்டுவதற்குப் போதுமான தனத்தை வைத்துக் கொண்டு கட்டி முடித்தார்கள். பரமஹம்ஸருடைய முக்கிய சீடர்களாகிய சுவாமி ராமகிருஷ்ணானந்தரும், சுவாமி பிரம்மானந்தரும் மயிலாப்பூரில் மடத்தை 1907-இல் ஆரம்பித்து வைத்தார்கள்.

கிருஷ்ணஸ்வாமி ஐயர் சூரத் காங்கிரஸ் பிரிவின்போது திடமிதவாதிகளில் ஒருவராக விளங்கினார். திலகர் கோஷ்டியைச் சேர்ந்தவர்களில் காலஞ்சென்ற ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரும் ஒருவர். மறு வருஷம்

நாடெங்கும் பல பல கட்சிகள் தோன்றி அரசியல் காரியங்களில் சச்சரவுகளைப் பெரிது படுத்திவிட்டன. பாரதியார் 'இந்தியா' என்னும் தமிழ் வாரப் பத்திரிகை நடத்தியதனால், தம் அபிப்பிராயங்களை மறைக்காமல் காரசாரமாக எழுதத் துணிந்தார். நாட்டுக்கும் மக்களுக்கும் மிதவாதிகள், விரோதிகள் என்பது பாரதியாருடைய நம்பிக்கை.

அவ்விதக் கிளர்ச்சிகள் நாடெங்கும் மலிந்து கிடந்த காலம் 1907-ஆம் வருஷம். அந்த நாளில் கட்சி விரோதங்களினால் பலர் ஒருவரை ஒருவர் பழிக்காமல் இருப்பது அரிதாயிற்று.

பாரதியாரும் கிருஷ்ணஸ்வாமி ஐயரும் நேரில் ஒருவரை ஒருவர் அதற்கு முன் கண்டு அறிமுகமானவர்கள் அல்ல. தனிகர்களின் சகவாசத்தைத் தாமாக நாடும் இயல்பு இல்லாதவர் பாரதியார். ஆதலால் அந்த இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளாதது வியப்புக்குரிய விஷயமன்று.

பாரதியார் தம் பாட்டுக்களைத் தேச பக்தியின் பெருக்கினால் எழுதி எழுதிப் பார்த்துவிட்டு, முக்கியமான சில நண்பர்களிடையே மாத்திரம் தாமே அவைகளைப் பாடிச் சந்தோஷப்படுத்தி வந்தார். அவைகளை நூலாக வெளியிடப் பாரதியாருக்கு ஆசை. ஆனால் பணத்துக்கு எங்கே போவது? ஒருநாள் தம் சிநேகிதரான ஜி. ஏ. நடேசனிடம் பல படியாகத் தம் சிரமத்தைச் சொல்லிக்கொண்டாராம். வறண்ட நெஞ்சுக்கு நீரோடை இருக்கும் இடத்தைச் சுட்டிக் காட்டும் சுபாவம் படைத்தவர் நடேசன். "உங்களுக்கு இருக்கும் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள வழி இருக்கிறது. பணத்தை இந்தமாதிரி விஷயங்களுக்குக் கொடுக்கக் கூடியவர், ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரே. வேண்டுமானால் உங்களை நான் அவரிடம் இன்றே அழைத்துச் செல்லுகிறேன்'' என்றார்.

அதற்குப் பாரதியார் சட்டென்று, "வேண்டாம், வேண்டாம். கிருஷ்ணஸ்வாமி ஐயரிடம் யார் போவது? அவர்தான் சதா என்னைப்பற்றிக் கோபத்துடன் பேசுகிறாராமே! எனக்கு அவரிடம் செல்ல இஷ்டமில்லை'' என்று மறுத்துவிட்டார்.

ஆனால் ஸ்ரீமான் நடேசன் சளைப்பவரா? அவர் மீண்டும், "உங்களுக்கு அவரைத் தெரியாது. இப்படித்தான் கோபிப்பார் முதலில்; ஆனால் அவருடைய இருதயம் இளகியது; நல்ல காரியங்களைக் கண்டால் பசும்புல்லைக் காணும் பசுவின் மனத்தை ஒத்தது. உங்கள் பாட்டை அநுபவித்தாரானால், தகுந்த உபகாரம் செய்யாமல் இருக்க மாட்டார்'' என்று திரும்பத் திரும்ப வற்புறுத்தினர். பாரதியாரும், "சரி, வருகிறேன்; ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில்தான். நீங்கள் என்னை மாத்திரம் இன்னானென்று அவருக்குத் தெரியப்படுத்தவேண்டாம். இது முக்கியம்'' என்று கேட்டுக்கொண்டார். நடேசனும் ஒப்புக்கொண்டு நண்பரைப் பார்க்கப் பாரதியாருடன் புறப்பட்டார்.

சாயங்கால வேளை; வக்கீல் அவர்கள் கோர்ட்டு அலுவல்களை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்ததும், பங்களாவின் முன்னால் உள்ள திறந்த வெளியில் போட்டிருந்த சாய்வு நாற்காலி ஒன்றில் சாய்ந்துகொண்டு சிநேகிதர்களுடன் சல்லா

பம் செய்யும் சமயம். அன்று சற்று இருட்டியும் விட்டது. நடேசன், நண்பர் என்ற முறையில் எப்பொழுது வேண்டுமானாலும் அவரைப் பார்க்க வருவார். வரும் பொழுதெல்லாம் ஏதாவது தர்பார் நடத்தும் கோலமாகவே காட்சி அளிப்பார் நண்பரும். யாராவது ஒருவர் பாடியும் அல்லது பெரிய விஷயங்களைப்பற்றிப் பேசியும் தர்க்கம் செய்துகொண்டும் இருப்பது வழக்கம். அழைத்து வந்தவரை, "இவர் யார்?" என்று கிருஷ்ணஸ்வாமி ஐயர் கேட்கவே, நடேசன், "இவர் ஒரு தமிழ்க் கவிஞர்; சில பாட்டுக்களை இயற்றியிருக்கிறார். உங்களுக்குத்தான் தமிழ்ப் பைத்தியமாயிற்றே! நிச்சயம் கேட்பீர்கள் என்று தைரியம் சொல்லி இவரை என்னுடன் அழைத்து வந்தேன்" என்றார் சிரித்துக்கொண்டே.

அவர் கேட்கத் தயாராக இருக்கும் பாவனையில் தோன்றுவதை அறிந்து நடேசன் சுப்பிரமணிய பாரதியாரைப் பாடச் சொன்னார். பாரதியார் பாட ஆரம்பித்தார். முதலில், 'வந்தே மாதரம்' என்ற பாட்டை நாதநாமக்கிரியையில் தாயுமானவருடைய 'ஆனந்தக் களிப்பு' மெட்டில் பாடினார். அவர் குரல் கணீரென்று இருந்தது; உள்ளத்தின் உணர்ச்சி, பாட்டிலும் கலந்து பெருகியது.

ஆயிரம் உண்டிங்கு ஜாதி—இதில்
அந்நியர் வந்து புகலென்ன
நீதி?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—
தம்முட்
சண்டைசெய் தாலும் சகோதர
ரன்றோ?

என்ற அடிகளை அவர் பாடும் பொழுது, கிருஷ்ணஸ்வாமி ஐயர் சாய்ந்திருந்தவர் எழுந்து உட்கார்ந்தார். பாரதியாரின் தேசாபிமானத்தைக் கண்டு பிரமித்துவிட்டார். அடுத்தபடியாகக் காம்போஜி ராகத்தில், 'தாய் நாட்டு வணக்க'மும் கடைசியில் பூபாளத்தில், 'எங்கள் நாடு' என்னும் பாட்டும் பாடிப் பாரதியார் முடித்தார். மனம் எங்கெல்லாமோ சென்றுவிட்டது, ரஸித்த கிருஷ்ணஸ்வாமி ஐயருக்கு. தாய் நாட்டின் பெருமையிலும் தமிழ்ப் பண்பின் சௌரவத்திலும் ஈடுபட்டது அவரது உள்ளம். மறு நிமிஷமே அவர், "இவ்வளவு அழகான பாட்டுக்களை ஏன் நீர் ஊறப் போட்டு வைத்துக்கொண்டிருக்கிறீர்? நாடெங்கும் பள்ளிகளிலும், பெண்களுக்குச் சங்கீதம் சொல்லி வைக்கும் தனிகர்களிடையிலும், இவைகளைப் பரவச் செய்ய வேண்டாமா? ஏன் சும்மா இருக்கிறீர்?" என்றார்.

காத்திருந்த நடேசனும், "அதற்காகவே இங்கே உங்களைக் காண வந்திருக்கிறார் இவர். இவருக்கு மிகவும் சிரமதசை; ஆகையால், நீங்கள் உதவி செய்தால் சௌகரியமாக இருக்கும், குறித்த காரியங்களுக்கெல்லாம்" என்று சொன்னார்.

"அதற்கென்ன தடை? இதோ உங்களுக்கு நூறு ரூபாயையும், இந்த மூன்று பாட்டுக்களை அச்சிட்டு இனமாகக் கொடுப்பதற்கு என்ன செலவு ஆகுமோ அதையும் தரும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளத் தயார். உங்கள் பெயர் என்ன?" என்றார்.

பாரதியாருக்கு அப்பொழுது தான் மிக்க கவலை ஏற்பட்டது. நடேசனை அவர் பார்த்தார். அவரும் சிரிப்புடன், "இவர்தான் தாங்கள் அடிக்கடி 'இந்தியா'

பத்திரிகையில் வாசிக்கும் கட்டுரைகளின் ஆசிரியர் பாரதியார். நேரில் உங்களிடம் பரிசயம் செய்துகொள்ளச் சங்கோசப்பட்டதனால் நான் அழைத்து வந்தேன்'' என்றார். உடனே அந்தச் சிமானும், ''தாங்கள்தான் சுப்பிரமணிய பாரதியாரா? என்ன உயர்ந்த தேசாபிமானம் தங்களிடம் தெரிகிறது! இது தெரியாமல் தங்களை வெறும் வெறிபிடித்து அலையும் தீவிரவாதிகளில் ஒருவராக அல்லவா இதுவரை நினைத்திருந்தேன்? இன்றே என் எண்ணம் தவறு என்று ஏற்பட்டது; சந்தோஷம்'' என்று கம்பீரமாயும் பூரண அன்புடனும் பாரதியாரைப் புகழ்ந்தார்.

பாரதியார் அன்று கிருஷ்ணஸ்வாமி ஐயரின் உண்மை இருதயத்தையும் களங்கமற்ற ரஸிகத் தன்மையையும் அறிந்துகொண்டார். அன்று அவர் பாடிய பாட்டுக்களைப் பதினாயிரம் பிரதிகளுக்குமேல் அழகிய காகிதத்தில் அச்சிட்டு நாடெங்கும் பள்ளிக்கூடங்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் அனுப்பினார் கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

ஜி. ஏ. வைத்தியராமன் என்பவர் 'தமிழின் பெருமை' என்ற உபந்நியாஸத்தைக் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் தலைமையின் கீழ்ப் பிறகு ஒருநாள் புரிந்தார். முடிவில் அக்கிராஸனர் சொற்பொழிவில் சொன்ன வார்த்தைகளே பளிச்சென்று பாரதியார் காதில் ஒலிக்கத் தொடங்கின. மாதங்கள் சில கடந்த பின்பும் ஆர்வம் நிறைந்த அந்தச் சொற்கள் மனத்தில் திரும்பவும் பரவத் தொடங்கின. ஆம், அன்று கிருஷ்ணஸ்வாமி ஐயர் சொன்ன வார்த்தைகள், அவருக்குத் தாய் நாட்டின்பால் இருந்த பற்றின் பெருமிதத்தையும் உணர்ச்சி வேகத்தையும் வெளியாக்கின:

"தமிழில் எத்தனை நூல்கள் இருக்கின்றன! திருவள்ளுவர் திருக்குறள் செய்த பாஷை இது; கம்பன் ராமாயணம் இயற்றிய பாஷை; நாயன்மார் தேவாரம் பாடிய பாஷை; மாணிக்க வாசகர் திருவாசகம் அருளிய பாஷை; ஆழ்வார்கள் திவ்வியப் பிரபந்தம் பெற்றதும் இந்தப் பாஷையே தான்'' [டாக்டர் உ. வே. சாமிநாத ஐயருடைய 'நினைவு மஞ்சரி'யில் இந்தப் பேச்சைக் காணலாம்]

இதைக் கேட்டவர்களில் பாரதியாரும் ஒருவர். உள்ளக் கிளர்ச்சி பெற்ற மகான் ஆனதால், இந்த வார்த்தைகளே பிற்பாடு அரிய உணர்ச்சி ஊட்டும் சிறந்த அடிகளாக இன்னோசையுடன் இருதயத்தில் குமிழியிட்டன.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே' என்று தொடங்கும் அந்தப் பாட்டைக் கேட்டு அதில் தம்முடைய கருத்து அமைந்திருப்பதை அறிந்து கிருஷ்ணஸ்வாமி ஐயர் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

1908-டிசம்பர் பத்தாம் தேதி மார்லி பிரபு வெளியிட இருந்த சட்டச் சீர்திருத்த அறிக்கையை எல்லாரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால், தேசத்தில் தீவிரவாதிகளின் கிளர்ச்சிகள் அரசியல் சீர்திருத்தத்துக்கு ஏதோ தடை செய்து வந்ததாகக் கோகலே நினைக்க ஆரம்பித்தார். மார்லியின் அறிக்கை வெளிவருவதற்குள் ஏதாவது புதிய கிளர்ச்சி ஒன்று

நாட்டில் ஏற்பட்டுவிட்டால் அது தாமதமாகி விடுமே என்ற பயமே இதற்குக் காரணம்.

சென்னையில் 1908-ஆம் வருஷம் காங்கிரஸ் கூடுவதற்குத் தகுந்த பெரிய கூடாரத் துணிகளைக் கவர்னர் ஸர் ஆர்தர் லாலியிடமே கேட்டு, இரவலாக வாங்கினார் கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

ஆனால் வீட்டில், தனயனார் க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டு, படுத்த படுக்கையாய்க் கிடந்த சமயம் அது. சந்நியாச ஆசிரமம் பெற்று டிசம்பர் 21-ஆம் தேதி அவர் இறந்ததால், சமாதி செய்விக்கப் பெரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருந்தது.

வீட்டில் பண்டித மதனமோகன மாளவியாஜி ஒரு மாத காலமாய் விருந்தினராயிருந்தார். அவர் தூய்மையான குணம் படைத்தவர். காங்கிரஸுக்காகச் சீக்கிரமே அவர் சென்னைக்கு வந்துவிட்டார். அவரைத் தம் கிருகத்தில் இருக்கும்படி கிருஷ்ணஸ்வாமி ஐயர் வற்புறுத்தியதால் அவர் சிறிது காலம் என் தந்தையுடன் நெருங்கிப் பழக நேர்ந்தது.

காங்கிரஸ் கூட்டத்துக்கு டாக்டர் ராஷ்பிகாரி கோஷையே தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். அவரும், சூரத்தில் வாசித்துப் பூர்த்தியாகாத தம் அக்கிராஸனப் பிரசங்கத்தைச் சென்னையில் செய்து முடித்தார்.

இனைத்தவிதம் காங்கிரஸில் ஒருவிதக் கிளர்ச்சியும் ஏற்படவில்லை. எல்லாம் கெடுபிடியில் நடந்தேறின. ஒருவரும் மூச்சு விடக் கூட முடியாதபடி ஏற்பாடுகளைச் செய்திருந்தார் தலைவர். வேடிக்கை பார்க்க வந்தவர்கள் அதிகப் பணம் கொடுத்தே டிக்கெட் வாங்கவேண்டி வந்ததால் வீண் கூட்டமே பந்தலில் இல்லை. 'ஒரு தனி மனிதனுடைய காங்கிரஸ்' என்ற அபவாதங்கூட ஊரில் ஒரு பக்கம் கிளம்பியது.

மிதவாதிகள் நிறையக் கூடி இருந்த இடத்தில் வேறு எதை எதிர்பார்க்கக்கூடும்? எல்லோரும் மார்லி செய்ய உத்தேசித்திருந்த நன்மையைப்பற்றி முழு விவரங்களையும் அறிவதற்கு முன்னமேயே, பாராட்டிப் பிரசங்கங்கள் செய்தார்கள். கோக்லே மறுபடியும் பெரியதொரு சொற்பொழிவில் இந்திய நாடு சட்ட முறையான இயக்கத்தினால் பற்பல நன்மைகளை அடையலாம் என்பதை ஞாபகப்படுத்தினார். தீவிரவாதிகளின் செயல்களைக் கண்டனமும் செய்தார். அந்தக் காங்கிரஸ் சுறுசுறுப்பாய் மூன்று நாளில் முடிவடைந்தது.

பிறகு மிண்டோ - மார்லி அரசியல் சீர்திருத்தம் வெளியாயிற்று. அகில இந்திய அரசாங்க நிர்வாக சபையில் ராஜப்பிரதிநிதியின் உதவிக்கு ஓர் இந்தியரை நியமிக்க முதல் முதலாக அது இடம் தந்தது. அவ்விதம் ஏற்பட்ட இடத்துக்கு ஸத்தியேந்திரப் பிரஸன்ன ஸின்ஹா என்னும் கனவானை அரசாங்கத்தார் நியமித்தார்கள். பெரிய லாயர் அவர்; பணக்காரர்; சீமைப் பழக்கம் அதிகமுள்ளவர்.

கிருஷ்ணஸ்வாமி ஐயரின் திருப்திக்கு அளவேயில்லை. தாமும் பொதுஜனங்களைக் கண்டு அதிகம் பேசிப் பழக வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார். அரசாங்கத்தாருக்கு அடிக்கடி முறை இடுவதைவிட ஜனங்களை ஒன்றுபடுத்திச் சுயராஜ்யப் போரை நடத்த

வேண்டுமென்ற ஞானம் அவரிடம் சிறிது உதயமாகி இருந்தது. ஆனால், சந்தர்ப்பப் போக்கால் அவருடைய ஆசை நிறைவேற வழியில்லாது போயிற்று.

1909-ஆம் வருஷம் செப்டம்பரில் என் தாய் உயிர் நீத்தாள். எங்கள் குடும்பத்தில் எல்லாரும் மிகச் சிறுவர்கள். "யாரை இனிக் குழந்தைகளைக் கவனிக்கச் சொல்வது? பெரியவர்களே இல்லையே!" என்று தந்தையார் மனத்தினுள் ஏக்கம் கொண்டிருந்த சமயம் அது. அந்த வருஷம் அக்டோபர் மாதம் ஹைகோர்ட் ஜட்ஜ் பதவி ஒன்றை ஒப்புக்கொள்ளும்படி கவர்னர் அவருக்கு எழுதிக் கேட்டார். மணி ஐயர், "அதிகாரிகளாகப் பார்த்துக் கொடுத்த பதவியை ஒப்புக்கொள்வதுதான் அழகு" என்று சொன்னார். கிருஷ்ணஸ்வாமி ஐயர், நீதிபதி பதவியை ஒப்புக்கொண்டுவிட்டார். அன்று முதல் அவருடைய காங்கிரஸ் தொடர்பு முடிவடைந்தது. அவர் ஜட்ஜாக இருந்த காலம் 15 மாதங்களே; அந்த 15 மாதங்களுக்குள் உயர்தரமான தீர்ப்புகள் 120-க்குக் குறையாமல் செய்திருப்பார்.

1910-ஆம் வருஷம் டிசம்பர் மாதமே, ஸர் ஆர்தர் லாலி, அவரைக் கவர்னர் நிர்வாக சபையில் ஓர் அங்கத்தினராக இருக்கும்படி கேட்கத் தொடங்கிவிட்டார். அவரும் அதற்கு இணங்கவே, 1911-ஆம் வருஷம் ஜனவரியில் 16-ஆம் தேதியுடன் ஜட்ஜ் பதவியை விட்டு நீங்கிப் புதிய பதவியை ஏற்க நேர்ந்தது.

ஆங்கிலேயருக்குரிய மரியாதைகள் சம்பந்தமான தொந்தரவு, உத்தியோகம் பார்க்க ஆரம்பித்தவுடனேயே ஏற்பட்டது. கிருஷ்ணஸ்வாமி ஐயர் கவர்னருக்கு அடுத்த உத்தியோகஸ்தராயிருந்தும், தமக்குக் கீழ் வேலை பார்த்த கவர்ன்மெண்ட் பிரதமக் காரியதரிசியிடம் சின்ன மரியாதைகளைக் காட்டத் தவறினார். தலைமைக் காரியதரிசியான மிஸ்டர் ஹாரோல்ட் ஸ்டுவர்ட்டு என்பவர், தனிமையில் நிர்வாக சபை இந்திய அங்கத்தினரான என் தந்தைக்கு ஒரு தகவல் அனுப்பினார்:

"தாங்கள் 'தயவு செய்து' என்பதுபோன்ற மொழிகளை உபயோகிக்காமல் எழுதி வைப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். தங்களுக்கு யாரிடம் தங்கள் குறிப்புக்கள் முதலில் செல்லுகின்றனவென்பது தெரியாது போலும்; தலைமைக் காரியதரிசிக்காவது, அல்லது மற்ற இலாகா முக்கியக் காரியதரிசிகளுக்காவது அவை செல்லுகின்றன."

மன்னிக்க முடியாத குற்றந்தான்! அதற்குப் பதில் பின் வருமாறு:

"சட்டென்று விஷயத்தைச் சொல்லுவதை விட்டுச் சுற்றிச் சொல்லும் சம்பிரதாயம் ஒரே காரியாலயத்தில் உள்ளவர்களிடையே அவசியம் என்பதை இதுவரையில் நான் அறியாதது பிசகுதான். இனி இதை அநுசரிக்கிறேன். என் கீழ் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்கு மனம் கோணும்படி எதையும் நான் செய்ய இஷ்டப்படவில்லை."

ஹாரோல்ட் ஸ்டுவர்ட் சற்றுப் பொல்லாதவர். 'என் கீழ் வேலை பார்க்கும்' என்று எழுதியதில் உள்ள உட்கருத்து அவருக்குப் புரியாமல் இல்லை. அடிக்கடி அந்த இருவருக்

குள்ளும் சிக்கல்கள் ஏற்பட்டன. ஒரு சமயம் காலதாமதமான காரணத்தைக் குறித்துக் கடுமையாக ஸ்டுவர்ட்டைக் கேள்விகள் கேட்க நேர்ந்தது. பிரதம காரியதரிசியும் கிருஷ்ணஸ்வாமி ஐயரின் மன்னிப்பை யாசிக்கும்படியாகி விட்டது.

ஜார்ஜ் மன்னரின் டில்லி தர்பார் நடைபெறுவது டிசம்பர் 12-ஆம் தேதி என்று ஒரு வருஷத்துக்கு முந்தியே தீர்மானம் ஆகியிருந்தது. ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் கவர்னர்களும் கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினர்களும் நீதிபதிகளும் சட்டசபைக் காரிய நிர்வாகிகளும் அந்த மாபெரும் கொண்டாட்டத்துக்கு வரவழைக்கப்பட்டார்கள். கிருஷ்ணஸ்வாமி ஐயரும் அதற்கு விஜயம் செய்ய வேண்டியிருந்தது.

டிசம்பர் மூன்றாம் தேதி சென்னபட்டணம் விட்டு டில்லிக்குக் கிளம்ப வேண்டிய நாள் வந்தது. கிருஷ்ணஸ்வாமி ஐயர் தம்முடன் மாப்பிள்ளை நாராயணஸ்வாமி ஐயரை அழைத்துச் செல்வதாக இருந்தார். ஆனால் அவர் அசௌக்கியமாகப்படுத்தவிட்டதால், தம்பி சந்திரசேகர ஐயரைத் தம்முடன் அவருக்குப் பதிலாக அழைத்துச் சென்றார்.

டிசம்பர் 9-ஆம் தேதி கிருஷ்ணஸ்வாமி ஐயரின் தொடையில் ஒரு சிறு சிரங்கு உண்டாகி இருந்தது. கொஞ்சம் ஜுரமும் தெரிந்தது. அவரால் அன்று தர்பார் ஒத்திகைக்குப் போக முடியவில்லை.

என் தந்தையாரின் உடம்பு வர வர அதிகம் நோய்வாய்ப் பட்டு விட்டது. டிசம்பர் 13-ஆம் தேதி டில்லியைவிட்டுப் புறப்பட்டு விட்டார். சென்னைக்கு வந்ததும், ரெயில் வண்டியை விட்டு ஊன்றுகோலைப் பிடித்து என் தந்தை இறங்கும் காட்சியைப் பார்க்கச் சகியாமல் அங்கே காத்திருந்த சி. பி. ராமஸ்வாமி ஐயர், தம் கையைக் கொடுத்து அவருக்கு உதவ முன் வந்தார். நீட்டிய கையை மறுத்து விட்டு, வியாதிஸ்தர் சிரமத்துடனே நடந்து வந்து தம் காரில் ஏறிக்கொண்டார்.

இரண்டு நாட்களில் ஜுரம் சற்றுத் தணிந்த மாதிரி தோன்றவும் குணமடைவதாக எண்ணினார்கள் குடும்பத்தார். ஆனால் டாக்டர்களில் கிளாரென்ஸ் ஸ்மித் என்பவரும், மேஜர் கிப்பர்ட் என்பவரும் ரணத்தைக் கீறுவதுதான் சரியான சிகிச்சை என்றார்கள்.

23-ஆம் தேதி ரண சிகிச்சை செய்வது என்று தீர்மானமாகியது. ஆபரேஷன் செய்வதற்குமுன் பங்களாவின் பெரிய ஹாலின் நடுவில் கட்டிலொன்றில் அவரைப் படுக்க வைத்தார்கள். குழந்தைகள் எல்லோரையும் அவர் பார்க்கவேண்டுமென்றார். எல்லோரும் சுற்றி நின்றுகொண்டு மௌனமாக இருந்தோம்.

நோயாளிக்குப் பலக் குறைவால் 'கோமா' வரத் தொடங்கியது. வார்த்தைகளிலும் தெளிவு குறைய ஆரம்பித்தது. அவருடைய விக்கலும், மயக்கமும் பீதியை உண்டாக்கின. வயசில் பெரியவர்கள் ஆபத் சந்நியாசம் கொடுப்பதைப் பற்றி மெதுவாகப் பேசலானார்கள். மூத்த மகள் பாலசுந்தரி அதைக் கேட்டுக் கீழே விழுந்தாள். மற்றச் சகோதரிகள் திடுக்கிட்டுப் போய் அழத் தொடங்கினார்கள்.

23-ஆம் தேதி அன்று சிரங்கைக் கீறி 'ஆபரேஷன்' செய்

தார்கள். ஆனால் தேக ஸ்திதியில் தெரிந்த சிறிது குணம் அதி சீக்கிரத்தில் மாறிவிட்டது. ஞாபகப் பிசகு ஏற்பட்டு நாடியும் தளர்ந்தது. உடம்பில் சிலவிதத் துடிப்புகளும் காணப்பட்டன. விக்கல் வேறு விடாமல் தொந்தரவு கொடுத்தது.

டிசம்பர் 27-ஆம் தேதி காலையிலிருந்து இரவுக்குள் நிலைமை பின்னும் கலவரத்தை உண்டு பண்ணியது. அன்றிரவு ஒரு மணிக்கு அப்பால் சுவாசம் வாங்கத் தொடங்கியது. ஆவி உடலை விட்டு நீங்கிவிட்டது.

துக்கம் தாங்கமுடியாமல் வாய்விட்டுக் கதறிய அறிவாளிகளும் அன்று சவத்தைச் சுற்றி நின்ற கூட்டத்தில் உண்டு. சென்னைக் கவர்னர் ஒருவித முன் தகவலும் இன்றி வந்து நண்பருக்குத் தம் கடைசியான விடையளிப்பைத் தந்தார். தலையைத் தொங்கவிட்டு மௌனமாய்ச் சிறிது நேரம் நின்றவர், என் சிறிய தகப்பனாரைத் தனிமையில் அழைத்துஆவி நீங்கிய உடலை ராஜவிருதுகளுடன் அடக்கம் செய்ய அரசாங்கத்தார் ஏற்றுக் கொள்வது கடமை என்று தெரிவித்தார். "எங்கள் ஆசாரம் அவைகளை ஒப்புக்கொள்ளாதே! என்ன செய்வது!" என்று சிறிய தந்தை சொல்லவும், அவர் மெதுவாகக் குனிந்த தலையை நிமிர்த்தாமலேயே நடந்து வண்டியில் எறிச் சென்றார்.

மயானத்தில் கூடிய கூட்டமும், வழியில் பார்க்க வந்த ஜனங்களும் அதிகமே. வயோதிகரான மணி ஐயர், உயிர் நீங்கிய உடலை மயானத்தில் சிதையில் வைத்தவுடன், "ஐயோ, எனக்குத் தீயிட வேண்டிய மகன் போன்றவன் இறந்தும், நான் அவனுக்குக் கொள்ளிவைக்கும் கோலத்தைக் கண்ணால் காண வேண்டுமா!" என்று வாய்விட்டு உருகினார். தகவல் கேட்டுச் சங்கரன் நாயர் ஓடோடியும் வந்தார்; மயானத்தில் தான் நண்பரின் உடலைப் பார்த்தார்.

ஊரில் துக்கம் சூழ்ந்தது; வீட்டில் சூனியம் குடிகொண்டது.

கலைமகளின் கடாட்சம் பூர்ணமாய்க் கலந்த பாக்கிய தேவதையின் ஆசரவில் வளர்ந்தார் கிருஷ்ணஸ்வாமி ஐயர். பணமும் பதவிகளும் அவரைச் சீக்கிரமே வந்தடைந்தன. ஆனால் அவர் உள்ளம் நாடியவை மூன்றே: நட்பு, கொடை, வைராக்கியம். உழைப்பில் ஊக்கமும், ஒழுக்கத்தில் உத்ஸாகமும் அவரிடம் இரு புயங்கள் போல் பரிணமித்தன.

நாளைக்குச் செய்யவேண்டிய வேலையை இன்று செய்துவிட வேண்டும். மாலையில் செய்ய வேண்டியதைக் காலையில் செய்ய வேண்டும்.

—மகாபாரதம்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

நாஸ்திகரைத் திருப்பும் வழி

நாஸ்திகரை எப்படிக் கடவுளிடமும் சமயத்திலும் நம்பிக்கை கொள்ளும்படி திருப்புவது?

அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. கடவுளின் உண்மையான பக்தன், தன் தூய்மை, நன்னடத்தை இவைகளால் நாஸ்திகனைத் திருப்பிவிடலாம்; தர்க்கத்தினால், ஒருபோதும் அவனைத் திருப்ப முடியாது.

கடவுள் உண்டு என்பதை நிரூபணம் செய்ய, எண்ணற்ற நூல்கள் இருக்கின்றன. அத்தனை இருந்தும், நாஸ்திகம் அதிகரித்துக்கொண்டேதான் இருக்கிறது. ஆனால் தன்னை நாஸ்திகன் என்று சொல்லிக்கொள்ளும் மனிதன், பெரும்பாலும் உண்மையில் நாஸ்திகனாக இருப்பதில்லை; ஆஸ்திகரிலும் அநேகர் ஆஸ்திகராக இருக்கவில்லை. ஒரு கௌரவமென்று அதைக் கருதியோ அல்லது உலகத்தை ஏமாற்றவோதான், அநேகர் கடவுளை வணங்குகிறார்கள். அவர்களுக்கு எப்படி நாஸ்திகர்கள்மீது செல்வாக்கு ஏற்பட முடியும்?

தான் கடவுளுக்கு உண்மையாய் நடந்துகொண்டால், தன் அண்டை அயலார் தம்மிச்சையாகவே நாஸ்திகத்தை விட்டுவிடுவார்கள் என்று ஆஸ்திகன் உணரவேண்டும். முழு உலகத்தையும்பற்றி அவன் தொல்லைப்பட வேண்டாம்.

கடவுள் இடங் கொடுத்திருப்பதாலேயே நாஸ்திகரும் உலகத்தில் இருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். பெயரளவில் கடவுளை வணங்குவோர் ஆஸ்திகர் அல்ல; கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவோரே ஆஸ்திகர்.

—மகாத்மா காந்தி

July '53 Regd. No. M. 4975

மஞ்சரி

விஜய - ஆடி

ஊரும் உலகமும் 1
பெர்முடா சந்திப்பு .. .. ந்யூஸ் வீக் 3
ஸினிமா உலகில் புரட்சி .. .. டைம் 6
நீந்தும் முறை .. .. யுவர் ஹெல்த் 14
பாபு ராவ் பதில் சொல்லுகிறர் .. .. ஃபில்மிண்டியா 17
ரமணர்: வாழ்வும் வாக்கும் 18
அணுக்குண்டில் ஹிட்லர் தோல்வி 21
ராணி ஏமாந்தாள் .. .. பிரஜாமத 27
பெண்களின் மனநோய் .. .. பிரக்ருதி 29
விலங்குகள் வேகம் .. .. .. அமிர்த பஜார் பத்திரிகா 32
என்னைக் கேளுங்கள் .. காப்டன் என். சேஷாத்திரிநாதன் 37
நாகர் கிளர்ச்சி மர்மம் .. .. பம்பாய் க்ரானிக்கின் வீக்லி 40
வராக அவதாரம் 44
எதையும் விற்க யந்திரம் .. .. ஃப்ரீ இந்தியா 47
மூளைக் கடிகாரம் .. .. திஸ் வீக் 51
'அதிசய உலக' ஆசிரியர் 53
வீடு எப்படி? .. .. சங்கர்ஸ் வீக்லி 58
கார்ட்டூன் கதம்பம் 62
புதிய உலக அமைப்பு .. .. ரா. ஸ்ரீ. தேசிகன் 64
கிந்துருவப் பெண் .. .. ஸ்ரீலங்கா 69
பாழடைந்த ஊர் (சிறு கதை) வி. ஸ. காண்டேகர்-கா. ஸ்ரீ. ஸ்ரீ. 70
வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் (புத்தகச் சுருக்கம்) கி. சந்திரசேகரன் 73
நாஸ்திகரைத் திருப்பும் வழி மகாத்மா காந்தி (3-ஆம் அட்டை)